மனுவல் ஜேசுதாசன்
மணிவிழா மலர்



19-05-2008

மனுவல் ஜேசுதாசன்

மணிவிழா

அட்லாந்தா மண்டபம்

19-05-2008

மணிவிழாக் குழு



மலர்ப் பந்தர் வாயிலில் ... .

நண்பர் மனுவல் ஜேசுதாசன் அவர்களுக்கு மணிவிழா நடத்த வேண்டும் என்ற முயற்சியில் முன்னின்றவர்கள் அது பற்றி என்னிடம் கூறியதும் நானும் அக்குழுவில் கட்டாயம் இடம்பெற வேண்டுமென்ற ஆர்வமேலீட்டால் அக்குழுவில் விருப்புடன் இணைந்து கொண்டேன். என்னிடம் மலர்ப் பொறுப்பு உடனடியாக ஒப்படைக்கப்பட்டது. இம்மலருக்குரிய ஆக்கங்கள் பெறப்படவேண்டியவர்களின் பெயர்கள் மணிவிழாக் குழு அமர்வில் தீர்மானிக்கப்பட்டு என்னிடம் அப்பெயர்கள் தரப்பட்டன.

இம்மலருக்குரிய ஆக்கங்களைத் தருவோர்களைத் தொலைபேசியில் அழைத்து ஜேசுதாசன் அவர்களுக்கு மணிவிழா நடத்தப்படவுள்ளமை குறித்தும், அதன் நினைவாக மணிவிழா மலர் வெளியிடப்படவுள்ளமை பற்றியும் கூறியபோது அனைவரும் உளப் பூரிப்புடன் கட்டுரை - கவிதை என்பன எழுத ஒப்பபுக்கொண்டதோடு மட்டுமன்றி, குறிப்பிட்ட திகதிக்கிடையில் தமது ஆக்கங்களை அனுப்பி வைத்தமை வியப்பாக இருந்தது. ஜேசுதாசனின் உறவினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்றுக் கொள்வதில் மொனிக்கா ஜேசுதாசன் அவர்கள் பேருதவியாக இருந்தார்கள்.

இவர்கள் அனைவரும் திரு ஜேசுதாசன் பற்றித் தாமும் எழுத வேண்டும் என்ற துடிப்புடன் எழுத முற்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மனுவல் ஜேசுதாசன் அவர்கள் எல்லோரிடமும் பண்போடும் அன்போடும் பழகும் தன்மையினாலே அவர் எல்லோராலும் புகழ்ந்து பேசப்படும் நிலையை அடைந்துள்ளார். இதனையே வள்ளுவர்,

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (திருக்குறள் 991) என்ற குறட்பாவில் விதந்துரைத்தார்.

இம் மலரிலே இடம்பெறும் ஆக்கங்கள் மனுவல் ஜேசுதாசன் அவர்களின் வாழ்க்கைத் தடங்கள், அவரது சீரிய குணாம்சங்கள், அவர் கனேடியத் தமிழ்ச் சமூகத்தவருக்கு ஆற்றிவரும் சேவைகள் என்பனவற்றை அறியத் தருகின்றன. இந்நாட்டிலே வாழும் தமிழ்ச் சான்றோர்கள் எமது சமூகத்தினரையும் தாயக மக்களையும் நேசிப்பவர்கள் என்ற செய்தியை இம்மலரினூடாக நாம் அறியக் கூடியதாக உள்ளது. `இன்னான்

ஒருவன் இனிதே சமூகத்திற்கு நல்லோனாக வாழ்ந்தான்' என்ற பொதுமொழியை ஒருவன் பெறும்போது அவன் எல்லோராலும் போற்றப்படும் நிலையை அடைகின்றான்.

வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. (திருக்குறள் 595)

மிகக் குறுகிய காலத்தில் இம்மலரைச் சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டுதவிய ஜேஜே பிரிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கு மலர்க் குழுவின் சார்பில் நன்றி உரித்தாகுக.

கலாநிதி இ. பாலசுந்தரம்
மணிவிழா மலர் ஆசிரியர்.

அருந்தேன் நண்பர்

கவிஞர் வி. கந்தவனம்.

மனுவல் ஜேசு தாசனுயிர்
மனைவி மாசில் மொனிக்காவின்
மனம்விட் டகலா வாசர்மதி
வல்ல புதல்விகள் பாசமலர்.

சட்டத் தொழிலுக் கணியானார்
தருமம் வளர்க்கும் பணியானார்
தட்டிக் கேட்கத் தயங்காதார்
சற்றும் புகழ்ச்சிக்கு மயங்காதார்.

மானம் மனுவல் தனிச்சொத்து
மதிக்கும் நண்பர் மலர்க்கொத்து
வானம் வறண்டு போனாலும்
வற்றா வளக்கரக் கோனாரே.

பொதுப்பணி யாளர் போய்க் கேட்டால்
பூத்திடும் இவர்முகம் புதுமலர்போல்
மதிப்புடன் இனியவை மொழிந்திடுவார்
வந்தவர் மகிழ்ந்திட வழங்கிடுவார்.

அழகிய சிரிப்பால் வென்றிடுவார்
அசையாது நேர்வழி நின்றிடுவார்
பழகுதற் கினிய தயவாளர்
பக்குவப் பண்பாட்டுச் செயலாளர்.

நாட்டுக் கூத்தில் வல்லாளர்
நாமகள் போற்றும் சொல்லாளர்
நாட்டித் திறமை பழுத்தகதை
நாவல்கள் படைத்திடும் எழுத்தாளர்.

நயக்க நாவல் **தொண்ணூறு**
நாட்களுள் என்பதை முதல்தந்தார்
வியக்கும் வயது பதினாறில்
வித்துவக் கதைகள் படைத்தளித்தார்.

சந்திரன் தோன்றும் வானழகு
தாமரை பூக்கும் குளமழகு
மந்திர மனுவல் உளநீதி
மன்றமும் அழகே வாழியவே!

விருந்தோம் பலிலே வேளாளர்
விவிலிய மந்திர வாழ்வாளர்
அருந்தேன் நண்பர் மனுவலுக்கும்
அகவை அறுபதோ வாழியவே!

வல்லவர் நீடு வாழியவே
வாழிய மனைவி பிள்ளைகளும்
பல்கலைக் கழகம் வாழியவே
பைந்தமிழ் இல்லறம் வாழியவே!

வி.கந்தவனம்

ஒரு நொடியில் புன்னகை
அதன் அர்த்தம் என்றென்றும் நினைவில்...

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல் ஒன்று:

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என்சிற்றூர் என்போனுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்!

புரட்சிக் கவிஞர் மனித உள்ளத்தினை இரண்டு வகையினதாக வகுக்கிறார். நம்மில் பெருவாரியானோர் முதல் வகையறா. தான் உண்டு, தன் குடும்பம் உண்டு தன் பெண்டு பிள்ளை, சம்பாத்தியம், வீடு என வாழ்ந்து அதில் இன்பம் காண்போர், அதுவே அவர்களது உலகம். அதன் எழுச்சியையே சாதனையாக எண்ணுவார்கள். இவர்களின் உள்ளத்தினைப் புரட்சிக்கவிஞர் கடுகு போன்ற உள்ளம் என்கிறார்.

எனது மகன் மணிமாறன் புற்று நோயினுக்கு ஆளாகி மறைந்த மாளாத் துயரில் நான் இருந்த காலம். அவன் கார்ல்ரன் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவருக்கு ஆற்றிய தொண்டின் பெறுமதியினை அவன் இறந்த பின்னரே தான் என்னால் முழுமையாக அறிய முடிந்தது. அவன் கார்ல்ரன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களுக்கு ஆற்றிய தொண்டினை நினைவு கூரக் கூடிய விதத்திலே அவன் நினைவாக ஏதாயினும் ஒன்றினைச் செய்ய வேண்டும் என்பது அவனது நண்பர்களின் அபிப்பிராயமாயிருந்தது. நாம் சேர்க்கும் நிதித்தொகையினை இரட்டிப்பதாக அவன் வேலை செய்த நிறுவனம் சொல்லியது. சேர்ந்த தொகையினுக்கு ஈடான தொகையாக அதே தொகையினை தாம் தரவுள்ளதாக அரசும் சொல்லிற்று. அதன் விளைவே கார்ல்ரன் பல்கலைக் கழகத்தின் 'மணிமாறன் புலமைப் பரிசில்', மற்றும் 'மணிமாறன் கல்வி உதவி நிதி'யத்தின் ஆரம்பம். சென்ற வருடம் மாத்திரமே இந்த நிதியத்தில் இருந்து நான்கு மாணவர்கள் $6480 பெற்றுள்ளார்கள் என்பது எனது மகனின் இழப்பு காலாகாலம் பல மாணவர்களுக்கு உதவவுள்ளதே என்ற மன நிறைவினைத் தருகிறது.

இந்த நிதியம் ஆரம்பித்த காலத்தில் எனக்கு திரு ஜேசுதாசனுடன் அத்தனை பரிச்சயம் இருந்ததில்லை. பொதுமேடைகள் சிலவற்றிலோ அல்லது சில வேளைகளிலோ அவரைச்

சந்தித்திருப்பேன். அவருடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கின்ற அந்த வழமையான புன்னகையுடன் ஓர் இரு வார்த்தைகள் மாத்திரம் அவ்வேகைளில் உதிரும். அவ்வளவே. 'A smile happens very quickly but the memory of it lasts for a long time' என்பார்கள். இன்று வரை என்னை அவர் காண்கின்ற போது மாத்திரமல்லாமல் தொலைபேசியில் நான் அழைக்கின்ற போதும் "வணக்கம் சேர், எப்படி இருக்கிறீர்கள்"; என அவர் வினயமாக வந்தனம் கூறி பதிலிறுக்கையில் அந்தப் புன்னகை மாத்திரமே என் கண்களுக்குத் தோன்றும்.

அவரது முதல் நாவலான "90 நாட்களுள்" வெளியீடு சில நாட்களில் நடைபெறவிருந்தது. கட்டாயமாக அதில் பங்குபற்றுமாறு என்னை அழைத்து அன்று மேடையிலேயே ஒரு பெரிய தொகையினை எனது மகன் நிதியத்துக்கு நன்கொடையாக வழங்கினார். அவர் தொடங்கி வைத்த நிதியம் அத்தனை பெரிய தொகையாகி இத்தனை மாணவர்களுக்கு ஆண்டாண்டு காலம் உதவுகிறதை எண்ணிப் பார்க்கையில், அந்த நல்ல உள்ளம் ஊன்றிய வித்துத்தான் முளைவிட்டு இன்று பெரிய ஒரு தருவாக வளர்ந்தோங்கியுள்ளது என என்னால் எண்ணாமல் இருக்க முடிவதில்லை.

இதுவரை "90 நாட்களுள்" எனும் நாவலையும் "16 வயதினிலே" எனும் சிறுகதைத் தொகுதி ஒன்றினையும் அவர் படைத்துள்ளார். அவரது "16 வயதினிலே" எனும் சிறுகதைத் தொகுதியினுக்கு நானே முன்னுரையும் எழுதி உள்ளேன். ஆனால் நான் என்றுமே அவரை எழுத்தாளர் எனக் கொள்வதற்கில்லை. எழுதுகோல் என்ற ஆயுதத்தினை அவர் எதற்காக எடுத்தார்? அவர் தொழில் முறை எழுத்தாளர் அல்ல ஒரு சமூக மருத்துவர், சமூகநோயினைத் தீர்க்க நன் மருந்தாகப், புற்றுநோய் போன்று நம்சமூகத்தினை ஊடறுத்துள்ள பல குறைபாடுகளை அறுத் தெறிவதற்காக ஆயுதமாகப் படைப்பிலக்கியத்தைக் காண்பவர்.
"16 வயதினிலே" என்ற சிறுகதைத் தொகுதியினிற்கு நான் எழுதிய முன்னுரையில் ஒரு பகுதியைத் தருகிறேன். அவரது எழுத்துப் பற்றிய எனது கணிப்பினை அது கூறுவதாக அமையும்,

"ஒரு காலத்தில் ஜதார்த்தமாகக் கதை எழுதிச் சாதனை புரிந்தவர் ஜெயகாந்தன். உங்களுக்குக் கதை எழுதுவதற்கான கரு எப்படிக் கிடைக்கிறது" என அவரிடம் கேட்டார்கள். "இங்கு கூலி வேலை செய்கிறவர்கள் மாலை நேரங்களில் வந்து ஆங்காங்கே நடை பெறுவதைச் சொல்வார்கள். அவற்றிலிருந்தே எனக்குக் கதைக்கான கரு கிடைக்கிறது" என்றார் ஜெயகாந்தன்.
திருவாளர் மனுவல் ஜேசுதாசன் பிரபலமான சட்டத் தரணி. கரு அவருக்கு எப்படிக் கிடைக்கிறது என்பது பற்றிச் சொல்ல

வேண்டுமா?. ஆனால் அது மட்டும் போதுமா? அதனை வாசகர் மனதில் பதியும் படி எடுத்துக் கூறுவதற்கு நிறையவே நிறையவே கற்பனை வளமும் வேண்டுமே.

நான் கீத் மில்லரை வாசிக்கவில்லை. ஆனால் அவர் சொன்னதாக நமது பெரும் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் " மகாராஜாவின் ரயில் வண்டி" என்ற சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் கூறியுள்ளார்." உண்மையான கதைகளை எழுத வேண்டாம், யாரும் நம்பமாட்டார்கள். உண்மைத் தன்மையான கதைகளை எழுதுங்கள்" என்றாராம் கீத் மில்லர். ஜேசுதாசன் கீத் மில்லரை வாசித்துள்ளார் போலத் தெரிகிறது. அளவோடு கற்பனையைக் கலந்துள்ளமையால் கதைகள் உண்மைத் தன்மை பெறுகின்றன. முழுதும் உண்மையானவையாக அமைந்தால் யார் நம்பப் போகிறார்கள்?

சமூகத்தின் அவலங்கள் தான் சட்டத்தரணிகளை வாழவைக்கின்றன என்பது உண்மையே. இன்று குற்றங்கள் இல்லாத சமூகம் ஒன்று இருக்குமாயின் அங்கு சட்டம் எதற்கு, அதனை நிலை நாட்ட வழக்காடு மன்றங்கள் எதற்கு, நீதிக்காகப் போராடச் சட்டத்தரணிகள் எதற்கு? சமுதாய நோக்குடையவர்கள் அதனையே தம் கனவு இலட்சியமாகக் கொண்டுள்ளனர். அதில் நமது ஜேசுதாசனும் ஒருவராக உள்ளதில் நான் பெருமை கொள்கிறேன்.

எதனையும் தீர்க்கமாகச் சிந்தித்துச் செய்கிறார். ஆர்ப்பாட்டமில்லாது செய்கிறார். அதீத கவனத்துடன் செய்கிறார். எண்ணித் துணிந்து செய்கிறார். ஆகவே சமூகத்தின் பார்வையிலும் சட்டத் துறையிலும் உயர்ந்து நிற்கிறார்.

நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது.

உறுதியான உள்ளம், ஆர்ப்பாட்ட மற்ற அடக்க உணர்வு கொண்ட ஒருவரின் உயர்வு மலையை விடச் சிறந்தது. கடந்த 10 வருடங்களாக அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். ''நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'' என்பது எல்லோர் வாயிலும் வரும் சொற்றொடர். அதனையே தான் நானும் குறிப்பிட்டு அவர்களின் குடும்பத்தின் தரத்தினை சாமான்யமானதாக்க விரும்பவில்லை. இவர் எடுக்கும் அத்தனை நற்காரியங்களிலும் முழு அர்ப்பணிப்புடன் பங்கேற்று அதன் முழுமையான வெற்றிக்குக் காரணமாக அமைபவர் மொனிக்கா ஜேசுதாசன் எனும் அற்புத ஜீவன். ஜேசுதாசனுடைய சிரமங்கள் அத்தனையிலும் பெரும் பகுதியினை இவர் ஏற்பதால் தான் அவரால் என்றும் மலர்ந்த முகத்தினனாய் கவலை அற்ற ஜீவனாக சமூகத்தில் உலாவர முடிகிறது. அவரது கள்ளங்கபடமற்ற கலீர்ச் சிரிப்பு எவரையும்

வசப்படுத்தும் தன்மையது. பேச்சில் குழந்தைத்தனம் சேர்ந்த பவ்வியமான பேச்சு அனைவரையும் ஆகர்சிக்கக் கூடியது.

ஜேசுதாசனது உயர்வில் இவரின் பங்கினை அல்லது பாங்கினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

அடுத்து, அவரது மூன்று பெண்குழந்தைகள். மூவருமே, பார்வைக்கு எளியோராய், பண்பிலே உயர்ந்தோராய், பக்குவம் நிறைந்தோராய் வளர்க்கப் பட்டுள்ளனர். கல்வியுடன், கலைத்துறையிலும் அதிக நாட்டம் உடையவர்கள். பரத நாட்டியம் கற்று அரங்கேறியவர்கள். மேற்கத்திய இசை மற்றும் நமது திரைப்பட இசையிலும் ஞானம் உடையவர்கள். இளையவர் வாய்ப்பாட்டினில் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்களிடம் கர்நாடக இசையினில் சிட்சை பெறுகிறார். தமிழ் இசைக் கலாமன்றம் நடத்திய பரீட்சைகளில் விசேட திறமை காட்டியுள்ளார். சுத்தமன குரல் வளமும் ஈடுபாடும் உள்ளமையால் அக்கலையில் கைதேர்ந்தவராக அவரால் வரமுடியம்.

ஜேசுதாசன் மிகச் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். அக்கலையினை அவர் தனது தந்தையாரிடம் இருந்து பெற்றுள்ளார். ரொறன்ரோவின் பல மேடைகளில் நாட்டுக்கூத்தினை நடத்தியதோடல்லாமல் அது பற்றிய விளக்கவுரைகளையும் எடுத்துக் கூறி வருகிறார் மிக இதமாக நாட்டுக் கூத்துப் பாடல்களைப் பாடக்கூடிய திறன் கொண்ட அவர் திரைப்படப் பாடல்களையும் நன்கு பாடுவார். பிள்ளைகளுடைய இசை ஈடுபாட்டினிற்கு திருவாளர் ஜேசுதாசனும், திருமதி மொனிக்கா ஜேசுதாசனுமே காரணர் எனக் கருதலாம். பிள்ளைகள் மூவருமே வேறு வேறான மூன்று தொழில் துறைகளைச் தேர்ந்தெடுத்துள்ளனர். மூத்தவர் அஜந்தா மருத்துவத் துறையினையும், இரண்டாமவர் சட்டத்துறையினையும் மூன்றாமவர் கணக்கியல் துறையினையும் தேரந்தெடுத்துள்ளனர்.

விருந்தோம்பல் அக்குடும்பத்தினரின் தனிப் பண்புகளில் சிறப்புப் பெறுகிறது.

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. (குறள் 8- 89) என்கிறது குறள்.

எவ்வளவு தான் பொருள் நிறைந்த செல்வந்தர்களாக இருப்பினும் அவர்களுக்கு விருந்தோம்புகின்ற நற்பண்பு இல்லாவிட்டால் அவர்களை அறிவற்றவர்களாகவே கருத வேண்டும் என்கிறார் வள்ளுவர். அவர்கள் உண்மையில் செல்வந்தர்கள் அல்ல அவர்கள் தரித்திரம் பிடித்தவர்களே என்பது வள்ளுவன் வாய்மொழி.

திரு ஜேசுதாசனுடன் பழகியவர்கள், அவர்களது இல்லத்திற்குச் சென்றவர்கள் வள்ளுவர் குறளுக்கான அர்த்தத்தினை அனுபவ இரீதியாக அறிந்து கொள்வார்கள். நம்மில் சிலருக்கு ஒவ்வொரு ஆண்டும் புது வருடம் அவர்களது இல்லத்தில் தான் மலர்கிறது. பல சந்தர்பங்களிலே அவர் இல்லம் போனால் அடுத்த சில நாட்கள் எனக்கு உணவுப் பிரச்சினையே இருப்பதில்லை. மொனிக்கா ஜேசுதாசனின் மனது தாராளம். செயலில் அது பிரதிபலிக்கும்.

"**சொல்லடி சிவசக்தி - எனைச்**
சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ- இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்கிறார் பாரதி.

அறிவு பிறப்புடன் சேர்ந்து வருவது. அதனை வளர்க்க உதவுவது கல்வியும், பட்டறிவும். இதன் காரணமாக பொருள் சேர்க்கலாம். புகழ் சேர்க்கலாம். ஆனால் அந்த அறிவினைக் கொண்டு இந்த சமூகம் வாழ நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மனம் தான் முடிவு எடுக்கிறது. அந்த முடிவினால் மாநிலம் பயனுறுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு வேண்டிய மனதினைத் தந்து விடுமாறு தெய்வத்திடம் வரம் வேண்டி நிற்கிறான் பாரதி. அந்த வரத்தினை ஜேசுதாசன் பெற்றுள்ளார்.

பொ. கனகசபாபதி
முன்னாள் அதிபர் ~ மகாஜனக் கல்லூரி

மானுட நேயம் நிறைந்த மணிவிழா நாயகன் மனுவல் ஜேசுதாசன்

ஆண்டுகள் நகர்ந்துகொண்டே இருக்கின்றன. அதன் நகர்வில் இப்பூவுலகில் பிறந்தோர் அனைவரும் தம் வயது ஓட்டத்தில் தாம் வாழ்ந்தோம் என்பதற்கான சான்றுகளைத் தம் வாழ்க்கைத் தடங்களில் பதித்தல் மானுடம் சார்ந்த கடமையாகிறது. 'இன்னானொருவன் இப்படி வாழ்ந்தான்' என மானுடர் போற்றி நினைவு கொள்ளத்தக்க வாழ்வு பெற்றிட வேண்டும். 'இவனொருவன் செயற்கரியன செய்த பெரியோன்' என எல்லோராலும் பேசப்பட வேண்டும். அப்போதுதான் அம்மானுடனின் வயதையும் அவனது சேவையையும் சம காலத்தவரும் மற்றோரும் நினைத்துப் பார்க்கும் பக்குவத்தை அம் மனிதன் பெறுகின்றான்.

மனுவல் ஜேசுதாசன் அவர்கள் அறுபது ஆண்டு அகவை எய்திட்டாலும் அவர் சொல்லிலும் செயலிலும் துடிப்புடன் செயற்பட்டு வரும் ஒரு செயல்வீரன். 1996 இல் அவருடன் கொண்ட அறிமுகம் 12 ஆண்டுகளாக நீண்டுள்ளது. முதல் அறிமுகம், அவர் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் செயலாளராக இருந்து ஆறாவது பண்பாட்டு மகாநாடு சிறப்பாக நடைபெற உழைத்தபோது அவருடன் அம்மாநாட்டுச் செயற்குழுவில் இணைந்து செயற்படும் வாய்ப்புக் கிடைத்தது.

சட்டத்துறை: ஜேசுதாசன் அவர்கள் இலங்கை சட்டக் கல்லூரியிற் பயின்று, யாழ்ப்பாண நீதி மன்றத்தில் சில்லாண்டுகள் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். மேற்படிப்புக்காக இலண்டன் சென்று சட்டத்துறையில் புலமை பெற்று, 1981 இல் தென்னாபிரிக்காவில் சிசெல்ஸ் மாநிலத்தில் State Counsel ஆகக் கடமையாற்றினார். அங்கிருந்து 1986 இல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்த ஜேசுதாசன் கனடாவிலும் சட்டத்துறையில் கல்வியை மேற்கொண்டு தகுதியுள்ள குற்றவியல் சட்டத்துறை வழக்கறிஞராகக் கடமை ஆற்றிவருகின்றார். அவரது சேவையைப் பெற்றுக் கொண்டவர்கள் அவரை வாயார வாழ்த்தியதைப் பல தடவைகள் அறிந்திருக்கின்றேன். கண்ணியமாகவும் அன்பாகவும் தம் வாடிக்கையாளருடன் பழகும் சட்டத்தரணி ஜேசுதாசன் அவர்கள் கனேடியத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அரியதோர் சட்டத்துறை ஆலோசகராவார்.

பேச்சாற்றல்: பேச்சிலும் செயலிலும் அறம்பேணும் பெருந்தகையாளர். அவருக்குத் தொழில் சட்டம் உரைப்பதாக இருந்தாலும், அவர் இயற்கையாகவே பேச்சாற்றல் மிக்கவர் என்பதை அவரது மேடைப் பேச்சுகள் சான்று படுத்தும். ரொறன்ரோவில் பல மேடைகளிலே அவரது உரையைக் கேட்டிருக்கின்றேன். வழக்காடு மன்றத்தில் சட்டக் கோவையிலிருந்து

சான்று காட்டிப் பேசும் பழக்கத்தினாற் போலும் அவர் தமிழில் உரையாற்றும்போது எங்கிருந்தாலும் ஓர் ஆங்கில மேற்கோளை எடுத்துக் காட்டிப் பேசாது இறங்கியது கிடையாது. மிகத் தெளிவாகவும் அமைதியாகவும் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு உரையாற்றும்பாணி என்னை மிகவும் கவர்ந்த தொன்றாகும். இந்தவரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டியதாக C.T.B.C. வானொலியில் "மனுவல் ஜேசுதாசனுடன் மாதம் ஒருமுறை' என்ற தலைப்பில் நடத்தும் உரையாடல் நிகழ்ச்சி அமைகிறது. மிகத் துணிவுடன் வானொலி நிகழ்ச்சியூடாகப பல சமூக விடயங்களையும், மக்கள் எதிர்கொள்ளும் சட்டப் பிரச்சினைகளையும் பற்றி அவர் தமிழ்ச் சமூகத்திற்கு அறிவூட்டி வருகின்றார்.

எழுத்தாற்றல்: அவ்வப்போது தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகளில் அவர் எழுதும் கட்டுரைகள். சமூகக் கணணோட்டம் கொண்டவையாக அமைந்திருக்கும். சட்டத் தரணியாக இருப்பதால் சமூகத்தின் குறைபாடுகளை நன்கு அறிந்தவர். அதனால் சமூக மருத்துவன் எழுதுவது போன்று அவரது கட்டுரைகள் அமைந்திருத்தல் இயல்பாயிற்று.

ஆக்க இலக்கியத் திறன்: இளமைக்காலம் முதலாகக் கலை இலக்கிய ஆர்வம் கொண்டிருந்த அவரது கலை உள்ளம், அவரை ஆக்க இலக்கியத்துறையிலும் எழுத வைத்ததில் வியப்பில்லை. ஓர் இரசிகன் அல்லது கலைப்பிரியனுக்குத்தான் கற்பனை வளம் பெருக்கெடுத்தோடும். இயற்கையாகவே கற்பனை ஆற்றல் கொண்டிருந்த ஜேசுதாசனிடம் சமூகப் பிரக்ஞையும் இணைந்திருந்தது. தன் தொழில் மூலமாகக் கனேடியத் தமிழர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவலங்களையும் யதார்த்தமாக அறிந்துகொள்ளும் ஜேசுதாசன், அவற்றுக்குப் பரிகாரம் தேடும் சமூக மருத்துவனாக மாற வேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழரின் வாழ்வியல் அவலங்களில் மனதைப் பறிகொடுத்த அவருக்கு, அச்செயல்களுக்கு எழுத்துருவம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு வந்ததே புலம்பெயர் தமிழிலக்கியத்திற்கு ஆக்கம் அளிப்பதாயிற்று.

அவர் எழுதிய "90 நாட்களுள்' (1999) என்ற முதல் நாவலும் இரண்டாவது படைப்பாகிய "வயது பதினாறு' (2007) என்ற சிறுகதைத் தொகுப்பும் அவர் கனேடியத் தமிழரில் சீரழிந்தோரின் வாழ்வியலைக் களமாகவும் பின்னணியாகவும் கொண்டு, அநீதியையும், ஏமாற்றங்களையும் கண்டு சினந்தெழுந்து எழுதும் போக்கும், ஏனையோருக்கும் அக்கதிகள் வாராதிருக்கும் வகையில் அறிவுரை கூறும் நோக்கும் கொண்ட படைப்புக்களாகவே அவை அமைந்துள்ளன. இவரது படைப்புக்கள் பற்றி நா. சோமகாந்தன் அவர்கள் குறிப்பிடுவது போன்று, மனுவேல் ஜேசுதாசன் அவர்கள் இப்பொழுது சட்ட அறிவைப் பின்புலமாகக் கொண்டு தமிழ் இலக்கியத்தில் மற்றொரு பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சமூகத் தொண்டன்: கனேடியத் தமிழ் அறிஞர் குழு ஒன்றிணைந்து கடந்த இரு ஆண்டுகளாக தமிழ் வழக்குச் சொல் அகராதி ஒன்றினை ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது. மாதமொருமுறை அக்குழுவினர் கூடி, சொல்லாக்கத்தில் ஈடுபடுவர். துறைசார்ந்த அறிஞர்கள் தம் புலமைகளை ஆங்கு வெளிப்படுத்துவர். ஜேசுதாசன் அவர்களும் அக்குழுவில் சட்டத்துறை சார்பாக இடம்பெறுகிறார். குழு அமர்வுகளில் ஜேசுதாசனின் மொழி ஆளுமையை எம்மால் நன்கு இனங்காணக் கூடிதாக இருந்தது. அவரது நட்பான - அன்பான - இனிமையான - உணர்வுபூர்வமான குணங்கள் அனைத்தையும் நேரடியாகவே அறியக்கூடியதாக இருந்தது.

கனடாவில் வாழும் தமிழ் சட்டத்தரணிகளில் மிகப் பெரும்பாலோர் தமிழின அக்கறையுடனும் தாயகப் பற்றுடனும் செயற்பட்டுவருதல் மகிழ்ச்சியான செய்தியாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் மிகப் பொருத்தமாகும். ஜேசுதாசன் அவர்கள் கனடாவில் புலம்பெயர்ந்து, தன்தொழிலை நிலைபெறச் செய்த நாள் முதலாகச் சமூகப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றமையைக் குறிப்பிட வேண்டும். நீண்ட காலம் சேக்கம் அமைப்பின் செயலாளராகப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம் சென்ற். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் சேவை ஆற்றியவர். மற்றும் தமிழர் சமூக நலப்பணிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் ஜேசுதாசன் அவர்களும் அவற்றுடன் இணைந்து செயற்படும் பக்குவம் உடையவர். “கனடாத் தமிழ் இலக்கியத் தோட்டம்’ என்ற அமைப்புடனும் நெருங்கிய தொடர்புடையவர் என்பதையும் நாம் அறிவோம்.

சுனாமி அநர்த்தங்களுக்குப் பின்னர் அனைத்துலக மருத்துவநல மையத்தின் முக்கிய செயற்குழு உறுப்பினராக ஜேசுதாசன் அவர்கள் செயற்பட்டு வருவதையும், அது தொடர்பான செயற்பாடுகளையும் தொலைக்காட்சி, பத்திரிகை முதலான ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். இவரது, பன்முகப்பட்ட சேவைகளைக் கருத்திற் கொண்டு 2008 ஆம் ஆண்டு தமிழர் தகவல் இவருக்கு “பன்முகப் புலமை வித்தகர் விருது’ வழங்கிக் கௌவரவித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுக் கூத்துக் கலைஞன்: நாட்டுக்கூத்துக்குப் பெயர்பெற்ற யாழ்ப்பாணம் நாவாந்துறையில் புகழ் பூத்த நாட்டுக்கூத்து அண்ணாவியாராகத் திகழ்ந்தவர் மனுவல் ஆசீர்வாதம். அவரது மகன் ஜேசுதாசன் அக்கலைத்துறையில் நாட்டம் கொண்டிருப்பதில் அதிசயம் இல்லை. ரொறன்ரோவில 1996 இல் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டுக் கலைநிகழ்ச்சியில் மேடையேற்றுவதற்காக, மைக்கேல்தாஸ் சவரிமுத்து அவர்களால் தயாரித்து மேடை ஏற்றப்பட்ட கண்ணகி நாட்டுக் கூத்தில் அவரது மகள்மார் மூவரும் நடித்தனர். அந்நாடகத் தயாரிப்பின்போது

என்னைத் தன் வீட்டுக்கு அழைத்து, கூத்து ஒத்திகை நடத்தி, அது பற்றிச் சில ஆலோசனைகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். அவரும் ஒரு சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞன் என்பதை அன்றுதான் அறிந்து கொண்டேன். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மக்களுக்காக கிறிஸ்தோப்பர் நாட்டுக்கூத்தை நெறிப்படுத்தி 1987 இல் அரங்கேற்றியமை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே காத்தவராயன், சத்தியவான் சாவித்திரி முதலான இசைநாடகங்களைத் தயாரித்து மேடை ஏற்றியமை மூலமாக எனது நாடக அனுபவங்களை அறிந்திருந்த ஜேசுதாசன் அவர்கள், பெருமனதுடன் என்னுடன் கலைசார்ந்த உறவை வைத்துக்கொண்டார். அவரது தயாரிப்பில் ரொறன்ரோவில் பல நாட்டுக் கூத்துக்கள் மேடை ஏற்றப்பட்டிருக்கின்றன. சிறந்த குரல் வளம் மிக்க ஜேசுதாசன் அவர்கள் நாட்டுக் கூத்துப் பாடல்களோடு, திரையிசைப் பாடல்களையும் இனிமையாகப் பாடத்தக்க ஆற்றல் படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அன்பான குடும்பம்: அவரது குடும்பம் இன்பமானது. அருமையான மனைவி மொனிக்கா. நல்ல பண்பான பிள்ளைகள். தந்தையின் பெயர் சொல்லும் வகையில் கல்வியில் மேம்பட்ட பிள்ளைச் செல்வங்கள். மூத்த மகள் அஜந்தா மருத்துவர், இரண்டாவது மகள் அஜிதா சட்டத் துறையில் பட்டம் பெற்றவர். மூன்றாவது மகள் அனித்தா நிதித்துறையில் பட்டம் பெறவுள்ளார். தந்தைக்குச் சமமாகப் பிள்ளைகளும் நாடகம், நடனம், கலைத்துறையிலும் திறமை பெற்றவர்கள். மொனிக்கா அவர்கள் என்றுமே யேசுதாசனைப் பிரிந்திருந்த காட்சியை நான் எந்த நிகழ்விலும் பார்த்ததில்லை. ஜேசுதாசனை இயக்கும் சக்தியாக அமைந்து, அவரது சாதனைகளுக்குப் பக்கபலமாக இருப்பவர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறி, மொனிக்கா அவர்களையும் பெருமைப்படுத்த வேண்டும். திருவள்ளுவர் கூறும்,

> **"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
> **பண்பு பாராட்டும் உலகு" (திருக்குறள்: 994)**

என்ற குறள்மொழிக்கு இலக்கிமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் மனுவல் ஜேசுதாசன். அவர் மேலும் பல்லாண்டுகள் நலம்பல பெற்று, மக்களுக்கு நல்லன செய்ய வேண்டு மென வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர். இ. பாலசுந்தரம்
ரொறன்ரோ
19.05.2008

அதிசய மனிதர்

நான் ரொறொன்ரோவுக்கு வந்த புதிதில் வணிக நிறுவனங்களையும், விட்டுப்போன சில நண்பர்களையும் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்ததுண்டு. வணிக நிறுவனங்கள் ஒருபோதும் தொலைபேசியின் மறுமுனையில் கிடைப்பதில்லை. தகவலை விடச் சொல்லுவார்கள், விடுவேன். அநேக சமயங்களில் தகவல் பெட்டி நிறைந்து விட்டது என்று குரல் கேட்கும். ஒரு வணிக நிறுவனத்தை தொடர்பு கொள்வதில் இவ்வளவு பிரச்சனைகளா என்று நினைக்கத் தோன்றும். நண்பர்களை வீடுகளில் அழைத்தால் அவர்கள் வீட்டில் இரண்டு மூன்று தொலைபேசிகள் இருந்தன. ஆனால் அவர்கள் இருப்பதில்லை. தகவல் பெட்டியில் தகவலை விடவேண்டும். அந்த தகவல் அப்படியே பெட்டியின் அடியில் போய் புதையுண்டு கிடக்கும். நண்பர் திருப்பி அழைப்பதென்பது நடக்காத காரியம்.

அப்பொழுது தான் மனுவல் ஜேசுதாசனின் "90 நாட்களுள்" என்ற நாவல் வெளியாகி பரபரப்பாக பேசப்பட்டது. எனக்கு ஜேசுதாசனைப் பற்றி ஒன்றும் தெரியாது, அறிமுகம் இல்லை. அவர் ஒரு சட்டத்தரணி என்ற விபரமும் அவர் எழுதிய முதல் நாவல் அது என்பதும் மட்டுமே நான் அறிந்தது. நாவலைப் படித்தபோது பாராட்டத் தோன்றியது. தொலைபேசியில் அதை தெரிவிக்கலாம் என்று நினைத்தேன். சட்ட நிறுவனம் ஆனபடியால் தகவலை விட்டு வைப்போம் என்று அழைத்தபோது அதிசயமாக ஜேசுதாசனே மறுமுனையில் பேசினார். நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்தேன். அதுவே எங்களுக்கிடையேயான முதல் தொடர்பு.

அதன் பிறகு பார்த்தால் ரொறொன்ரோவில் ஜேசுதாசன் பெரிய ஆளுமை என்பது தெரிய வந்தது. அவர் பத்திரிகைகளில் எழுதினார், ரேடியோவில் பேசினார், தொலைக்காட்சியில் நடித்தார், நாடகங்கள், நாட்டுக்கூத்து, இலக்கிய விழாக்கள், பொது நிகழ்ச்சிகள் என்று அவர் பங்கு பற்றாத நிகழ்வுகள் குறைவாகவே இருந்தன. இதிலே முக்கியமானது இலங்கையிலிருந்து வந்து இறங்கி அகதிக் கோரிக்கை கேட்டவர்களுக்கு அவர் வழங்கிய சேவை, இலக்கிய விழாக்களுக்கும் கலை நிகழ்ச்சிகளுக்கும் அவர் தொடர்ந்து கொடுத்துவந்த ஆதரவும், நிதியுதவியும் அனைவரும் அறிந்ததே.

நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஒரே கேள்வியைத்தான் திருப்பி திருப்பி கேட்டேன். அவருக்கு எங்கே நேரம் கிடைக்கிறது? அவருடைய சட்ட நிறுவத்தின் வேலைகள் நேரத்தை பாதிக்கு மேல் விழுங்கிவிடும். மீதி நேரத்தை அவர் பொது நிகழ்ச்சிகள், கூட்டங்கள், தலைமை உரைகள், இலவச சட்ட ஆலோசனைகள், பொதுசன சேவைகள் என செலவழித்தார். விருந்துகளில் கலந்து கொண்டார். அத்துடன் முழு மூச்சாக எழுதவும் செய்தார். இவற்றை எல்லாம் எப்படி சாதிக்கிறார் என்பது தான் என்னுடைய வியப்பு.

கடவுள் சிலரை பணக்காரராகவும், சிலரை ஏழையாகவும் சிருட்டிக்கிறார். சிலரை புத்திசாலியாகவும் சிலரை புத்தி குறைந்தவராகவும் படைக்கிறார். ஆனால் உலகத்தில் அனைவருக்கும் அவர் பாரபட்சம் இல்லாமல் சரிசமமாக வழங்குவது நேரத்தைதான் எல்லோருக்கும் நாளுக்கு 24 மணிநேரம் தான். அதில் மாற்றமில்லை. ஜேசுதாசன் எப்படி தன் நேரத்தை பயன்படுத்துகிறார்? அவருடைய பதில் உழைத்து பணம் சம்பாதிப்பது போல, படித்து அறிவை வளர்ப்பது போல, நேரத்தையும் சம்பாதிக்க வேண்டும் என்பது தான்.

சமீபத்தில் அவர் ஒரு கட்டுரை வரைந்திருந்தார். நிறைய ஆதாரங்களுடனும் படங்களுடனும் எழுதப்பட்ட தர்க்கபூர்வமான கட்டுரை அது. அளவான வார்த்தைகளில் கட்டுரை செறிவாகவும், முழுமையாகவும் அமைந்திருந்தது. சொல்ல வந்த விசயம் வாசகருக்கு தெளிவாக போய்ச் சேர்ந்தது. நான் அவரிடம் "இந்தக் கட்டுரையை எழுத உங்களுக்கு ஆறு மணி நேரம் பிடித்திருக்கும், இல்லையா?" என்று கேட்டேன். அவர் தான் ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டு ஒரே அமரர்வில் எழுதி முடித்ததாக கூறினார். இதுதான் அவர் நேரத்தை பயன்படுத்தும் முறை. ஆற அமர யோசித்து சொற்ப நேரத்தில் ஒன்றை நிறைவாகச் செய்து முடிப்பது.

"90 நாட்களுள்" என்ற தலைப்பில் ஜேசுதாசன் எழுதிய நாவல் முக்கியமானது. தான் பொறுப்பேற்று கனடாவுக்கு வரவழைத்த காதலியை 90 நாட்களுக்குள் அவள் காதலன் மணமுடிக்க வேண்டும் என்பது கனடாவின் சட்டம். மணமுடிக்காவிட்டால் என்ன நடக்கும்? காதலி நிரந்தர விதிவிட உரிமையை இழந்து நாடு கடத்தப்படுவாள். இந்தச் சிறிய சட்ட நுணுக்கத்தை முழுமையாக பயன்படுத்தி புனையப்பட்டது தான் நாவல். எளிமையான நடையினாலும் யதார்த்தமான பாத்திர சித்தரிப்பினாலும் நாவல் சிறப்பு பெற்றது. சட்ட நுணுக்கள், அநீதிக்கு எதிரான சீற்றம், சின்னச் சின்ன அவதானிப்புகள் என நாவல் சுவாரஸ்யமாக சொல்லப்பட்டிருக்கிறது.

"வயது பதினாறு" ஜேசுதாசனின் சிறுகதைத் தொகுப்பு, இந்த தொகுதியிலும் பல கதைகள் கனடிய பின்னணியில் புனையப்பட்டிருக்கின்றன. புலம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் பல்வேறு விதமான சட்ட நெருக்கடிகள் புலனைவுகளின் அடைப்படையில் அலசப்படுகின்றன. இந்த இரண்டு நூல்களும் கனடிய சமுதாயத்தில் புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வை சொல்லும் நல்ல பதிவுகளாக வருங்காலத்தில் அறியப்படும்.

இசைஞானி இளையராஜா ஒருமுறை தான் அமைத்த இசைக்கோவை குறிப்புகளை ஒரு பிரபல மேற்கத்திய இசையமைப்பாளரிடம் கொடுத்து அவர் கருத்தைக் கேட்டார். இசையமைப்பாளர் அந்தக் குறிப்புகளை நீண்ட நேரம் படித்தார். அவர் படிக்கும் போதே அவருடைய மனச்செவியில் அந்த இசை

ஓடியது. இறுதியில் அவர் சொன்னார், "நீங்கள் இசையை நோக்கி செல்லவில்லை, இசை உங்களிடம் ஓடிவருகிறது," என்று ஜேசுதாசனுடைய எழுத்தைப் படிக்கும்போது எனக்கு அந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் எழுதுவதற்கு பிரயாசைப் படவில்லை. எழுத்து அவரை நோக்கி வருகிறது.

ஜேசுதாசன் வாலிப வயதில் விடாமுயற்சிக்கு உதாரணமாக வாழ்ந்திருக்கிறார் என்று அறிகிறேன். விடுமுறை நாட்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து நண்பர்களுடன் சைக்கிளில் சுற்றுவார். ஆங்கிலத்தில் உரக்கப் பேசியபடி மொனிக்காவின் வீடு இருக்கும் வீதியில் சைக்கிளை அடிக்கடி ஓட்டிக்கொண்டு செல்வாராம். அந்த வீதி தாண்டும் வரை அவர் பார்வை ஒரு வீட்டின் மேலேயே நிலைத்திருக்கும். அவருடைய கனிந்த பார்வைக்கு அம்புப் பார்வையாக பதில் கிடைக்குமா? ஜேசுதான் சோர்ந்து விடவில்லை. சைக்கிள் ரயர் தேய்ந்த அளவுகூட காதல் வளரவில்லை. பனிக்கட்டி எவ்வளவு கல்லாக இருந்தாலும் ஒரு நாளைக்கு உருகித்தானே ஆக வேண்டும். அதில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. மொனிக்காவின் மனமும் நாளடைவில் மெல்ல மெல்ல உருகி அவர்களுக்கு ஒரு நாள் திருமணமானது. அவருடைய அன்பும், அந்நியோன்யமும் அன்றைக்கு இருந்தது போல் இன்றைக்கும் மாறாமல் தொடர்கிறது.

ஜேசுதாசனின் வீட்டிற்குப் போனால் அதைக் காணலாம். அவரும் மனைவியும் மூன்று மகள்களும் வாழும் உலகம் ஒரு குடும்பம் போலவே தோன்றாது. நண்பர்கள் ஒன்று சேர்ந்து பழகுவது போலவே இருக்கும். பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் ஆலோசனைகள் வழங்குவதும் பாசப்பிணைப்புடன் குடும்ப அமைதி காப்பதும் கனடாவில் வாழும் ஏனைய குடும்பத்தவர்களுக்கு ஒரு முன் உதாரணமாகவே திகழும். அவருடைய வாழ்க்கை வெற்றியில் அவருடைய அன்பு மனைவிக்கும் மூன்று மகள்களுக்கும் முக்கிய பங்குண்டு.

அவருடைய அறுபதாம் ஆண்டுவிழா தொடர்பாக இந்த மலரை வெளியிடுவதாக அறிகிறேன். ஒருவர் அறுபது ஆண்டுகளை வாழ்ந்து முடிப்பது ஒரு சாதனையா? மருத்துவ மனையில் படுத்திருக்கும் ஒருவருக்குக் கூட வயது ஏறுகிறது. நித்தமும் தூங்கி வழிந்தபடி சோம்பலாய் இருக்கும் ஒருவரின் வயதும் கூடுகிறது. அறுபது வயதை எட்டுவது ஒரு சாதனையல்ல. அந்த வயதுக்குள் அவர்கள் என்ன சாதித்திருக்கிறார்கள் என்பது தான் முக்கியம். ஜேசுதாசனைப் பற்றி நிறையச் சொல்லலாம். சேக்கம் அமைப்பின் செயலாளராகவும், முதியோர் அமைப்புக்களின் வழிகாட்டியாகவும் அவர் பணியாற்றியிருக்கிறார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கனடாவில் நடத்திய ஆறாவது மாநாட்டின் வெற்றிக்கு முக்கிய பங்களித்தவர். கனடாவின் இலக்கியத் தோட்டத்தை நிறுவுவதற்கு ஆலோசனைகள் வழங்கியதோடு

நிற்காமல் அவர்களுடைய நிகழ்ச்சிகளிலும் பங்கு வகித்து தொடர்ந்து ஆதரவு அளித்து வருபவர். தற்பொழுது அனைத்துலக மருத்துவ நலமையத்தில் முக்கிய அங்கத்தவராக செயலாற்றி இலங்கை வட கிழக்கு வாழ் கர்ப்பிணிப் பெண்களின் நலன் காக்கும் பணியில் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

அவருடைய பல்துறை ஆளுமையை கௌரவிக்கும் வகையில் சமீபத்தில் தமிழர் தகவல் விருது கொடுத்து பாராட்டியிருக்கிறது. ஜோர்ஜ் பெர்னாட்ஷோவுக்கு அவருடைய 70வயதில் இலக்கியத்திற்கு நோபல் பரிசு கிடைத்த போது அவர் பரிசை ஏற்றுக்கொண்டார். ஆனால் பரிசுப் பணத்தை திருப்பிக் கொடுத்து இந்தப் பரிசு எனக்கு இந்த வயதில் கிடைப்பது கடலிலே விழுந்து நெடுநேரம் தத்தளித்து கரைசேர்ந்த ஒருவருக்கு உயிர் காக்கும் மிதவை வளையம் எறிவது போல் இருக்கிறது'' என்று சொன்னாராம். பரிசு கொடுப்பதாய் இருந்தால் அது அவரவருக்கு அந்தந்த நேரம் கொடுக்கப்பட வேண்டும். தமிழர் தகவல் நிறுவனம் வழங்கியது பன்முக புலமை வித்தகர் விருது, சட்டவல்லுனர், எழுத்தாளர், நாட்டுக்கூத்துக் கலைஞர், நடிகர், சமூகசேவையாளர் எனப் பலதுறைகளில் தடம் பதித்திருக்கும் ஒருவருக்கு இந்த விருது காலத்தில் கிடைத்தது சாலப்பொருந்தும்.

சில தினங்களுக்கு முன்னர் அவர் என்னிடம் பேசும்போது தனக்கு பிடித்த ஒரு பாடல் பற்றிக் கூறினார். இன்று பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் பாடலை இயற்றியவர் பா.விஜய் என்ற கவிஞர்.

ஓவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்களமே

இந்தப் பாடலை தான் வீட்டிலும் கார் ஓட்டும் போதும் பொது மேடைகளிலும் அடிக்கடி பாடுவதாகச் சொன்னார். ஜேசுதாசன் ஒரு பூவைப் பார்க்கும் போது அது கடந்த வந்த பாதையை, சந்தித்த போராட்டங்களை, தியாகங்களை, தவிர்த்த இடர்களைப் பற்றி ஒருவரும் யோசித்துப் பார்ப்பதில்லை. அந்தப் பூவின் அழகு மட்டுமே அவர்களுக்குத் தெரிகிறது. விதையாக இருந்து வளரும் பூச்செடி எத்தனையோ இன்னல்களைத் தாண்டி வளர்ந்து பூக்கிறது. வாழ்க்கை என்றால் போராடாமல் ஒன்றை அடைய முடியாது. தன்னுடைய இன்றைய வெற்றிக்குப் பின்னால் நிறையப் போராட்டங்களும், தியாகங்களும்,சறுக்கல்களும் இருக்கின்றன என்று நினைவு கூர்ந்தார். இதுவே அவருக்குப் பிடித்த தத்துவம்.

ஜேசுதாசனின் சிறந்த குணநலன் என்றால் அது அவருடைய மனித நேயம் தான். சகல உயிரையும் நேசித்தார். ஒருவர் மனம் புண்படப் பேசமாட்டார். நூற்றுக்கணக்கான நண்பர்கள் அவருக்கு. ஆனால் ஒவ்வொருவரும் அவருடைய அத்தியந்த நண்பர்கள் போல் உணரும் விதமாக பழகுவார். மனமோ

தாராளமானது, உதவியென்று வருபவர்களுக்கு மறுப்பது கிடையாது, அடுத்தவர் குறைகள் அவர் கண்களில் படுவதுமில்லை. கம்பர் வார்த்தையில் "சிறியன சிந்தியாதான்" என்று அவரைச் சொல்லலாம்.

அவரைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் அவருடைய துணைவியார் மொனிக்கா பற்றிக் கூறாமல் அது நிறைவு பெறாது. மொனிக்காவின் உதடுகளில் எப்பொழுதும் புன்னகையிருக்கும். இது உதட்டிலே மட்டும் பூத்ததாக இருக்காது. இதயத்திலிருந்து மலர்ந்த புன்னகை. ஜேசுதாசன் ஒன்றை சிந்திப்பார். மொனிக்கா அதை செயலாக்குவார். கணவனும் மனைவியும் இப்படி பொருந்திவருவது அபூர்வம். சைக்கிளில் துரத்திய காதல் இன்று மலர்ந்து காய்த்து கனியாகி ஒரு நிறைவான வாழ்க்கையாக பரிணமித்திருக்கிறது. அதே அளவிற்கு அவருடைய உந்து சக்தியும் ஆதாரமாக இருக்கிறது. திருக்குறள் கூறிய வாழ்க்கைத் துணைக்கு உதாரணமாக வாழ்ந்து இன்றியமையாத இணையாக திகழ்கிறார் மொனிக்கா.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட் பேறு

பெருமைக்குரிய மனைவி அவருக்கு அமைந்ததோடு நல்ல மக்களும் வாய்த்ததை பெரும்பேறு என்று எண்ணாமல் வேறு எப்படி எண்ணுவது. ஒரு சீனப்பழமொழி உண்டு. ஓடும் எறும்பு, உறங்கும் யானையிலும் பார்க்க சிறந்தது. ஜேசுதாசன் ஓர் ஓடும் யானை. இன்று அவர் 60 ஆண்டுகளை கடந்து விட்டார். மேலும் 60 ஆண்டுகள் இளமைகூடி இந்த அதிசய மனிதர் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும். இதுவே என் பிரார்த்தனை.

அ.முத்துலிங்கம்

நண்பர் மனுவல் ஜேசுதாசன்

சவால்களைச் சாதனையாக்கிய சாணக்கியன்

மனுவல் ஜேசுதாசன் கனடிய மண்ணில் தமிழர்கள் மத்தியில் மதிப்பும், தன்னடக்கமும் கொண்ட ஒரு சட்டத்தரணி. சட்டத்தரணிகளிடம் காணப்படும் தனித்துவப்போக்கை அவர் பேணி அதன் வழி பின்பற்றுபவர் அல்லர். தன்னடக்கமும், அமைதியும் கொண்ட ஒரு சமூகவியல் சார்ந்த ஒரு மனித நேயராக அவரைக் காண்கின்றேன். அன்பும், அடக்கமும் அவையில் முந்தியிருக்கச் செய்யும் என்பதற்கு அமைய அவர் இன்று மக்கள் மத்தியில் தனித்துவம் மிக்கவராக ஒளிபரப்புவதற்குக் காரணம் என்ன என்பது சிந்திக்கத்தக்கது. அவர் கடந்து வந்த பின்புலம் மிகவும் கடினமானது. பாலை வெளியில் பசுந்தரை காணத் தனித்துவமாக உழைத்த ஒரு கடின உழைப்பாளியும், திட மனது கொண்ட ஒரு திண்ணிய வீரனும் ஆவார். 'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். அவர் தனது இளமைக் காலந் தொட்டே கல்வியில் தீவிர ஈடுபாடு கொண்டு கலைமகளைத் தன் இதயத்தில் ஒளிவீச வேண்டிக் கொண்டவர். கடின உழைப்பினால் நினைத்ததைச் சாதித்த ஒரு சாதனையாளர்.

மனுவல் ஜேசுதாசனின் தந்தை ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர். அன்னையின் தந்தை பரம்பரையாக வைத்தியத் தொழிலைச் செய்து வந்தவர். செங்கமாரி, மங்கமாரி போன்ற மிக மோசமான நோய்களுக்கு வைத்தியம் செய்வதில் பெயர்பெற்று விளங்கியவர். அவரை அண்டைக் கிராமத்தார் அனைவரும் அறிந்திருந்தனர். இதனால் அவரை தீவுப்பகுதிகளிலிருந்தும் அண்டைக் கிராமங்களிலிருந்தும் வந்து அழைத்துச் செல்வர். அவர் ஒரு கைராசிக்கார கைவைத்தியராக விளங்கினார். இதனால் அவருக்கு அவர் வாழ்ந்த சமூகத்தில் மட்டுமன்றி அயல் கிராமங்களிலும் உள்ளவர்களிடையே மதிப்பும், மரியாதையும் உடைய ஒருவராகக் காணப்பட்டார். ஜேசுதாசனின் அன்னையின் தந்தை இறந்தபின்னர் அவரிடம் இருந்து கற்றுக்கொண்ட சிலவற்றை மக்களுக்கு சேவையாகச் செய்து வந்தவர் அவரின் தாயார். இதனால் யேசுதாசனின் பெற்றோர் அவர்களின் சமூகத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகவும், மதிக்கப்படுபவர்களாகவும் காணப்பட்டனர். ஜேசுதாசனின் பெற்றோர் தம் பிள்ளைகள் தங்களைப் போலல்லாது கல்வி கற்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டி வந்தனர். நாளாந்தம் அவர்களை கல்வி கற்கவேண்டும் என்பதற்காக ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து ஈடுபாடு கொள்ளவைத்தனர்.

நண்பர் ஜேசுதாசனுடன் உரையாடும்போது அவர் தனது பெற்றோரைப் பற்றி மிகவும் பெருமையுடன் பேசிக்கொள்வார். “எனது தாய் தந்தையர்களிடம் இருந்து நான் கற்றுக்கொண்டவை மிக

அதிகம்'' என்று கண்ணீர்மல்க நன்றியுணர்வோடு தமது பெற்றோரை நினைவுகூருவது நெஞ்சத்தை நெகிழ வைக்கின்றது. தனது இளமைக்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த அதிமேற்றிராணியார் எழுதிய நூலை வாங்கிவந்து அதனைத் தினமும் எனக்கு வாசித்துக் காட்டுவார்கள் எனது பெற்றோர். அது மட்டுமன்றி தேவாலயத்தில் எனது தந்தை ஒரு பேச்சாளராகவே திகழ்ந்தார். அவரது கருத்துக்களை எமது சமூகத்தினர் செவிமடுப்பதுபோன்று நானும் மிக அவதானமாக செவிமடுப்பேன். அவர்கள் கூறிவந்த நற்போதனைகள், அறிவுரைகள் என்னை நாளாந்தம் நெறிப்படுத்தின, கல்வியில் நாட்டம் கொள்ள வைத்தன. "காலையில் எழுந்ததும் படிப்பு. கல்வி காலம் போனாலும் போகாது பெண்ணே'' என எனது அன்னை எனக்கு தினமும் எடுத்துரைப்பார். அது இன்றும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அது மட்டுமன்றி அதிகாலையில் என்னை எழுப்பி புத்தகத்தை எடுத்துப் படிக்கச்சொல்லுவார் அம்மா? நான் நித்திரை தூங்காமல் இருப்பதற்காக உரத்துப் படிக்கவேண்டும் என்பார். அது அக்கத்துப்பக்கத்து வீடுகளுக்கெல்லாம் கேட்கவேண்டும் என்பார்'' என்று தனது தாயார் தனது கல்வியில் செலுத்திய அக்கறையையும் ஈடுபாட்டையும் நினைந்து வியப்படைகின்றார்'' மனுவல் ஜேசுதாசன். "உரத்து வாசிப்பது மூளையில் ஏறும் என்பார் எனது தாயார் எனவே எனது பெற்றோருக்காக நான் உரத்து வாசிப்பேன். உரத்து வாசிக்கும் பழக்கம் பிழையின்றி வாசிக்கக் கற்றுத்தந்தது'' என்பார். எனது பெற்றோர் படிக்காத மேதைகள் அவர்கள் சொல்லி வைத்தவற்றை இன்றும் நினைத்துப் பார்க்கும்போது எவ்வளவு பொருள்பொதிந்தவை, அநுபவக்கல்வியால் அவர்கள் கற்றுக்கொண்டவை, நாளாந்த வாழ்க்கையில் இருந்தும், சமுதாயத்தில் இருந்தும் அவர்கள் கற்றுக்கொண்ட சமுதாயக் கல்வி சாதாரணமானது அல்ல, அவர்கள் கற்காத மேதைகள்'' என்ற தனது பெற்றோரை நினைவுகூரும் அவர் ஒரு பண்பாட்டாளர் கடுகளவு நன்றித்தாயினும் பெரிதாக நினைக்கும் மனது கொண்டவர். அந்த மனவியல்பை தனக்கு ஏற்படுத்தித் தந்தவர்கள் பெற்றோர்களே என்கின்றார். பெரியவர்களை மதித்தல், உணவு உண்ணுதல், உணவை மதித்தல், வீண்விரயம் செய்யாது ஒழுகல், மனிதநேயம், இறைபக்தி அனைத்தையும் நான் எனது பெற்றோரிடமிருந்தே கற்றுக்கொண்டேன் என்கின்றார் தன்னடக்கத்தோடு.

தன்னை வழிப்படுத்தி உயர்த்தி வைத்த பெற்றாரோடு தனக்கு கல்வியறிவூட்டிய ஆசிரியர்களையும் அவர் நினைவில் வைத்திருக்கும் ஒரு பண்பாளர். அவர் அடிக்கடி

என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகற்கு' என்று தான் இளமைப்பருவத்தில் கற்ற திருக்குறளைக் குறிப்பிட்டு நினைவு கூருவது அவரது பண்பின் உயர்வைக் காட்டுகின்றது. தான்

உயர்ந்த போதும் தன்னை உயர்த்தியவர்களை உயர்வாக எண்ணும் உயர்ந்த உள்ளம் அவருடையது. தனது கல்வியில் ஏணிப்படியாக அமைந்தவர் தனக்கு கல்வியறிவூட்டிய முதல் ஆசான் எம்.எஸ். அலெக்சாந்தர் என மனந்திறந்து குறிப்பிட்டு அவரைத் தனது மனதில் இருத்திவைத்துள்ளார். ஆசிரிய கலாசாலையை முடித்துத் தனது பாடசாலைக்கு வந்த அவர் தன்னைக் கல்வியில் முன்னுக்குக் கொண்டுவர பலவழிகளிலும் உதவியவர் என்கின்றார். தான் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது ஒருமுறை தங்கள் பாடசாலைக்கு வருகைதந்த யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி நவரத்தினம் அவர்கள் தங்கள் வகுப்புக்கு வந்து எங்கே உங்களில் யாராவது பேசிக்காட்டுங்கள் எனக் கேட்டபோது தான் மிகத்துணிவோடு 'மதிப்பு மிக்கக் கல்விப் பணிப்பாளர் அவர்களே என்று தொடங்கி உரையாற்றினேன். அவர் எனது பேச்சைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்து எனது தந்தையோடு தனது வீட்டிற்கு வந்து தன்னைப் பார்க்கும்படி கூறி முகவரியையும் தந்தார், நாம் அங்குசென்றபோது அவர் தான் எழுதிய ஒரு புத்தகத்தை எனக்குப் அன்பளிப்பாகத் தந்து எனது தந்தையைப் பார்த்து 'இவன் உனக்கு ஒரு சவால்' இவனை நன்றாகக் கற்பிக்கவேண்டும், எதிர்காலத்தில் நல்ல கல்விமானாக வருவான் என்று அறிவுரை கூறியமையை இன்றும் நினைவுகூருகின்றார் ஜேசுதாசன். அது மட்டுமன்றித் தனது வாழ்வில் அது ஒரு திருப்பு முனையாக எனது மனதில் ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்தியதோடு கல்வியில் ஒரு ஒளிக்கீற்றைப் பாச்சிய ஒரு சம்பவமாகவே அதனை நான் கொள்ளுகின்றேன் என்கின்றார். இவ்விதமான கல்வியியலாளர்களின் ஆசியும், வாழ்த்தும் எனது பெற்றோரின் ஆதரவுமே என்னை கல்வியில் உயர்வு பெறவைத்தன என்கின்றார் அடக்கமாக.

ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் சட்டத்துறையிலும் அரசியலிலும் பிரபலம் வாய்ந்தவர். அவரின் சட்டத்துறை நிபுணத்துவம், வாதத் திறன் அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் மூலை முடுக்குக்களில் எல்லாம் பேசப்பட்டன. அவரது திறனை கேட்டும், நேரடியாக நீதிமன்றத்திற்குச் சென்றும் பார்த்ததால் அவர்மீது ஒரு பற்றும் மதிப்பும் கொண்டிருந்தார் ஜேசதாசன். எனவே அவரைப் போல ஒரு சட்டத்தரணியாக தானும் வரவேண்டும் என்னும் எண்ணம் அவரது உள்ளத்தில் உருவாகியிருந்ததில் வியப்பில்லை. தனது வாழ்வின் ஒரு முன்மாதிரியாக, தலைவராக ஜி.ஜி.பொன்னம்பலத்தை மனதில் பதித்துக்கொண்டார். எதிர்காலத்தில் நீ என்னவாய் வருவாய் அல்லது என்ன உனது எதிர்கால இலட்சியம் என்றுகேட்டால் நான் ஒரு சட்டத்தரணியாக வருவதே என்று பதில் சொல்லித் திரிந்த ஒரு இளைஞனே இன்று கனடிய சட்டத்தரணியாக எமக்குப் பணியாற்றும் மனுவல் ஜேசுதாசன் என்றால் வியப்பில்லை. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு அமைய அவர் இளமை முதல் தான் சட்டத்தரணியாக வரவேண்டும் என்னும் எண்ணத்தை வளர்த்துக்

கொண்டார். அவரது எண்ணம் அடிமனதில் ஆணித்தரமாகப் பதிந்துவிட்டமையும் அவரை அடி மனதில் இருந்து வழிநடத்தியுள்ளது.

நாவாந்துறை ஆரம்பப்பாடசாலையில் கல்வி கற்ற அவர் தனது உயர்கல்வியை St. Patrics Collge இல் தொடர்ந்தார். அவரது ஆங்கிலக் கல்விக்கு வித்திட்ட கல்லூரியாக அது விளங்கியது. சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்துச் சென்று கொழும்பில் தங்கியிருந்து கற்றார். அங்கு சிங்கள தமிழ் மாணவர்களோடு இணைந்து இருந்து அறிவைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு வாய்ப்புக் கிட்டியது. பல்துறையைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர்களும் அங்கு தங்கியிருந்தமையால் அவர்களோடு உறவாடி அளவளாவி பல்துறை அறிவையும் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் அவருக்கு ஆங்கில அறிவையும் இலக்கிய, சமூக அறிவையும் பெற்றுக்கொள்ளும் களமாகவும் அமைந்திருந்ததாகப் பெருமைப்படுகின்றார். பல்துறை அறிவாற்றல் கொண்டவர்களோடு மட்டுமன்றி அங்கு பணிபுரியும் அனைவருமே ஆங்கிலம் பேசுபவர்களாக இருந்தமையால் எந்தநேரமும் ஆங்கிலம் பேசும், காதில் விழும் தன்மை அவரது ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள உதவியுள்ளது. உலக அரசியல், உலக நிலவரங்கள், பொருளாதாரம், சமயம் எனப் பல்துறைப்பட்ட அறிவாற்றல் கொண்டவர்களோடு அளவளாவும் நிலை பல்துறை அறிவையும் ஆங்கில அறிவையும் புடம்போட வைத்ததில் வியப்பில்லை.

சட்டக்கல்வியை (1975) முடித்தபின்னர் யாழ்ப்பாணம் சென்று சட்டத்தரணி எஸ். சங்கரப்பிள்ளையிடம் பயிற்சியைப் பெற்றுக்கொண்டபின்னர் தனித்துவமாக தனது தொழிலை ஆரம்பித்த அவர் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. வியாபாரப்போட்டி, தொழிற் போட்டி என்பன காரணமாக சட்ட நுணக்கங்கள் தொடர்பாகவோ அன்றி வழக்குகள் தொடர்பாகவோ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுவதே பெரும் சிரமமாகக் காணப்பட்டது. யாரும் உதவ முன்வராத நிலையில் தன்முயற்சியால் தனது தொழிலை திறப்படச் செயற்படுத்தவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். யாழ்ப்பாணத்துச் சட்டத்தரணிகள் பெரும்பாலானவர்கள் சுயநல வாதிகளாகவே செயற்பட்டதனையும் புதிதாக தொழிலுக்கு வருவோரை அணைத்து அவர்களை அநுசரித்து உதவும் மனப்பான்மை குறைந்தவர்களாகவும் காணப்பட்டனர் என்பது அவரின் மனதில் உள்ள ஆதங்கமாகவே காணப்படுகின்றது. ஜேசுதாசன் தனக்கு சட்டத்தரணி காங்கேசு பத்மநாதன் சில வேளைகளில் உதவியும் ஆலோசனைகளையும் நல்கி ஆதரவு தந்ததை நன்றியுணர்வோடு மீட்டுப்பார்க்கும் தன்மை அகலாதவராகவே காணப்படுகின்றார்.

சட்டத்தரணி காங்கேசு ஜெகநாதனோடு இணைந்து 'ஜெகநாதன் அன்ட் ஜேசுதாசன் அசோசியேற்ஸ்' என்னும் சட்ட

நிறுவனத்தை நிறுவி தொழில் புரிந்துவந்துள்ளார். 1975க்கும் 1978க்குக் இடையில் அவர் யாழ்ப்பாணத்தில் சட்டத் தொழிலைச் செய்துள்ளார். பின்னர் அவர் மேற்கல்விக்காக இங்கிலாந்திற்கு 1979ம் ஆண்டு சென்று அங்கு சிரேஷ்ட சட்டத்தரணியாகச் சான்றிதழ் பெற்றதோடு பதவிப்பிரமாணமும் செய்துகொண்டார். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சொலிசிற்றராகப் பணியாற்றிய அவர், அதன்பின்னர் சிறிலங்காவிற்குச் சென்ற அவர் தொடர்ந்து அங்கு இருக்கமுடியாத நாட்டு நிலை காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அதன் பின்னர் சிசெல்ஸ் நாட்டின் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அங்கு சென்று சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணியாகக் கடமையாற்றியதோடு, பிரதம காணி அதிகாரியாகவும், தேசிய அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராகவும கடமையாற்றிய பின்னர் 1986ல் கனடாவிற்கு வருகைதந்தார். கனடிய மண்ணில் புதிதாக வருவோருக்கு உதவும் வகையில் அலுவலகத்தைத் திறந்து அவர்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து கொடுத்தார். தொடர்ந்து யோக்வூட் பல்கலைக்கழகத்தில் உள்ள Osgood சட்டக் கல்லூரியில் கல்விபெற்று ஒன்ராறியோ மாகாணச் சட்டத்தரணியாக 1994ல் சான்றிதழ் பெற்று வெளியேறினார்.

தனது உறவினரும் சிறந்த நற்பண்பும் கல்வி, விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கியவருமான மொனிக்காவைத் தனது வாழ்க்கைத்துணைவியாக வரித்துக்கொண்டார். தனக்குத் திருமணப் பேச்சை எடுத்தபோது மொனிக்கா தனக்கு மருமகளாக வந்தால் நன்றாக இருக்கும் என்னும் விருப்பத்தைத் தனது தாயார் குறிப்பிட்டபோது அதனை மிகவும் விருப்போடு வரவேற்றுக்கொண்டார் ஜேசுதாசன். இளமைக்காலத்திலிருந்தே பழகிவந்தவர். அவருக்குப் பலவழிகளிலும் ஆலோசனைகள், உதவிகள் செய்துவந்தவர். நண்பர்களாகப் பழகியவர்கள். திருமணப் பேச்சை எடுத்ததும் “மொனிக்கா உமக்கு ஒரு விடயம் தெரியுமோ எனக்கும் உமக்கும் கலியாணம் பேசுகிறார்களாம் உமக்குத் தெரியுமோ” என்றாராம் வேடிக்கையாக அன்றிலிருந்து தாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கத் தொடங்கியதாக அவர் கூறும்போது அவர் பழைய நினைவுகளை இரைமீட்டிக் கொண்டார். தங்கள் திருமணத்தின்பின்னர் 1977 முதற் புதல்வியும் 1981இல் இரண்டாவது புதல்வியையும் பெற்றுக்கொண்டனர்.

இன்று கனடிய மண்ணில் சட்டத்தரணியாகப் பணியாற்றிவரும் நண்பர் ஜேசுதாசன் தந்தையிடம் பயின்று கொண்ட நாட்டுக்கூத்தை இன்றும் நினைவிருத்திக் கொள்வதோடு மட்டுமன்றி 2004ல் தானே இயக்கி ஒரு கூத்தையும் உதயன் விழாவில் செய்திருந்தார். பல சமூகத் தொண்டுகள் செய்துவரும் அவர் ஒரு சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமாவார். அண்மையில் அவர் எழுதிய சிறுகதைத்தொகுதி வெளியீடு செய்யப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே.

இலக்கியத்தில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டுள்ள அவர் இலக்கியம், கலை போன்ற துறைகளுக்குத் தன்னாலான பங்களிப்புக்களைச் செய்துவருகின்றார். உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மகாநாட்டுச் செயலாளராகப் (1996) பணியாற்றியதோடு சேக்கத்திலும் செயலாளராகச் செயலாற்றியுள்ளார். அதனைவிட Centre for Performing Arts நிறுவனத்தில் ஏழு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். சட்டத்தரணி ஜேசுதாசனின் சேவையைக் கருத்திற் கொண்டு தமிழர் தகவல் 2008ல் அவருக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

மக்களோடு பெருமை பாராட்டாது மிகவும் அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்ளும் மக்கள் நண்பனாகவே நான் அவரைக் காண்கின்றேன். ஈழத்தில் சுனாமியின் அகோரத்தாண்டவத்திற்குப் பலியான எம் இனத்தவருக்கு உதவி செய்வதற்காக இரவுபகலாக விழித்திருந்து அவர்களைக் கனடிய மண்ணிற்கு வரவழைப்பதற்கான விண்ணப்பப்படிவங்ளை பூரணப்படுத்த உதவியதோடு தனது அலுவலகத்தை அதற்காகவே சிறிதுகாலம் ஒதுக்கிவைத்திருந்தவர் என்பதும் அவரது சமுதாய நோக்கத்தையும் இனமான உணர்வையும் எடுத்துக் காட்டும் சான்றாகும். தமிழ் மக்கள் படும் அல்லல்களைக் கண்டு மனம் நொந்து அவர்களுக்காகக் குரல்கொடுக்க அவர் எப்போதும் பின்நிற்பதில்லை. கனடிய மண்ணில் உள்ள வானொலிகள், தொலைக்காட்சிகளில் அவர் அப்பப்போது தோன்றி தனது கருத்துக்களை முன்வைத்தும் வருகின்றார். அறிஞர்கள், கல்விமான்களை அவர் மிகவும் மதித்து அவர்கள்பால் அன்புகொண்டு உறவாட முயற்சிக்கும் ஒருவராகவே எப்போதும் அவர் தன்னைக் காட்டிக் கொள்ளுவார். அவர் ஒரு படி என்றால் அவரின் துணைவியோ மூன்றுபடி பாய்ந்து உதவும் உன்னத தம்பதிகளாக திகழ்வது அவர்கள் வாழ்வின் வெற்றிக்குக் காரணம். அறுபது அகவைகாணும் திரு. ஜேசுதாசன் அவர்கள் தொடர்ந்தும் தமது பணிகளைச் சிறப்போடு செய்ய வாழ்த்துவதோடு அவரைப் பாராட்டுவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

த.சிவபாலு எம்.ஏ.
செயலாளர்
கனடா-தமிழ் எழுத்தாளர் இணையம்

யார் அந்த இளைஞன்?

1959ம் ஆண்டிலே, கொழும்புத்துறைப் புனித சூசையப்பர் சாதனா பாடசாலையிலே நாடகப் போட்டி நடக்கிறது. நான் பொறுப்பாசிரியராக இருந்த இல்லமும் பங்குபற்றுகிறது. வேறு இல்லங்களைச் சார்ந்த மாணவர்கள், நாடகப் போட்டிக்கு தத்தமது இல்ல நாடகங்களுக்கு மிக அதிக செலவு செய்து ஏற்ற அலங்காரம், கதாபத்திரப் பின்னணி, ஒப்பனை வாத்தியங்கள் ஏற்படுத்தி மேடை ஏற்றுகிறார்கள். இதைப் பார்த்த எங்களின் இல்ல மாணவர்கள், இறுதியாக அன்று நடக்கவிருக்கும் எங்கள் இல்ல நாடகத்துக்கு வெற்றிக் கிண்ணமோ, எந்தவித பரிசிலோ கிடைக்க மாட்டாது என ஏங்கிப் பேசியவேளை அது.

இன்றும் இதை எழுதும்போது என் கண்முன்னே அந்த நாடகம் காட்சியளிக்கிறது. அந்த நாடகத்திலே நடித்த அந்த இளைஞனின் அற்புதமான நடிப்பு, என்னை மட்டுமல்ல, அங்கு பார்வையாளர்களாயிருந்த அனைவரையுமே கண்ணீர் மல்கச் செய்கிறது. அப்போது அதிபராயிருந்த பண்டிதர் யோசேப்பு உடனேயே புகழத் தொடங்கி விட்டார். அப்போது ஆசிரிய மணிகளாயிருந்த எம்.வி.ஆசீர்வாதம், தீ.லூக்கஸ் பொனிபாஸ், ஜேம்ஸ் போன்றோர் தங்களின் கண்கள் மல்கிய கண்ணீரை யாருமறியாது, தங்கள் சால்வைகளால் துடைத்தனர். நான் இங்கு எழுதாமலே, அந்த வெற்றிக்கிண்ணம் யாருடைய நடிப்பால் எமது இல்லத்துக்குக் கிடைத்திருக்கும் என்பதை ஊகித்தறிந்திருப்பீர்கள். இவ்வளவு எழுதிய பின், அந்த இளைஞன் யாரென நீங்கள் அறிய ஆவலுறுகிறது தெரிகிறது.

அந்த இளைஞனுடைய தந்தையும் தாயும் நாவாய் ஊர் போற்றும் உத்தமர்கள். அவர்களுடைய இரண்டாம் புத்திரனே அந்த இளைஞன். அவரின் மூத்தக்கா றெஜினா, அவரின் தங்கை தவமலர் ஆவர். அந்த இளைஞனின் ஒரேயொரு தம்பி ஆசுதாசன் ஆகும். அந்த இளைஞன் அதே ஊரைச் சார்ந்த பத்துப் பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் விரும்பித் திருமணம் செய்தார். இரு சம்பந்திகளுக்கும் ஆசீர்வாதம் என்ற பொதுப் பெயரும் உண்டு. இன்று இவரது மனைவி, இவரது தொழிலுக்கு வலக்கரமாய் உதவுகிறார். அந்த

இளைஞன் இன்று பெரியவன். அஜந்தா, அஜீத்தா, அனீத்தா என்ற மூன்று புத்தரிகளின் தந்தை. அந்தப் பிள்ளைகள் ஆசித்த அருங்கல்வியையே அவர்கள் பெற வழி செய்தார். அவரது மூத்தமகள் அஜந்தா மருத்ததுவக் கல்வியைக் கற்று முடித்துள்ளார். கலைகளில் நாட்டமும், பண்பும் பரிவும் கொண்ட நல்ல மருத்துவர் அவர். இரண்டாவது புத்திரி அஜித்தா தந்தையின் தொழிலினை மேற்கொண்டுள்ளார். மூன்றாம் மகள் அனீத்தா பல்கலைக்கழகத்தில் கற்றுவருகிறார். அவர் தம் வீட்டிலே எவர்தம் கருத்தையும் மதிக்கும் பண்புண்டு. அவர் குடும்பம் ஒப்புரவு பேணும் சனநாயகக் குடும்பம். இப்போதாவது அந்த இளைஞன் யாரென்று அறிய முடிகிறதா?

அந்த இளைஞன், அன்று நாடகத்தில் நடித்தபோது பிறழ்ந்த மெய்ப்பாடுகள், சொல்லின் சுவை, தனது நடிப்பால் பார்வையாளர்களையும் அழவைத்த பாங்கு, அந்த இளைஞன் கெட்டிக்காரன் என்பதை எனக்கு உணர்த்தியது. விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அத்தகைய அந்த இளைஞனை மேலும் முன்னேற்ற வேண்டும் என்ற தணியாத ஆசை என்னுள் ஏற்பட்டது. அந்த இளைஞனின் தந்தையிடம் சென்று, அவரின் கெட்டித்தனங்களைக் கூறி, அவரை அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த ஆங்கிலக் கல்லூரியில் சேர்க்குமாறு கூறினேன். அத்தந்தை அதை ஆனந்தமாக ஏற்றுக் கொண்டார். அந்த இளைஞன் யாரென்று இன்னும் அறியவில்லையா! மேலும் சில தகவல்கள் உங்களுக்குத் தரலாம் என எண்ணுகிறேன்.

அக்காலத்திலே கற்க விரும்பும் மாணவர்களை என் வீட்டுக்குப் பின்னேரம் அழைத்துக் கற்பிப்பது என் வழக்கம். அன்று அவ்வாறு என்னிடம் கற்றவர்கள் இன்று மருத்துவர்களாக, தூதரக அதிகாரிகளாக, நீதிபதியாக, சட்டத்தரணிகளாக, ஆசிரியர்களாக, கவிஞர்களாக இருப்பதைக் காணும்போது எனக்குப் பெருமிதம் ஏற்படுகிறது. அத்தகையவர்களிலே பலர் பல்வகைகளில் உயர்ந்தவர்களாய் இருந்தாலும், எனக்கு அளிக்கும் மதிப்பு எனக்குப் பேருவகை அளிக்கிறது. அந்த இளைஞன் வெளிநாடு சென்றுவரும்போது, எனக்கு நல்ல அகராதி போன்ற நூல்கள்

வாங்கிவந்து தரும்போது, செய்ந்நன்றி மறவாச் செம்மல் என்று நான் மனநிறைவாய் வாழ்த்தியதும் உண்டு. அந்த இளைஞனை இன்னும் கண்டுகொள்ளவில்லையாயின் மேலும் தகவல் தந்து, அவரைக் காண வழி செய்வது என் எண்ணம்.

அவரது வலக்கரமாகிய மனைவி, அவர் தாய்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாட்டிலும் மேலும் முன்னேற அயராது அன்றும் இன்றும் உழைத்து வருகிறார். அந்த நல்ல இல்லத்தலைவியை அந்த இளைஞன் என்றும் நெஞ்சுள் வைத்து அவளை அடிக்கடி போற்றுவதை அவருடன் பழகுபவர்கள் கூறுவர். இல்லத்தின் ஒளியாவும், மகவுகளின் காப்பாயும் காரியாலயத்தில் நிர்வாகியாகவும் கடமையாற்றும் மனையாள், இவரின் இன்றைய சக்தி.

அவர் சுற்றம் தழுவிவாழும் இயல்புள்ளவர். சமூகத்தில் காணும் சாக்கடைகள் களைய எழுதுபவர். வானொலியில் அவர் குரலில் நீதி, நியாயம் பரிணமிக்கும். தன்னைப் படிப்பித்த குருக்கள், ஆசிரியர்கள், பெரியோர்களை மறவாத சீலர். பக்தியும் பணிவும், ஒப்புரவும், கண்ணோட்டமும் கடைப்பிடிக்கும் நியாயவாதி இவர். இவர் இன்றைய மணிவிழா நாயகர் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் என்பதை, என் எழுத்துப் புலப்படுத்தியிருக்கும் என்பது எண்ணம். அவரை வாழ்த்த சில பாக்களும் இத்துடன் எழுதி, அவர் மேலும் நிறையில் உயர, எனதும் என் குடும்பம் சார்ந்தவர்களினதும் நல்வாழ்த்துக்கள்.

பண்டிதர் ம.செல்வராசா அலெக்சாந்தர்.

மனதினைப் பிணிக்கும் மனுவல் யேசுதாசன்

"வயது பதினாறு" என்ற சிறுகதைத் தொகுதியை மிகவும் சிறப்பான முறையில் வெளியீடு செய்து அனைவரினதும் அன்பினையும், பாராட்டினையும் பெற்ற மனுவல் யேசுதாசன் அகவை அறுபது கண்டு மணிவிழா காண்கிறார். இவர் அனைவர்க்கும் நண்பர், அனைவருக்கும் உதவுபவர், எவரையும் மதிக்கத் தெரிந்த பண்பாளர் எனினும் அவரது தமிழ் உணர்வு அவரது சட்டத்தரணி என்ற அவரது தொழிலையும் மீறி நிற்கின்றது. பன்முக ஆளுமை கொண்ட இவரது ஆற்றல்கள் எவரையும் ஈர்ந்து விடத்தக்கவை, வியப்பூட்டுபவை.

1996ல் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்திய ஆறாவது உலகத்தமிழ் பண்பாட்டு மகாநாட்டின் போது மிகவும் திறம்பட செயலாற்றிய அவர் தமிழர்க்கு கிடைத்த ஒரு கொடை என அன்று புரிந்துகொள்ள முடிந்தது. ஒரு சட்டத்தரணியாக காரியாலயத்திற்குள் செயல்படுவதிலிருந்த சில சந்தர்ப்பங்களில் தன்னை விடுவித்துக் கொண்டு அனைவருடனும் தோழமையுடன் பழக ஆரம்பித்த இவர் படிப்படையாக தனது ஆற்றல்களை வெளிக்காட்ட ஆரம்பித்தார். இந்த சூழ்நிலையில் தான் அவர் மீது எனக்கும் மிகுந்த ஈர்ப்பு ஏற்பட்டது. பல விழாக்களிலும் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்ட அவர் சிறந்ததொரு கூத்தாட்ட கலைஞர் என்பதிலேயும் தன்னை வெளிக்காட்டி நின்றார். இயல்பாகவே கலையாற்றல் நிறைந்த அவர் எதுவித தயக்கமும் இன்றி தனது பங்களிப்புக்களைச் செய்து எம்மவர் மனங்களில் ஆழமாக வேரூன்றி நின்றார். மலர்ந்த புன்னகையுடன் எவர் மனதையம் கவர்ந்துகொள்ளும் இவரது காந்த சக்தி என்னை வெகுவாக கவர்ந்து நின்றது.

ஆரம்பத்தில் அவரது வாழ்க்கை வரலாறு பற்றி எதுவும் எனக்கு தெரிந்திருக்கவில்லை. படிப்படியாக அவரது உரைகள் மூலமாகவும், கருத்து பரிமாறல்கள் மூலமும் பல சூழ்நிலைகளை புரிந்து கொள்ள முடிந்தது. மிகவும் எளிமையான குடும்பமொன்றில் பிறந்து பல்வேறு போராட்டங்களுக்கூடாக கல்வி கற்று சட்டத்தரணியாக மாறி சொந்த நாட்டிலும் அந்நிய நாட்டிலும் கடமை புரிந்து இங்கு வந்து குடியேறியவர் என்பது மட்டும் தெரிந்து

கொள்ள முடிந்தது. வாசிக்கும் திறன், சிந்தனை ஆற்றல், துருவி அறியும் நோக்கம், பொறுமை என்பற்றிலும் இவரது முழுமையும் வெளிவந்தது. சில சந்தர்ப்பங்களில் அவரது காரியாலயத்தில் அவருடன் உரையாட சந்தர்ப்பம் கிடைத்தது, எனினும் அவரது முழுமையையும் அறிவதற்கு சந்தர்ப்பங்கள் உதவவில்லை. “சட்ட அறினை பின்பலமாகக் கொண்டு தமிழிலக்கியத்தில் மற்றொரு பரிமாணத்தை எற்படுத்தியுள்ளார்” என்ற அரிய கருத்தினை தமிழ் ஒளி நா.சோமகாந்தன் அவரது நூலில் கூறியுள்ளார்.

மனிதனது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைக் காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை மறக்க முடியாத மானுடராக மாற்றிவிடுகின்றது. இந்த கருத்தினை ஏற்றுக்கொண்ட மாக்சிம் கோர்க்கி “மனிதன் எத்தகைய அற்புதமானவர்” என்றார். இதற்கு மிகவும் பொருத்தமாகி நிற்பவர் மனுவல் ஜேசுதாசன். பன்முக ஆளுமையும் மானிடப் பண்புகளும் கொண்டு அவர் புனை பெயரில் வாழாத ஒருவர்.

மணிவிழாக் காணும் மனுவல் அவர்கள் 1999ல் “90 நாட்களுள்” என்ற முதல் நாவலை வெளியிட்ட வேளையில் தான் சிறந்த கற்பனை வளமுள்ள படைப்பிலக்கிய வாதியாக அனைவரும் கண்டோம். 2001 தமிழர் தகவல் விழாவில் அவரது தலைமைத்துவத்தின் சிறப்பினை உணர்ந்தோம். 2003ல் உதயன் விழாவில் அவரது “வேந்தனின் சீற்றம்” நாட்டுக்கூத்தில் அவரது நடிப்பாற்றலை இரசித்தோம். 2004ல் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் பங்களிப்பைக் கண்டோம். சிரிபிசி வானொலியிலும் ரி.வி.ஐ தொலைக்காட்சி சேவையிலும் பல நிகழ்ச்சிகளை நடத்தியதால் ஒரு நிகழ்ச்சி தயாரிப்பாளராகத் தரிசித்தோம். பல மேடைகளில் அவரது பேச்சாற்றலைக் கண்டு வியந்தோம். தனது புதல்விகளை இணைத்து மேடையில் அவர் தோன்றும் ஆளுமையை கண்டு இன்பூற்று எய்தினோம்.

ஒரு தசாப்ததிற்கு மேலாக நட்புரிமையுடன் அவருடன் பழகிய வேளையிலும் என் மனதில் என்றுமே அழியாத ஒரு நினைவு உண்டு. தமிழர் தகவல் விழாவில் எனக்கு ஒரு இலக்கிய விருது கிடைத்து மகிழ்ச்சியுடன் வெளியேறி கார் தரிப்பிடத்துக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது மனுவல் ஜேசுதாசனும் அங்கு வந்து

கொண்டிருந்தார். மகிழ்ச்சியுடன் கட்டித் தழுவி இறுகப் பிடித்து உயரமாக தூக்கி நிறுத்தினார். நான் எதிர்பாராத நிகழ்ச்சி. அவரது உயர்ந்த எண்ணத்தினை அன்றிலிருந்து புரிந்து கொண்ட நான் இவ்வருடம் அவருக்கு தமிழர் தகவல் விருது கிடைத்த வேளையில் இதனை நினைவுபடுத்தி பற்றி அணைத்து தூக்க முயன்றேன். அவர் புன்னகைத்தபடியே அணைத்துக் கொண்டார். பல்வேறு சந்தர்ப்பங்களில் எனக்கு ஆலோசனை வழங்கியும், எனது சிந்தனைப் பூக்கள் நாவல் முதல் பிரதியைப் பெற்று வாழ்த்தியும், வசீகரமான குரலால் எனக்கு பல கருத்துக்களைக் கூறியும் குடும்பத்துடன் இணைந்த நண்பனாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனுவல் ஜேசுதாசனின் மணிவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

எஸ்.பத்மநாதன்
சிந்தனைப் பூக்கள் ஆசிரியர்

பன்முகப் புலமை வித்தகர்

நண்பர் மனுவல் ஜேசுதாசனை இங்கு அறியாதார் யாருளர்?

அவரது திறமைகளை, சாதனைகளைத் தெரியாதவர் எவராவது இருப்பரோ?

இந்நிலையில், அவரது அகவை அறுபது நிறைவுச் சிறப்பு மலரில், அவரைத் தெரிந்த எல்லோரும் எழுதும் தொகுப்பில், புதிதாக எதனைத்தான் எழுதுவது? இது எனக்குள் எழுந்த கேள்வி.

"என்னவாக இருப்பினும், எழுதத்தானே வேண்டும்" என்பதே இதற்கான பதிலாக அமைவதால், எழுதுகின்றேன்.

நான் கனடா வருவதற்கு ஈராண்டுகளுக்கு முன்னராக அவர் இங்கு வந்து விட்டதால், அவர் எனக்கு 'மூத்தவர்'.

இலங்கை, இங்கிலாந்து, கனடா ஆகிய மூன்று நாடுகளில் சட்டம் பயின்று பட்டம் பெற்றதவராதலால் சட்டத்தைக் கரைத்துக் குடித்தவர். இவரது தாயார் பிரகாசி ஆசீர்வாதம் அவர்கள் ஓர் இயற்கை வைத்தியர் - பரியாரியார். எத்தனை நோயாளர்களுக்கு மருந்து கரைத்துக் கொடுத்திருப்பார்.

மனுவல் அவர்கள் நல்லதொரு நாட்டுக்கூத்துக் கலைஞர். இவர் தமது மகள்மார், உறவினர்களுடன் இணைந்து நடித்த காத்தவராயனை ரொறன்ரோவில் பார்த்து, யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இருப்பது போன்ற கற்பனா சுகத்தில் திளைத்தவன் நான்.

இந்த நாட்டுக்கூத்தை நெறிப்படுத்தி, தயாரித்து அரங்கத்துக்குக் கொண்டு வந்தவரும் இவரே! இவரது தந்தையார் மனுவல் ஆசீர்வாதம் அவர்கள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ் பொலிந்த ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர் - அண்ணாவியார்.

திரு. ஜேசுதாசன் பேனா பிடிப்பது அகதிக் கதையை குடிவரவு விசாரணைக்கு எழுத மட்டுமல்ல; அதனையே அழியாவரம் பெற்ற இலக்கியமாக்கவும் அவருக்குத் தெரியும்.

'தொண்ணூறு நாட்களுள்' (1999) நாவல் நூல் இவரது முதற் பிரசவம். அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களுக்கு 'தொண்ணூறு நாட்கள்' ஒரு கண்டம். வட அமெரிக்கக் கண்டத்தில் இவர் படைத்த இலக்கியச் சாதனை இந்நூல்; 90

நாட்களிலேயே எல்லாப் பிரதிகளும் விற்று முடிந்து விட்டனவாம்.

இளமையின் குருத்து பதினாறு வயது. தமது சிறுகதைத் தொகுதிக்கு (2007) இவர் இட்ட பெயர் 'வயது பதினாறு'. கனடிய இலக்கிய வளவுக்குள் இளமையாய் நின்றுலாவும் இந்த நூலின் அரங்கேற்றத்தில் நண்பரை அறிமுகம் செய்து உரையாற்ற எனக்குத் தரப்பட்ட வாய்ப்பு கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?

கட்டுரைகள் எழுதுவாரோ? ஓமோம்! நன்றாக எழுதுவார். விளக்கமாக எழுதுவார் - வில்லங்கமாகவும் சிலருக்குத் தெரிந்ததுண்டு.

கனடாவில் இவர் முதலாவதாக எழுதிய கட்டுரை 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் வந்தது - இது சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர். இன்றுவரை தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் எழுதி வருகின்றார். இடைக்கிடை மாத இதழ்களிலும் எழுதுவார் - முழுநேர சட்டவாதியாகப் பணியாற்றுவதால் ஒவ்வொரு மாதமும் எழுத முடியாதே!

கலை, இலக்கியப் பரப்புக்கு அப்பால் 'பொதுச் சேவை சமூக வாழ்வு' என்றும் ஒன்றிருக்கின்றதல்லவா? அதிலும் திரு. மனுவல் ஜேசுதாசன் சளைத்தவரல்லவே!

'சேக்கம்' அமைப்பு, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி கனடாச் சங்கம், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம்... இப்படி இவரது சேவையைப் பெற்ற அமைப்புகள் பல. முக்கியமான ஒன்றை மறந்து விட்டேன் - 1996ல் ரொறன்ரோவில் நடைபெற்ற உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது சர்வதேச மாநாட்டின் செயலராக நின்று உடல், பொருள் இரண்டையும் செலவிட்டு, அதன் வெற்றிக்காக உழைத்தவர்.

வானொலி, தொலைக்காட்சிகளின் உரையாடல்களிலும் வல்லவர் நண்பர் மனுவல்.

சில சந்தர்ப்பங்களில் ரிவிஜ தொலைக்காட்சி உரையாடல்களுக்கு இறுதி நேரத்தில் 'ஒரு கை' தேவைப்பட்ட போது, அழைப்புக்கு மறுக்காமல் சென்று சுடச்சுட பங்கேற்றதை நானறிவேன். குறுகிய கால அழைப்பானாலும் ஜமாய்த்து விடுவார். மனம் திறந்து பாராட்டுகிறேன். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். உண்மைதான்!

திருமதி மொனிக்கா ஜேசுதாசன் அவர்கள் கணவரின் சட்ட அலுவலகத்தின் உதவியாளர் என்றுதான் அழைக்கப்படுவார். ஆனால், அந்த அலுவலகத்தின் முதுகெலும்பு அவரே. பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை.

பிள்ளைகள் மூவர். மூத்தவள் அஜந்தா பட்டம் பெற்ற மருத்துவர்; நடுவிலாள் அஜிதா சட்டத்தில் பட்டம் பெற்றவர். இளையவள் அனிதா யோர்க் பல்கலைக் கழகத்தில் நிதித்துறைக் கல்வியில் இந்தாண்டு சிறப்புப் பட்டம் பெறுகின்றார்.

மூவருமே கவின்கலை வல்லாளர்கள். கூர்மதியாளர்கள்.

மனுவல் ஜேசுதாசன் - மொனிக்கா தம்பதிகள் தம் புதல்விகளால் மூன்று மருகர்களை, மறு - மகன்களாய்ப் பெற்று, பாட்டா பாட்டியாகி... குடும்பம் பெரு விருட்சமாகப் போகிறது.

தமிழ் பஞ்சாங்கக் கணிப்பு அறுபது வருடங்களைக் கொண்டது. இதனால், அறுபது வயது பூர்த்தி என்பது ஒரு சுற்று வட்டப் பயணத்தின் வெற்றியைக் குறிக்கின்றது. நண்பருக்கு அறுபது வயதாகி விட்டதாம். காலம் பொய் சொல்லாது என்பதால் நண்பர்கள் ஒன்றிணைந்து மணிவிழா எடுக்கின்றோம்.

அறுபது வயதில் பயணிக்கும் வேளையில், அவருக்கு 'தமிழர் தகவல்' இந்தாண்டு விருதினை 'பன்முகப் புலமை வித்தகர்' (Multi-Faceted Excellence & Discipline Award) என்ற மகுடத்தில் 2008 பெப்ரவரி 17ம் நாள் வழங்கியமை சாலப் பொருத்தமானது.

அரங்கினில் ஆடிப்பாடும் கலைஞனாக, அற்புதக் கதைகளை ஏட்டினில் ஏற்றும் கதைஞனாக, நீதிமன்றில் தம் கட்சிக்காரருக்கு நீதி வேண்டி வாதிடும் சட்டவுரைஞனாக, குடும்ப வாழ்வில் ஒளியேற்றும் பகலவனாகப் பவனி வரும் திரு. மனுவல் ஜேசுதாசன் வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டு விழாக்களைக் காண உளமகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
தமிழர் தகவல்

சட்டத்தரணி திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களின

மணிவிழா

19.05.2008 சனிக்கிழமை துரந்தை மாநகரிற்
கொண்டாடப் பெற்றதுன்று மணிவிழாக்குழு சார்பிலே
பாடி வழங்கிய

வாழ்த்துப் பா

தங்கமனு வல்ஜேசு தாசன் அவர்களுக்குச்
சங்கம் எழுச்சிகொளல் தானென்ன - பொங்கும்
அகவை அறுபதுவோ ஆண்டுபல மேலும்
தகவே எழுக தழைத்து.

சட்டம் அறிந்தமகன் தானேதன் வாழ்வுக்கும்
சட்டம் அமைத்துத் தமிழர்தம் - மட்டில்
ஒழுக்கத்தை ஓம்பும் மனுவல்தன் னுள்ள
விழுப்பம் பெரிதே மிக.

மண்ணீரைத் தென்னை இளநீராய் மாற்றுதற்கு
முந்நூறு வாரம் முனைந்திடுமாம் - கண்ணீரைத்
தொண்ணூறு நாளில் மனுவல் துடைத்தின்பப்
பன்னீராய் மாற்றிடுவார் பார்.

கறங்கான வேலைக் கனதிமிகுந் தாலும்
உறங்காத ஊக்க உணர்வால் - திறங்கொள்
சிறுகதைகள் நீள்கதைகள் கட்டுரைகள் சேர
அறுவடைகள் செய்வார் அறி.

காலைநறும் பூமலரும் காலைகுயில் கூவியெழும்
மாலை குமுத மலர்சிரிக்கும் - சீல
மனுவல் முகம்பூக்கும் மாசில் சிரிப்பு
கனியும் பொழுதெல்லாம் காண்.

கோட்டுச்சூட் டோடுநிதம் கோட்டுக்குப் போனாலும்
நாட்டுக்கூத் தாடுதற்கு நாணாதார் - கூட்டியெம்மைப்
பண்டைத் தமிழ்க்கலைகள் பாங்கை உணர்த்திவரும்
தொண்டுக் கிணையுமுள தோ.

நடிப்பதிலே மன்னன் கொடுப்பதிலே கன்னன்
படிப்பதிலே விண்ணன்தன் எண்ணம் - முடிப்பதிலும்
ஆர்வத்தன் ஆனாலும் யாவும் மொனிக்காவின்
பார்வைக்குள் கட்டுப் படும்.

நல்ல துணைமொனிக்கா நாகரிகத் தண்மலர்க்கா
செல்லச் சிரிப்புச் செழிக்குங்கா - சொல்லும்
குணங்கள் கொலுக்கொள்ளும் கோலக்கா மூன்று
அணங்குகளைத் தந்ததா யார்.

வாழி மணிவிழாக் காணும் மனுவலுடன்
வாழி மனைமொனிக்கா மாண்புறவே - கேழில்
புதல்வியரும் வாழி புவிபோற்ற நீடு
கதிரவன்போல் நாளும் கதிர்த்து.

வி. கந்தவனம்

A TRIBUTE TO A GREAT PERSONALITY ON HIS 60TH BIRTHDAY

When I was asked by a beautiful lady to write a few words about her handsome partner who happens to be a good pal of mine I was lost for words. The only question I asked her was what the occasion is. She was reluctant at first for obvious reasons then as I insisted said in a very timid manner that the love of her life is turning three score. Boy! Did that hit me in the solar plexus or what?

Why? This gentleman is not only a good pal of mine for decades but also one who I admire. We are of the same generation and my own living duration hit me. The only thing that prevented me from going into a deep depression or jumping from Mount Everest was that I had company. I had not only company but a damn good one too. In case folks you are wondering who I am referring to it is Barrister Manuel Jasudason.

Getting on age is unavoidable. Episode in life. Turning sixty is an event that many cultures all over the world celebrate. The number 60 has a particular significance in Hinduism and Indian culture. The Hindu culture goes through a cycle of 60 names called Samvatsares. Planet aligns themselves into a straight line every 60 years and the sun's pull away from the earth is celebrated by the Mahara Sankranthi. Sixtieth birth days are also celebrated because adults have a tendency to return to childhood and become childlike and more innocent when they turn 60.

Talking about childlike my friend irrespective of all his achievements has a down to earth personality. Can you imagine him at the present context? A gentleman to his fingertips, an asset to his family, backbone to his community, and a person who carries himself well in all circumstances. In spite of all the success he has achieved

Both in his professional life as lawyer and his community life as a shinning example to follow. His humility knows no bounds,

I can write pages about my pal from my college days, through our lives here. It is such a pleasure that even our professional lives cross here although in different directions. We have remained close and very friendly. A lot of experiences and jokes we share are flashing through my mind but space constraints force me to close my short narrative of this great man here

HAPPY B'DAY PAL, MY FAMILY JOINS ME IN WISHNG YOU MANY HAPPY RETURNS.

RAYMOND AND MAUREEN SANTIAGO

My Father is a mentor, healer, motivator...

When I was a toddler I used to call him uncle. His visits were highly anticipated, considering how those visits never failed to bring books, clothes and toys. It was only when we moved to Seychelles to live with him that I began to know my father.

As far back as I can remember my father never hesitated to do anything. Leaving a young wife and a newborn child, he set out on journeys that brought him closer to his goals and took on many challenges. It is only now in my adulthood I can truly appreciate his courage, determination and forward thinking. He was adamant that life had more to offer his family. So began the adventure that would take my family across continents.

According to my father, dreams were an absolute necessity. His three girls were always encouraged to dream high. As dreams have no limitations we were never told that we could not do something. Our ideas and opinions were never insignificant and thus, we would voice our opinions proudly. We were told dreams were the seeds to what becomes the reality in the future.

I remember one incident when dad showed us a pencil sketch of a bungalow house existing in his mind saying that we were going to live there one day. Lo and behold we soon found ourselves living in a replica of that sketch. A regular mantra in our family is “Jesudasan's never quit, we finish what we start”.

Another story, I must convey, is one that inspires me. As an immigrant with a new family, my parents lived in a mediocre apartment around Jane and Finch. One day as my parents made their daily trek across the York University

campus, my father caught a glimpse of Osgood Hall Law School. At that moment, he turned around to his young wife and said, "This is the school I'm going to go to". And he did. Even in times of hardships, he dreamt the impossible, and for that my family and I are forever grateful.

Over the years I have noticed that when my father becomes passionate about something he becomes enflamed with a blazing energy from within. This energy is highly contagious to those around him. My sisters and I cannot help but feel swept away by his enthusiasm and volunteer to take part his endeavors.

He is a person always looking to learn new things, often heard saying "every man is my teacher in that I learn from him." To the outside world he is known as a husband, father, lawyer, orator, and artist. To me and my sisters, he is a mentor, healer, motivator, confidante, critic, and our own personal cheerleader.

Dr. Ajantha Jesudasan
BSC, M.B.B.S

So Jesu, tie all friends to your heart

I was so happy and honoured when Monica called me to ask that I write a few words in the souvenir booklet to be printed to recognize the 60th birthday celebration of my friend, Manuel Jesudasan, who I call affectionately, Jesu. It is indeed a unique and wonderful idea to print a souvenir to honour the person who has reached such a milestone in his life.

My dear friend Jesu not only added years to his life like every one of us, but instead he has added LIFE to his years. We all learn how to make a living but one is not taught how to make the most of life. Jesu is a classic example of a man who is really enjoying life to its fullest. He has so much enthusiasm and tackles everything that life throws at him with energy and a positive attitude.

I have known Jesu and his family since we arrived in Canada in 1986. We both started our lives together in Canada in the early days and our children played and grew up together. I always enjoyed his company. He was a good scrabble player and a great entertainer. We used to spend many late nights challenging each other with newly "created" words that were not found in the dictionary.

I am a very spiritual person who is always keen to learn about different philosophies. As a lawyer, Jesu taught me the "Law of Compensation in Life" and he says that what we give to others comes back to us multipled many times. I say his achievements in life are due to his optimistic approaches. He accepts with open arms all adverse situations and looks for a hidden positive meaning behind everything. Thank you Jesu for being such a positive influence in our lives!

I would like to take this opportunity to wish Jesu and his wonderful loving family, a long life, happiness, good health and peace. I would like to end this note with the following quote:

"Friends are like balloons. Once you let them go, you can't always get them back"

So Jesu, tie all friends to your heart!

God Bless!

With love,
Jay Jeyandran

Thirty-five years and counting…

I could not resist laughing when the organizers of this event asked me to write an article about Manuel to publish in the souvenir to be released on the occasion to mark his sixtieth birthday. What made me laugh was some of the things that immediately came to my mind, which I thought I could write about. I probably know too much about him. Manuel certainly would not want risk me writing about him, because he knows what I know. There are things that I cannot write without putting him in to trouble with Monica, which I know he cannot handle. Besides, tradition calls that you write only the good things in such an article. Therefore, the juicy stuff has to wait for another occasion.

I met him for the first time in 1973 at Sri Lanka Law College. I do not think I would have come to know him if he is not a person who loved to have fun. He was one year senior to me, and therefore I frankly did not know what he did in his first year at Law College. My early recollection of him was that he was always with a crowd who obviously came to Law College to study. I cannot even remember the names of people who he was associated with at that time. He was just another inconspicuous individual.

We had what is called a Law Medical cricket match, the annual cricket match between the Law College and the Colombo Medical College. The event is considered a failure even if the teams were allowed to get to the field and played one over of cricket. It was up to the future lawyers, judges, physicians and the surgeons to make the event a success. There used to be many pre-parties to get everyone in the right mood to make that event a success. I was rather surprised to see Manuel in one of those pre-parties. I even wondered what he was doing there. As it turned out we all had a wonderful time. He was among the ones who had more fun than the rest, because he lived in a hostel far away from his family. There will be no questions asked when he returns to the hostel no matter what condition he was in. Anyway, he did his part to make the cricket match a success that year.

He went back to Jaffna to practice law after taking his oaths as an Attorney-at-Law. I did not keep in touch with him during this period. But, I heard about him from time to time. I heard that he was bicycling to Jaffna Courts. This did not surprise me nor will it surprise anyone who knows him. He is so simple and down-to-earth type of person. One day I heard he had gone to Seychelles. Later I heard he was in England. Then all of a sudden, on a day in 1985, I saw him in a shopping mall in Montreal, Quebec.

I have not lost touch with him since that day. The friendship that started at a pre-party in Colombo has lasted thirty-five years and counting. In the thirty-five years he has taken different roles in my life. Above all, he had been my mentor and the principal under whom I did my required articling to become a lawyer in Canada.

He can really be a nag. He took steps to become a lawyer in Canada. He wanted me to do the same. I had a permanent and a reasonably good job, and was not at all interested in becoming a lawyer in Canada. I told him so. He just would not let that subject go. He pushed me, called me a loser, called my job a no job and kept on nagging until I finally gave in. It was not easy for him; it took him years to make me do what he wanted, not for himself but for me. I cursed him when I had to spend long hours studying while others of my age were having a relaxed life. His effort did not go waste. I am sure he was happier than I was, when I completed my studies and got a three-fold promotion because of my newly acquired credential. He is one of those rare personalities, who wished others well and found happiness in the success of others without expecting anything in return.

I do not know if people liked his company or he liked to be in company with others. Probably it is the combination of both. There have not been many weekends on which he did not have to attend one function or another. The weekday functions are not exempt either. He related with many people, family and friends; there were so many committees of which he is a member of and played an active and prominent role. Where he found the energy and the ability to balance his private and more public life without letting either of it lacking his attention is a mystery to me. I had the

opportunity to meet not just his family but also his relatives, of whom there are many, close and extended and many of his friends including very prominent people. He is so lucky to have such wonderful people around to support him in many different ways.

I had and continue to have the opportunity to talk with him a lot. We talk about everything from scholarly matters to mere gossips. He will freely talk about matters that were close to his heart. He will also talk about matters that hurt his heart. He will proudly speak about his father and his ability to write folk songs. He will talk about his father's effort to make him the first person in the family to leave the village for higher studies. He talked about how determined he was to attend the funeral of his father in Jaffna in 1995, and the nightmarish travel experience he had in the process. He is a father of three talented daughters. I know they are talented because I know them as well as I know Manuel. He will talk about his children. I am certain he is proud of them but I have never heard him boasting about their achievements. He will also talk about his desires including his desire to write and act more. He will talk about things that he planned doing, but did not for different reasons. One of them would have had him serving food at a restaurant while Monica cooking at the back. This plan did not go any further than choosing a name for the restaurant. He still regrets missing the opportunity to become the first restauranteur to serve Sri Lankan food in Toronto.

He had a vision. There are law firms in Toronto with more than hundred lawyers working in partnership or in association. He wanted his office to become one like that. He realized that it cannot be done overnight or in a matter of few years, but could take many years. He wanted to lay the foundation for such a firm. All he had to do was take one partner or an associate then another and another. There were many who came to him, lawyers, articling students-at-law and lawyers from Sri Lanka who were working towards becoming lawyers in Ontario. Some opted to come to him, for some he was the last resort. He believed in every one of them. He thought he was well on his way, when at one point he had four lawyers working out of his office. They did not stay long with him. Not all parting was pleasant. He was hurt by each and every departure, although it did not hurt his practice or his desire to move forward.

May be they did not believe in him or may be they had their own visions. All of them individually became success. Together, they could have been even more success. It was not to be.

Has he given up the hope of seeing his vision becoming a reality? Manuel I know is not a person who gives up on anything that matters. I am certain many more will come to him, including Belinda, his daughter. At sixty, he is too young to give up on his vision. I wish him well.

Veluppillai Indrasigamany
Barrister & Solicitor
Tribunal Officer
Immigration and Refugee Board
Toronto.

அன்பும் எளிமையும் கொண்ட ஒரு பண்பாளர் - மனுவல் ஜேசுதாசன்

"சட்டம்" என்ற சொல், கட்டுப்பாடு, கறார், கண்டிப்பு என்று தொனிப்படும். ஆனால் அதைக் கற்று தன் தொழிலாகக் கொண்டாலும், இளகும் மனதுடன், இனிமையான சுபாவத்துடன், சமூகத்தில் எல்லோராலும் விரும்பப்படும் ஒருவராக விளங்கமுடியும் என்பதற்கு நான் அறிந்தவரையில் ஒரு உதாரணமானவர், சட்டத்தரணி மானுவல் ஜேசுதாசன் அவர்கள்தான்.

அவர் இப்படி விளங்குவதற்கு காரணம் எதுவாக இருக்குமென்று யோசித்துப் பார்த்தேன். அவர் நெஞ்சில் ஊறிப்போன கலை உணர்வு ஒருமுக்கிய காரணி என்பது எனக்கு புலனாகியது.

பொதுவாகவே கலைஞர்கள் இளகியமனத்தராக இருத்தல் வேண்டும். அவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவது உண்மை. இதற்கு விதிவிலக்குகள் இருக்கலாம்.

எங்கள் சமூகத்தில் சட்டத்தரணிகள் புகழ்பெற்ற பேச்சாளர்களாக இருந்தார்கள். அரசியல்வாதிகளாக மிளிர்ந்தார்கள். ஆனால் கலைஞர்களாக இருப்பது அரிதிலும் அரிது.

இது எப்படி சாத்தியமானது..?

யாழ் மாவட்டத்தில் நாட்டுக்கூத்து மரபின் அச்சாணியாக விளங்குகின்ற ஒரு சூழலில் அண்ணாவியார் குடும்பத்தில் மானுவல் ஜேசுதாசன் அவர்கள் பிறந்தவர். அவரது தந்தையார் ஆசீர்வாதம் அவர்களே ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியாராக இருந்தவர். எனவே மானுவல் ஜேசுதாசன் அவர்கள் சிறுவனாக இருந்த காலத்திலேயே அந்த பாரம்பரியக் கலைவடிவத்தினால் ஈர்க்கப்பட்டவர்.

ஆட்டமும், பாட்டும், எட்டுப்போடுதலும், கொப்பி பார்த்தலும் அவருக்கு பரிச்சியமானவை. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பார்கள். இது ஐந்திலேயே வளைந்து ஆடியது. எனவே ஐம்பதிலும் வளைந்தாடியது எனக்கு ஆச்சரியமாகவிருக்கவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவில் உள்ள சாந்த. பட்றிக் கல்லூரி பழைய மாணவர்கள் நடத்திய ஒரு கலைவாழ்வில் அரங்கேறிய "வேந்தனின் சீற்றம்" என்ற ஒரு நாட்டுக்கூத்தில் ஆட்டமும், பாட்டுமாக அவர் சுழன்று ஆடியதைத் தான் குறிப்பிடுகிறேன்.

அதைப்பார்த்துவிட்டு என்மனதில் ஊறப்போட்டு வைத்த எண்ணத்தின் வெளிப்பாடாக, நான் தொலைக்காட்சியில் "வை. ரி. லிங்கம் ஷோ" நிகழ்ச்சித் தொடரில், ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞராக தோன்றும்படி அவரை விரும்பி அழைத்தேன். அவரும் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் என் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பார்த்தவர்கள் ஆச்சர்யப்படும்படி, அனுபவம் வாய்ந்த ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞனை எங்கள் கண்முன் கொண்டு வந்து, என் நிகழ்ச்சிக்கு பெருமை சேர்த்தார்.

"இப்படியும் செய்யலாமோ.. மனந்துணிந்து அவன் இப்படியும் செய்யலாமோ" என்று தொடங்கி அவர் மூச்சுவிடாமல் பாடி நிறுத்திய விருத்தம் என்நினைவில் நிற்கிறது. அந்த நிகழ்ச்சியில் தன்னைப் பார்த்த தன் நெருங்கிய நண்பர்கள் கூடத் தன்னை இனங்கண்டு கொள்ளவில்லையென்று எனக்கு பின்னர் சொல்லி மகிழ்வடைந்திருக்கிறார்.

1996ல் ரொரன்ரொவில் நடந்த 6வது உலகத் தமிழ்ப்பண்பாட்டு மகாநாட்டு நடைபெற்ற வேளையில் நான் முதன்முதலாக அவரை மேடையில் பார்த்தேன். அன்று தொடக்கம் இன்றுவரை தமிழ்விழாக்கள், வெளியீட்டு விழாக்கள், நாடகவிழாக்கள் எதுவானாலும், அவரது ஆதரவும், பங்களிப்பும், பிரசன்னமும் நிகழ்ந்தே வருவதை அறிந்தவன் நான்.

அண்மையில் "தமிழர் தகவல்" சஞ்சிகையினர் அவருக்கு வழங்கிய "பன்முகப் புலமையாளர்" என்ற விருதுக்கு அவர் எத்துணை பொருத்தமுடையவர் என்பது யாவரும் அறிந்ததொன்று. சிறுகதை எழுத்தாளராக, கட்டுரையாளராக, ஒலிபரப்பாளராக, கலைஞராக. சமூக சேவையாளராக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

அவரை எங்கள் சமூகம் எவ்வளவு நேசிக்கிறது என்பதை 2007ல் அவரது "வயது பதினாறு" சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழாவிற்கு வந்த ஜனத்திரள் நிரூபித்தது. பல்வேறு துறை சார்ந்தவர்களும் அங்கே குழுமியிருந்தார்கள். எல்லார்க்கும் இனியராக இருத்தல் மிகவும் சிரமமான காரியம், ஆனால் அவருக்கு அது சாத்தியமானது.

"வாழ்வில் வெற்றி பெற்ற மனிதனுக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்" என்பார்கள். இவரைப் பொறுத்தவரையில் இதையே "வாழ்வில் மேன்மை பெற்ற ஒரு மனிதரின் பின்னால் அவரது மனைவி இருக்கிறாள்" என்று மாற்றிச் சொல்வதை நான் விரும்புகிறேன். வாழ்வில் வெற்றி பெறுவது பெரிதல்ல. மேன்மைக் குணமுடையவராக விளங்குதலே சிறப்புடையது என்பது என் தாழ்மையான கருத்து.

திரு. ஜேசுதாசன் அவர்களைப்போலவே, அன்பும், பண்பும், எளிமையும், இன்முகமே நிரந்தரமாக குடிகொண்ட பாங்குமுள்ள திருமதி ஜேசுதாசன் அவர்களைக் காணும்போது மேற்குறித்த வாக்கியம்தான் நினைவுக்கு வருகிறது. தன் மூன்று பிள்ளைகளுக்கும் கல்வியோடு, கலையார்வத்தையும், பண்பையும், அடக்கத்தையும் ஊட்டிவளர்த்ததில் இவரது பங்கும் கணிசமானது.

“நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்” என்றால் அதற்கு சான்று எங்கள் நேயத்துக்குரிய மானுவல் ஜேசுதாசன் அவர்களின் குடும்பந்தான் என்பதில் மாற்றுக்கருத்து எனக்கில்லை. காரணம் அந்த ஆழமான அன்பினை நிதர்சனமாக உணர்ந்தவர்களில் நானும் ஒருவன்.

நான் நோயுற்றிருந்தவேளை, தனது தொழில் சார்ந்த எத்தனையோ பணிகளை ஒத்திவைத்து விட்டு, எனது இருப்பிடத்திற்கு வந்து, என்னோடு பல மணித்தியாலங்கள் (ஒரு பகற்பொழுது முழுவதும்) செலவழித்து, ஆறுதல் சொல்லி, ஆதரவு காட்டிய அவரை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது “துன்பம் நேர்கையில்” என்று தொடங்கும் பாவேந்தன் பாரதிதாசனின் கவிதை ஏனோ ஞாபகத்திற்கு வந்தது. அவசரமாக அந்தக் கவிதைத் தொகுப்பை எடுத்து வாசித்தேன்.

அந்தக் கவிதை வரிகள் இவ்வாறு தொடர்ந்து சென்றன…

“வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க எம்
வாழ்வில் உணர்வு சேர்க்க நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா கண்ணே
ஆடிக்காட்ட மாட்டாயா.”

“அன்றை நற்றமிழ்க் கூத்தும்”, “ஆடிக்காட்டலும்” யாருக்கோ பொருந்தி வருகிறதல்லவா?

எனக்கு புரிந்தது. உங்களுக்கு புரியாமல் போகாது.

எல்லோர்க்கும் பொதுவான இறையருள் அவரையும், அவர் குடும்பத்தாரையும் பேணிப் பாதுகாக்க இறைஞ்சுகிறேன்.

கே. எஸ். பாலச்சந்திரன்

அகர வரிசையில் ஆசீர்வாதம்

அகவை அறுபது கண்ட **மனுவல்! ஆசீர்வாதம்**

ஆற்றல் மிக்க கனடிய சட்டத்தரணியாம் **ஜேசுதாசன்**

இல்லறத்தில் இல்லத்தரசியுடன் மூன்று இளவரசிகள்

ஈழத்துப் பாரம்பரிய நாட்டுக்கூத்துக் கலைஞர், கனடாவில்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு முதல் நிர்வாக செயலர்

ஊரில் நலம் காக்க IMHO நாடி உதவி நல்கியவர்

எளிமையாக வாழ்ந்து எல்லோர்க்கும் உதவுபவர்

ஏமாற்றங்களைக் கண்டு கலங்காமல் உழைப்பவர்

ஐக்கிய இராச்சிய Solicitor சீசெல்ஸ் அரசவழக்கறிஞர்

ஒரு நாவல் 90 நாட்களுள், ஒரு சிறுகதைத்தொகுப்பு வயது16

ஓம் என்றால் ஓம் தான், நிதானமான பண்பாளர்

ஔவைத் தமிழில் TVI, CTBCல் பேட்டிகொடுப்பவர்

அஃகாது நாளும் இயேசுவை ஆராதிப்பவர்.

மாமன் மாமி தம்பதியரின் திருமண சஷ்டியப்த பூர்த்தி
ஆண்டில் மருமகனுக்கு சஷ்டியப்த பூர்த்தி.
என்ன பொருத்தம்.

எங்கள் வாழ்த்து

திரு. திருமதி. கதிர் துரைசிங்கம்

Memories

***M**anuel Jesudasan I call him Mr. 'J'*

***E**xcellent charmer he is, as one would say*

***M**onica, his better half, is always his right hand*

***O**n stage he reminds the folk theatre of our motherland*

Remember, he is always a classic gentleman
In case of problems, an amiable ombudsman

Elegant in dress, he heads for court like a Tarzan
Serious writer and author, ever smiling Jesudasan.

Let me join my family and office friends
In wishing him good luck and success in future
On this special day of his 60^{th} birthday.

With best wishes,

Fran Jeganathan
Ex-employee
Manuel Jesudasan & Associates

அகவை அறுபதைத் தொட்ட ஆலமர மனுவல் வாழ்க

முடிசூடிய மன்னனுக்கு மீண்டும் ஒரு மகுட விழா
எங்கள் மனுவலுக்கு மகத்தான மணி விழா
தமிழ் உலகு முழுமையாய் அறிந்த தங்கமகன்
கலையே என் மூச்சு என்ற தாகம் கொண்டோன்
சட்டத்துறை இவருக்கு இட்ட வழி இன்று
சர்வதேசம் நாடி நிற்கும் தொழில் வல்லான்
வெற்றிகளே ஈட்ட வென்னும் வேகம் கொண்டோன்
அதற்காய் இதயசுத்தம் என்றும் பேணும் பண்பாளன்

வீரம் விளையும் யாழ் மண்ணில்
விளைந்த மனுவல் பெருந்தகையாம்
ஈரம் கொண்ட நல்நெஞ்சன்
ஈகைக் குணத்தில் தமிழ் வள்ளல்
தாரம் பிள்ளை சுற்றமுடன் தமிழ்த்
தாகம் தீர்க்கும் சட்ட தரணியிவர்
வேரில் பழுத்த தேன் பலாபோல்
விரி ஆல் மரமே வாழியவே

இதயம் நிறைந்த தமிழ் அன்பு
எவரும் போற்றும் உயர் பண்பு
இதமாய்ப் பழகும் நட்பாளன்
ஈழக் கூத்தின் அடிநாதம்
புதுமை விரும்பும் பூங்காவே
புயலாய் சீறி பணி செய்தும்
உதய ஞாயிறாய் தினம் வாழ
உதயன் லோகன் வாழ்த்துகின்றேன்

என்றும் அன்புடன்

ஆர். என். லோகேந்திரலிங்கம்

பிரதம ஆசிரியர் – உதயன்
தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

ஆளுமை, வசீகரம், நேசிப்பு

வாழ்க்கையில் நேரடியான குடும்ப உறவுகளைவிட, சமூக உறவுகளில் தமிழ்ச் சமூகத்தை நேசிக்கின்ற சில நல்ல இதயங்கள், எங்களுக்குத் தெரியாமலேயே இதயங்களுக்குள் இறங்கி, தங்களுக்கான சிம்மாசனத்தைப்போட்டு எங்கள் இதயத்துக்குள் எங்களுக்குத் தெரியாமலே உட்கார்ந்து விடுகிறார்கள். எனக்குள் அப்படி உட்கார்ந்தவர்களில் ஒருவர் மனுவேல் ஜேசுதாசன் அவர்கள். அது அவரின் ஆளுமையா!, அல்லது அவரின் வசீகரமா! அல்லது அவரின் நேசிப்பா! அல்லது எல்லாவற்றையும் குழைத்துப்பின்னுகின்ற அவரின் அன்பு வலைப்பின்னலா! இன்னும் அறியாமல், இனியும் அறியாமல் இருக்கப்போகும் விடயமது! நிற்க.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பாக, எனது உறவினர் ஒருவருக்காக, ரொறொன்ரோவில் கனேடியத் தமிழர்களின் அகதி வழக்கு சம்பந்தமாக இலங்கைச் சட்டத்தரணி திரு மனுவல் ஜேசுதாசனை சந்திப்பதற்காகப் போயிருந்தேன். காத்திருப்புகளின் பின் என்னையும் என்னோடு வந்த என் உறவினரையும் அழைத்துப் பேசினார். அப்பொழுதெல்லாம் அகதி வழக்கு எழுதிக் கொடுத்து கனேடியச் சட்டத்தரணிகளோடு எங்களைக் கலந்துரையாட வைத்து அகதிவழக்கை வழிநடத்தும் இவர்கள் அகதியாய் வந்த எங்களுக்கு கிட்டத்தட்ட ஒரு காவல்தெய்வம் மாதிரித்தான். அன்றைய தினம் அவர் எங்கள் மேல் என்று சொல்வதைவிட எங்கள் சமூகத்தின் மேல் காட்டிய கரிசனை கனேடியச்சட்டத்தரணியாக வந்தபின்னும் இன்னும் தொடர்வது கண்டு நான் வியப்பதுண்டு.

இன்னும் இளைஞராகவே மனுவல் ஜேசுதாசன் இருப்பதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அவர்களை நன்கு அறிந்தவர்கள் கள்ளங் கபடமற்ற எதையும் வெளிப்படையாகவே பேசும் சுபாவம்தான் காரணம் என்பதை நன்கு அறிவார்கள்... திறந்த புத்தகமாக தனது வாழ்க்கையை வைத்திருப்பதனால்தான் ஒருவருக்கும் தெரியாத ஒன்றை என்னால் எழுதவோ சொல்லவோ முடியாமல் என்னுடைய ஆற்றாமையைக் காட்டுகிறது அவரின் வாழ்க்கை.

கொஞ்சக் காலத்திற்கு முன்பாக மனுவல் ஜேசுதாசன் அவர்கள் எழுதிய பதினாறு வயதினிலே சிறுகதை தொகுப்பினை விமானத்தில் வாசித்துக்கொண்டு இலண்டன் சென்றேன். அப்பப்பா! உண்மையில் விமர்சனம் செய்வதற்கு அப்பாற்பட்டு அவர் சமூகத்தை அல்லும் பகலும் வாசித்து நேசித்து வைத்திருப்பதை அந்த எழுத்துக்கள் கனேடியத் தமிழர்களின் வாழ்க்கையை வடிவமைத்துக் காட்டுகின்றன. விமானத்தை விட்டு இறங்கியதும் முதல் வேலையாக தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

ஒன்றுமே தெரியாத பாமரனைப்போல் விமர்சனத்தைக் கேட்டார்! திரும்பத் திரும்ப வாசித்தேன், பல இடங்களில் கண்கள் பனித்தன. தொழில் ரீதியாக, சட்டத்தரணியாக கடமையாற்றும் ஒருவர் சமூகரீதியாக எவ்வளவு உடைந்து போய், தமிழ்க் குடும்பங்களின் நோவுகளைத் தினமும் பார்த்து நொந்து போய் எழுதுகிறார். சமூக அக்கறை இல்லாத எந்தக் கற்பனைவாதியாலும, எழுத்தாளனாலும் அந்த எழுத்துக்களை எழுதவே முடியாது. அதை எழுதவதற்கு இதயத்துக்குள ஈரமிரக்க வேண்டும், மனதுக்குள் மயிலிறகு இருக்க வேண்டும். சமூகத்தை வியாபாரம் இல்லாமல் நேசிக்கத்தெரிய வேண்டும்.

கனேடியத்தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானலைகளில் அலாரம் அடிக்காத ஞாயிறுகளின் காலைகளை தன்னிச்சையாகத் தமிழனை எழுப்பிய காலைக் கலந்துரையாடல்களைக் களைகட்ட வைத்த பெருமை மனுவல் ஜேசுதாசன் அவர்களைத்தான் சேரும். தனக்கான கருத்தை தனக்கும், தளத்துக்கான கருத்தை தளத்துக்கும், சமூகத்துக்கான கருத்தை சமூகத்துக்கும் வெவ்வேறுபடுத்தி விதைக்கின்ற வானொலி விவசாயியை, எங்கள் வான் பரப்பில் இவரிடம் நான் கண்டேன்.

இன்று வரை நானும் இவருக்கு நேயராகிவிட்டேன். பல்வேறு ஆற்றல் மிக்க ஒருவர் ஒன்றும் தெரியாத ஒரு அப்பாவியைப் போல் கற்றவனுடனும் கல்லாதவனுடனும், ஏழையுடனும் பணக்காரனுடனும் பழகுவது புலம்பெயர் நாடுகளில் புதினம். சிலபேரிடம் சிலவிடயம் கற்கலாம், பலபேரிடம் பலவிடயம் கற்கலாம், ஆனால் எல்லாவிடயமும் ஒருவரிடம் கற்பதற்கு எம்மிடம் நிறையப்பேர் இல்லை.

ஒரு குடும்பத்திலிருந்து ஒரு சமூகம்வரை வளர்வதற்கும் வாழ்வதற்கும் கற்றுக்கொள்வதற்கு மனுவல் ஜேசுதாசன் அவர்களிடம் நிறையவே இருக்கிறது.
வாழ்க வளமுடன்.

என்றும் அன்புடன் உங்களை நேசிக்கும்
இளயபாரதி.....

சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசனின் மணிவிழாவில் வழங்கிய வாழ்த்துப்பா

மனுவல் யேசு தாசனின் மாசறு
மணிவிழாக் காண்கையிலே!
இனமாய் யேசுவை ஏற்றவர் வாழ்வது
உயர்ச்சியே உலகினிலே!
சனமே காக்கும் சட்டத் தரணியாய்
வளர்கிறார் வாழ்வினிலே!
மனமாய் நிறைவாய் மணிவிழாக் காண்பவர்
வாழிய வளத்துடனனே!

பிதாவுடன் தாயார் பிரகாசி அம்மா
மாதாவின் பக்தியையே
ஆதனமாக ஆக அருமைத் தம்பி
ஆசு தாசனும்மே
வேத றெஜினா விளங்கும் தவமலர்
ஆகிய சகோதரியே
சாதனை படைக்க சாத்விக யேசு
தாசனுக் குதவினரே!

அன்னார் வாழ்வின் ஆக்க ஒளியே
மனைவி மொனிக்காவே!
அன்புப் பிள்ளைகள் அஜந்தா அஜித்தா
அனீத்தா ஆகியோரே!
வேண்டும் மருத்துவம் விளங்கும் சட்டம்
நிதியை விரும்பினரே
எண்ணம் போல இயேசு தாசனே
கல்வியில் உயர்த்தினாரே!

யேசு தாசனின் யெயமாம் வாழ்விலே
முயற்சி முத்தாரமே
ஆசை கொண்டு அரணாம் கல்வியில்
ஆக்கம் கண்டனரே
தேசம் புகழும் சட்டம் பயின்று
நீதிவான் ஆனாரே
தாசன் தொழிலைத் தெய்வமாய் மதித்துத்
தரணியில் உயர்கிறாரே

நாலும் தெரிந்த நல்யேசு தாசன்
ஞாலத்தில் வளர்ந்திடுக!
மேலும் மகவுகள் மேன்மைச் சுற்றம்
தழுவி வளர்ந்திடுக!
பாலும் தேன்போல் பாங்காய்த் துணையுடன்
பாரில் ஓங்கிடுக!
ஞாலம் புகழும் நல்யேசு ஆசிகள்
ஞான்றும் பெற்று நீரே!

நேரிசை வெண்பா

மனுவல் இயேசுதாசன் மாசறு வாழ்வில்
இனமாய் விழுமியங்கள் ஈட்டி மனநிறைவாய்
யேசுமரி சூசை யெயத்தாளைப் பற்றியே
நேசவாழ்வு பெற்றிடுக நீர்.

பண்டிதர் ம.செல்வராசா அலெக்சாந்தர்.

மனிதாபிமானம் நிறைந்த நெஞ்சத்தவர்

மனிதத்திற்கு மதிப்புக் கொடுக்கும் பண்பு சமூக சேவையாளர் மத்தியில் பரவலாகக் காணப்படும் ஒன்று. ஆனால் சட்டத்தரணிகள் கட்சிக்காக வாதாடும்போது மனிதாபிமானம் எந்தக் கட்சிக்கான அபிமானம் என்பதில் தங்கியுள்ளது.. எங்கள் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் மனிதத்திற்கு மதிப்புக் கொடுப்பவர். அவரது சாதாரணமான கிராமவாழ்க்கையின் அரவணைப்பும், வாழ்க்கைச்சூழலால் ஏற்பட்ட அனுபவமும் அகதிகளாக வந்த ஈழத் தமிழ் மக்களின் அவலங்களைச் செவிமடுத்து, அவர்கள் வாழ்வியலிலும் பங்கு கொண்ட நீண்ட அறிவு முதிர்வும், நாட்டுப்புறவியலின் விழுமியங்களை நுகர்ந்தும், முகந்தும் வந்த அனுபவ முதிர்வின் முத்திரைகளைத் தடம் பதித்து வாழ்வைப் பொருள் பொதிந்ததாக உணர்ந்து வாழ்ந்து காட்டும் போக்கும், வாழத்துடிக்கும் இளம் சமுதாயத்துக்கு வழிகாட்டியாகவும், சகலகலா வல்லுனராகவும், குடும்பம் என்ற அலகினை வழிநடத்தும் வண்டிலின் அச்சாணிகளில் சமானத்தை மொனிக்காவுடன் கைக்கொண்டு வாழ்க்கை வளம் பெருக்கி இனிய நட்புறவை நண்பரிடையே பேணிவரும் பண்பாளராகவும் வாழ்ந்து வருகிறார்.

ஜேசுதாசனின் வாழ்வில் புயல் வீசவில்லை. அவரது வாழ்வைச் சிக்கலானதாக உணரவைக்க முடியாதவாறு அவருக்கு அன்பும், வீரமும், துணிச்சலும், பண்பும், கண்ணியமும், கடமைப்பாடும் இனக்குழும வாழ்க்கைத் தத்துவமும் கொண்ட அவரது தந்தையார் மனுவல் ஆசீர்வாதம் உறுதுணையாக இருந்தார். அவரது அன்னையும் சகோதரிகளும் அவர்

சட்டத்தரணியாகப் படிப்பதற்கான உதவிகளைச் செய்தனர். சாதாரண தொழிலாளக் குடும்பத்தில் பிறந்தாலும் சகல வசதிகளுடனும் கொழும்புச் சட்டக்கல்லூரியில் கல்வி பயிலும் வாய்ப்பை பெற குடும்பம் எடுத்துக் கொண்ட உறுதிப்பாடு யேசுதாசனை மிடுக்குடன் வாழ்வில் கிடு கிடு என முன்னேற வைத்தது. லண்டனிலும் பின்னர் கனடாவின் அதி உயர்ந்த சட்டக்கலைக்கூடமான யோர்க் பல்கலைக் கழக ஒஸ்கூட் சட்டக்கல்லூரியிலும் சட்டங்கள் பயின்று சட்டத்தரணியானார்.

மனுவல் ஆசீர்வாதம் தனையனை 'அவையத்து முந்தி இருக்க' வைப்பது தனது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டமை மட்டுமன்றி நாவாந்துறைக் கோவில் அமைப்பதற்குத் தூணாக நின்று செயற்பட்டார் ஆசீர்வாதம். அவர் பணத்தைப் பெரிதாக மதிக்காது 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என்ற தமிழர் பண்பாட்டு ஊற்றில் நம்பிக்கை கொண்டவராக விளங்கியவர். கூட்டுத் தொழிலை ஊக்கியவர் தனது ஊரில் அபிமானம் கொண்டவர் சண்டைகளில் விலக்குப் பிடித்து சமாதானப்புறாவாக இருந்தவர் "அம்மையா 80 வயதிலும் எனக்கு விறகு கொத்தப் பழக்கியவர் என ஆசீர்வாதம் பற்றி அவரது பேரன் றெஜி மனுவேல்பிள்ளை கூறினார்." வீரம் அவரிடம் விளைந்திருந்தது. அதை யேசுதாசன் அதித ஆர்வத்துடன் கற்றுக்கொண்டார். எதற்கும் அஞ்சாது துணிச்சலுடன் எதையும் எதிர்கொள்ளும் போக்கு தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டவை. ஆசீர்வாதம் சமூகப் பிரக்ஞையுடன் நீண்டவாழ்வும் வாழ்ந்தவர். கிராம நூலகம் அமைக்க உதவினார்.

தந்தையிடம் ஜேசுதாசன் கற்றுக் கொண்ட மிக முக்கியமான கலை நாட்டுக்கூத்து. வடபகுதியில் நாவாந்துறை

நாட்டுக் கூத்துக்குப் பெயர் பெற்றது. நெருஞ்சிமுனையிலும், நாச்சிக்குடாவிலும், நாவாந்துறையிலும் இவர்களது நாட்டுக் கூத்துக்கள் மேடையேற்றம் காண்டவை. “கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்” என்பது போல கூத்து நிகழ்த்திய நாவாந்துறைக் கிராமம் முழுவதுமே கூத்துப் பாடல்களைக் பாடும் திறமை படைத்திருந்தது. யேசுதாசன் கூத்தில் சிறுவயதிலேயே கட்டியனாகப் பாகம் ஏற்றவர். தாளக்கட்டுக்குள் அடங்காத சக கட்டியனை அரங்கிலேயே சிறுவனாகவிருந்தும் எட்டி உதைத்தவர். கனடாவிலும் 'கண்ணகி' போன்ற கூத்துக்களை மேடை ஏற்ற உழைத்தவர். மரபு பேணும் கைங்கரியத்தை தன் குழந்தைகளுடாகவும் செய்து வருகிறார். அஜந்தாவிடம் காணப்படும் கலையார்வம் அதை நிரூபிக்கின்றது. உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்திற்கு 1974 ஆம் ஆண்டிலேயே பணம் சேர்த்தவர். உலகத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் கனடாக் கிளைக்காகப் பெரும் தொண்டாற்றி வருகின்றார் முதியோர் முரண்பாடுகளைக் களைந்து ஒன்றுபட உழைத்தவர்.

நாவாந்துறையின் முதற் சட்டத்தரணியாக விளங்கும் ஜேசதாசன் எழுதிய நாவலும் கதைகளும் அவரது தொழிலனுபவத்துக்கூடாக வெளிப்பட்ட வெளிப்பாடுகளாகும்.. மக்கள் அறிந்திருக்கவேண்டிய சட்ட நுட்பங்களைக் கதைகளுடாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஏற்றி வைக்கின்றார். அகதிகளாக வந்து அவலங்களைச் சுமக்கும் எங்கள் தமிழ் சகோதரர்கள் புதியநாட்டுச் சூழலால் ஏற்பட்ட வாழ்க்கை நெருக்கடிகளில் சிக்குண்டு பல அநர்த்தங்களை எதிர்நோக்குகின்றனர். அவற்றைப் பற்றிய சட்டச்சிக்கல்கள், சட்ட நுட்பங்களை அறியாது இடைத்தரகர்கள் மக்களை சட்டத்திலும்,

குடிவரவு தொடர்பான விடயங்களிலும் மாட்டிவிடுகின்றனர். இதுபற்றிய சட்ட நுட்பங்கள் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுப்பதில்லை. கதையூடாகத் தகவல் கொடுக்கும் போக்கை ஜேசுதாசன் கதைகளில் காணலாம்.

மொனிக்கா பெண் குழந்தைகளை வீரத்துடன் வளர்த்து வருவதை யாரும் அவதானிக்காது இருக்கமுடியாது. எதற்கும் "பெண்ணில்" குறை காண்பது நமது சமூகத்தில் அவதானிக்கிறோம். கட்டிடக் காட்டிற்குள் அடங்கி ஒடுங்கிய நிலையில் உணர்வுகளுடன் போராடி வாழும் வாழ்வைக் கதைகளுடாக தத்ரூபமாகக் காட்டுவதை உதாரணம் மூலம் காணலாம். "ஒரு நாளைக்கு பதினாறு மணித்தியாலம் வேலை பார்த்து மிகுதி நேரத்தை நித்திரையில் கழித்துவிடும் சுகுமாருடன் வாழ்ந்து வருகிறாள் என்று கூறுவதைவிட அவனுடன் ஒரே வீட்டில் குடியிருக்கிறாள் என்றுதான் கூறவேண்டும்." அவளது பாலியல் துன்பியலை உணர்வுக் குமுறல் நடத்தைச் சீர்கேடுகளாகக் கொண்டு பெண்ணை அவதூறு செய்யாது விட்டமை சட்டத்தரணிகள் மத்தியில் காணமுடியாத ஒன்று.

குடிவரவுப் பிரச்சினையை மையமாகக் கொண்ட வெளியீடுகளான "90 நாட்களுள்" "வயது பதினாறு" ஆகியவற்றிற்குக் கனடியச் சட்டங்களையே தலைப்புக்களாகத் தெரிவு செய்தமை சட்டத்தரணியின் தொழிலனுபவத்துடன் ஒன்றிணைந்த அழகியற் திறமையையும் காடடுகின்றது. தொண்ணூறுகளின் ஆரம்பகாலத்து குடிவரவுக் கொள்கையின்படி கனடாவில் உள்ள ஒரு நிரந்தர வதிவுரிமை உடையவர் துணை ஒன்றைத் தேடிப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக வரும்

துணையை 90 நாட்கள் ஆகுவதற்கு முன்பாக ஸ்பொன்ஸர் செய்தவர் விவாகம் செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடனான குடிவரவுச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதனால் தனியன்களாக வாழ்ந்த பல இளைஞர்கள் விவாகம் செய்யும் வாய்ப்பைப் பெற்றனர். வந்த யுவதிகள் சிலரோ சில சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தும் தற்கொலை செய்தும் உள்ளனர். எதிர்பார்ப்புக்களுடன் காதலனை அடைவதற்காகக் கனடாவுக்கு ஸ்பொன்ஸரில் வந்த பெண் சுமந்த அவலங்களையும் குடிவரவுச் சட்டச் சிக்கல்களையும் காட்டும் நாவலில் ஜேசுதாசன் பெண்களைக் குற்றவாளிகளாக்காது விட்டமை அவரது பெண்உரிமை பற்றிய சிந்தனைப் போக்கு காரணமாகவே எனலாம்.

பிள்ளைகளை கட்டுப்பாட்டுக்குட்படுத்தி தமிழ்ப்பண்பாட்டு பெறுமதிகளை ஊட்டி வளர்ப்பதற்கு முடியாதவராக தத்தளிக்கும் பெற்றோர் பலருக்கு "பதினாறு வயது" பெரும் சவாலாக இருக்கின்றது. கனடிய சட்டதிட்டப்படி பதினாறு வயது நிரம்பிய பிள்ளை பெற்றார் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டிய நிபந்தனை இல்லை. இந்தச் சட்டத்தை தங்கள் சுதந்திரத்திற்கானது எனப் பிள்ளைகள் சிலர் தவறான வழியில் செல்வதற்குத் துணையாகக் கொள்கின்றமை புலம்பெயர்ந்த பெற்றோருக்கான தலையிடியாகும். இத்தகைய சட்டதிட்டங்கள் புலம்பெயர்ந்து நாடிழந்து, வீடிழந்து, சுற்றமிழந்து, செய் தொழில், செல்வமிழந்து பிள்ளைகளுக்காகவே எல்லாவற்றையும் இழந்து, சுயமிழந்து குடியேறிய அகதிகளின் சுமைகளும், மனச் சுமைகளும் அவர்களை நடைப்பிணங்களாக்குகின்றன. மேலே பொம்பர் குண்டுபோடுவதைத் தாங்கலாம் ஆனால் பிள்ளைகள் செல்லாக் காசுகளாக அழிவதைப் பார்த்துச் சகிக்க முடியாதவர்களாக அவதியுறுவதை தனது

தொழிலில் பல தடவைகள் சந்தித்த ஜேசுதாசன் அவற்றை எழுத்தில் வடித்து புலம் பெயர் பெற்றாருக்கு மனிதாபிமான ஆதரவை வழங்குவதைக் காணமுடிகிறது.

ஜேசுதாசனின் அனுபவங்கள் காவியங்களாக வடிக்கப்படவேண்டியவை. கதை எழுதும் ஆசிரியரை விட சட்டத்தரணியாக வாழும் தமிழருக்கு ஏராளமான அவலச்சுவை நிரம்பிய நெஞ்சைத்தொடும் கதைகள் தெரியும். அவற்றைக் கதைவடிவினூடாக வழிநடத்தி பதிவுகளாக்கி அதில் மேலும் வெற்றி பெறவேண்டும். அதற்கான உதவிகள் இன்று கிடைப்பது போல என்றும் மொனிக்கா, அஜந்தா, அஜித்தா, அனித்தா என்ற குடும்ப அங்கத்தவரிடமும் நண்பர்களிடமும் பெறலாம். வளமாக நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழ் வாழ, தமிழ் மக்கள் வளர, நல்லதோர் உலகம் காண உங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் - பார்வதி கந்தசாமி

நிறைவான நித்தியன்

இன மத பேதமின்றி
இனிய புன் முறுவலுடன்
இதயம் நிறைந்த
வார்த்தை கொண்டு
இல்லம் தேடி வருபவரின்
குறை நிறை தீர்த்து நின்றவரே நீர்
இயேசுவின் தாசனோ....?
ஐயா..... ! மனுவேல்

கனடா வாழ் மக்களின்
கசப்பான நிஜங்களை
கற்றறிந்த சட்டமும்
கண்டறிந்த அனுபவமும்
வார்த்தையின் வலிமையாலும்
இனிப்பாக மாற்றிய
மனுவேல் ஐயா இவர்

அறுபதை அடைந்தாலும் - நீர்
ஆற்றிய பணிகள்
அதையும் தாண்டியதை
அறியாதவர் எவருமில்ல....
இனிய உம் பணி
இத்தேசமெங்கும் பாய்ந்தோட நல்
ஆசியுடன் ஆரோக்கியமும் - ஈந்திட
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்

கிளாடிஸ் கமிலஸ்
செயலாளர்
மனுவல் இயேசுதாசன் சட்ட அலுவலகம்.

என் இளமைப் பருவத்தில் அன்பர் ஆ. இஜேசுதாசன்

சில மாதங்களுக்கு முன், கனடா நாட்டில் இருந்து வந்த அன்பர் யேசுதாசனும் இலங்கையில் இருந்த வந்த நானும் இந்தியாவில் சென்னையில் எதிர்பாராத விதமாகச் சந்தித்தோம். அந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. பாசத்தோடு கட்டித் தழுவியதோடு மட்டுமல்லாமல், எமது வாழ்வின் இளமைப் பருவத்தினை இனிக்க, இனிக்க இடைவிடாமல் அசைபோட்டு, சில தினங்கள் நாம் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. நினைத்து நினைத்து மகிழும் அளவிற்கு அக்காலகட்டங்களில் எமது வாழ்வு, பின்னிப் பிணைந்து இன்று வரை அது மறக்க முடியாத வண்ணக் கோலமாக எம் மனதில் ஆழத்தில் பதிந்துள்ளது.

அன்பர் இயேசுதாசனின் 60 அகவையின் வைரவிழா ஆண்டில் அவரது வாழ்விற்கும் பணிக்கும் மணிமுடி சூட்டும் வைபவமாக அவரது வாழ்வுச் சேவையைப் பாராட்டுவதோடு, அவரால் மறக்க முடியாத சிலரின் எண்ணக் கருத்துக்களை புத்தக வடிவில் வெளியிடுவதனை நினைந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். ஒருவர் வாழுங்கால் அவரின் வாழ்வுச் சாதனை குறித்து வெளியிடப்படும் இத்தகைய வெளியீடுதான் ஒருவர் பெறும் நோபல் பரிசை விட மேலான மகிழ்ச்சிப் பரிசாக இருக்கும்.

அன்பிற்கும் பண்பிற்குமான பின்னணி.

இவரது பெற்றோரை நோக்கும்கால், இவரது தாயார் "பிரகாசியம்மா" தந்தை "ஆசீர்வாதம்" இருவரும் யாழ்நகரின் தென்மேற்கு பகுதியில் இயற்கை எழிலோடு அமைந்துள்ள நாவாந்துறை என்னும் ஊரில் இனிதே இல்லறம் நடத்திய தம்பதியர். தாயார் எப்போதும் அன்பால் பிரகாசிக்கும் முகத்தோடு அனைவரையும் அரவணைத்து அனைவரினதும் வாழ்விலும் ஒளி கொடுக்கும் பிரகாசமான அன்பு வாழ்வினை வாழ்ந்திருந்தார்.

தந்தை ஆசீர்வாதம் என்பவர் அந்த ஊரின் பன்முக வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றிய ஒருவராவார். ஆலய, சமூக, விளையாட்டு, கலைத்துறை எனும் பல்வேறு துறைகளின் சிறப்பான வளர்ச்சிக்கு இவரது பணியானது பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. இவர்கள் இருவரும் அனைவரும் போற்றும் எடுத்துக்காட்டான வாழ்வை வாழ்ந்ததோடு, இவர்களுடைய பிள்ளைகளையும் அவ்வாறே வளர்த்து சமுதாயத்திற்கும் இறைவனுக்கும் உகந்த பிள்ளைகளாக ஆக்கினார். இந்தப் பண்புகளின் பிரதிபலிப்பினை நாம் இன்று அன்பர் யேசுதாசனிடம் கண்டுணர முடிகின்றது. இவரது பண்புகள் அனைத்தையும் பகர நினைத்தால் இங்கே பக்கங்கள் பல பிடிக்கும் என்பதால் சில முக்கியமான குறிப்புக்களைப் பேருவகையுடன் வரைகின்றேன்.

கல்வி எம் கண்

சிறு வயதிலிருந்தே நன்றாக கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் ஆழமாக இருந்தது. இவர் எனக்கு நான்கு வயதுக்கு மூத்தவராக இருந்தாலும் எம்மோடு நண்பரைப் போன்றே பழகுவார். புனித பத்திரிசியார் கல்லூரியில் நாம் கல்வி கற்ற காலத்தில் ஊரிலிருந்து ஒன்றாகச் சென்று வருவதும், அங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் வேறுபல நிகழ்வுகளில் ஒன்றாகச் சென்று கலந்து கொண்ட காலங்கள் எமக்குள் ஒரு ஈடுபாடுடைய நட்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களையும் எவ்வாறு பொறுமையோடும் முழு ஆர்வத்தோடும் செயற்பட்டு வெற்றி காண வேண்டும் என்னும் பண்புகளையும் எம்முள் வளர்த்தன.

கல்வி கற்பதில் இவர் கொண்டிருந்த ஆர்வம் எம் எல்லோரிடமும் விளங்க வேண்டும் என வலியுறுத்துவார். சிறுவருக்கும் இளைஞருக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பார், இதனால் சமுதாய உயர்வுக்கு கல்விதான் கண்ணாகும் என்பதையும் எடுத்தியம்பினார்.

கலையில் ஈடுபாடு

இவர் சிறு வயது முதலே கலைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். எமது ஊரில் அப்போது நடந்தேறிய நாட்டுக் கூத்துக்களில் சிறுவயிதிலேயே நடித்து நற்பெயரும்

பெற்றார். அதிலிருந்து இவரது கலையார்வம் அதிகமாக வளர்ந்து வந்தது. கலைகளில் ஈடுபாடுள்ள அனைவருக்கும் ஊக்கமும் உற்சாகமும் கொடுப்பதோடு அவர்களோடு எப்போதும் துணை நின்று உழைத்து வந்தார். அது மட்டுமல்லாமல் நண்பர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடுகின்ற பல பொழுதுபோக்கு நேரங்களில் நாட்டுக்கூத்துப் பாடல்கள், பல உற்சாகப் பாடல்கள், ஆடல்கள் நிகழ்த்தி அனைவரையும குதூகலிக்கச் செய்வார். இவர் பல நாட்டுக் கூத்துக்களும் மேடை நாடகங்களும் அரங்கேற்றி வெற்றிகண்டார். அது மக்கள் மத்தியில் அதிகம் வளர வேண்டும் என்றும் ஆசித்து நிற்பவர்.

சமூக வளர்ச்சியில் பங்கு

எமது ஊரில் அன்பர் யேசுதாசனின் நேரடி சமூக மேம்பாட்டுக் காலம் 1960-1975 வரை என்று கூறலாம். இக்காலமானது எமது சமூகம் வளர்ந்தும் வளராத இன்னும் சொல்லப்போனால் வளரத் துடித்துக் கொண்டிருந்த காலமாக இருந்தது. நான் அவரோடு இணைந்து செயற்பட்ட காலம் குறிப்பாக 1967-1971ம் ஆண்டுவரை 5 ஆண்டு காலம். சமூகப் பெரியவர்கள் இளைஞர்கள் வழியாக சமூகம் மேலோங்க வேண்டும் என்னும் உணர்வையும் தங்களின் தியாக செயல்பாடுகளின் வழியாக வெளிப்படுத்திய காலம். ஊரில் எல்லாக் குடும்பங்களுமே ஒரு வீட்டில் வாழ்வது போன்ற ஒரு அன்பின் பிணைப்பைக் கொடுத்தகாலம்.

அன்பர் யேசுதாசனும் இன்னும் சில இளைஞர்களும் கல்வியிலும் இன்னும் பல்வேறு சமுதாய வளர்ச்சிப் பணித்திட்டங்களிலும் முன்னின்று செயல்பட்டனர். எதிர்ப்புக்கள் சில தோன்றிய போதும் ஒரே நோக்கு வாழ்வில் உயர்வு என்ற கொள்கையில் தாமும் வாழ்ந்து எமக்கும் வழி காட்டினார். அவரிடம் அவரே அறிந்தோ அறியாமலோ ஒரு தலைமைத்துவப் பண்பு (A Leadership Quality) மறைந்திருந்தது. அது தேவையான போது மட்டும் வெளிவரும்.

அவருடைய ஒரு சிறந்த குணம் என்னவென்றால், ஒருவர் வாழ்வில் உயர வேண்டும் எனும் எண்ணம் கொண்டிருந்தால், அவர்களுக்கு வாழ்வில் உயர வழிகாட்டி ஏணியாக உதவி செய்து

மகிழ்வது. இந்த அருமையான பண்பு அவரையும் வாழ்வில் உயர்நிலைக்கு கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் அவருடைய பிள்ளைகளும் வாழ்வாங்கு வாழ்ந்து சமுதாயத்தில் உயர வழி வகுத்தது. சில வேளைகளில் அவரையும் அவர் எடுக்கும் புதிய முயற்சிகளையும் புரிந்து கொள்வது மிகவும் கடினமான தொன்றாக இருக்கும். ஏனென்றால் பல முயற்சிகளில் கடினமாக உழைத்து அந்தக் காரியத்தினை செயல்படுத்தி வெற்றி காணும் வரை மற்றவரைப்பற்றி கவலையும் படமாட்டார், யாரையும் கஸ்டப்படுத்தவும் மாட்டார். இறுதியாக அவரது முயற்சியில் வெற்றி கண்ட பின்னர் தான் தனது நண்பர்களும் மற்றவரும் அதனைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துவார்.

நாம் சிறுவராக இருந்தபோது எம் குழுவினரை விளையாட்டுப் போட்டிகள் (Games, Sports), பொழுதுபோக்குச் சுற்றுலா (Picnic), கடல் குளிப்பு (sea bath), கிறிஸ்மஸ் விழா ஒன்றிப்பு (christama get together) போன்றவற்றில் ஈடுபடுத்தியதுடன் அவற்றின் மூலம் பல தலைமைத்துவ பயிற்சிகளைப் பெற வழிவகுத்தார். சிறுவர்களை, இளைஞரை பல்வேறு துறைகளிலே பயிற்றுவிற்பதனால், ஊக்கம் கொடுத்து உயர்த்தி விடுவதனால் வருங்கால சமுதாயம் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையை அடிக்கடி வெளிப்படுத்தினார்.

அன்றைய நாட்களிலேயே ஆங்கிலத்தில் நிறை அறிவு கொண்டிருந்ததனால் அது அவரது வாழ்வில் பல்வேறு முன்னேற்றப் பாதைகளுக்கு வித்திட்டது. நாவாந்துறைச் சமூகத்தில் முதல் சட்டத்தரணியாக பட்டம் பெற்று ஊருக்கு பெருமை சேர்த்தார். மேலும் ஊருக்கு பெருமை சேர்க்க படித்த, பண்பில் சிறந்த, ஊக்கம் நிறைந்த எப்போதும் ஊக்கத்தோடு செயல்படும் “மொனிக்கா” என்னும் இளம் பெண்ணை ஊரிலேயே திருமணம் செய்து இனிய குடும்பத்தினை அமைத்ததோடு அவரின் வழியாகவும் வாழ்வில் பல முன்னேற்றங்களைக் கண்டு பல சாதனைகளை நிலை நிறுத்தியது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அன்பர் யேசுதாசனின் தந்தையின் பெயரும் மொனிக்காவின் தந்தையின் பெயரும் ஒன்றுதான். “ஆசீர்வாதம்” இதன் அர்த்தம் இறைவனின் வாழ்த்து. எனவே இறைவனின்

வாழ்த்து இவர்களுக்கு என்றுமே உண்டு. கத்தோலிக்க திருச்சபையின் தற்போதைய தலைவரான திருத்தந்தையின் பெயரும் இதுவேயாகும்.

தமிழ் எழுத்தாளர்

அந்த நாட்களில் நானோ வேறு எவரோ அவரில் எண்ணிப் பார்க்காத ஒன்றுதான் அவர் இன்று ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர் என்பது. அவர் கனடா நாட்டிற்கு சென்ற பின் தனக்குள் மறைந்திருந்த எழுத்து திறமையை வெளிக்கொணர்ந்தார். வாழ்வின் அன்றாட நிகழ்வுகளையே மையமாகவும் பின்னணியாகவும் கொண்டு இன்றைய வாழ்வுப் பதிவுகளுக்கேற்ப சிறுகதைகள், நாவல்கள் அடங்கிய பல்வேறு புத்தகங்களை வெளியிட்டு வெற்றி கண்டுள்ளார். இதன் வழியாக இன்றைய தமிழ் உலகின் சிறந்த சிறுகதை, நாவல் எழுத்தாளர்களின் தர வரிசையில் இவரும் இணையப்பெறும் தகுதி உள்ளவராக இருக்கின்றார். இது இவரது முயற்சிக்கும் முயற்சியால் முடியாதது ஒன்றுமில்லை என்பதற்கும் உதாரணமாக அமைகிறது.

இறுதியாக, 1971ம் ஆண்டு எனது வாழ்வின் இளைமைப் பருவத்தினை எமது சமய சமூக சூழலில் இனிதே கழித்து எதிர்காலத்தில் எத்தகையதொரு பணியை ஏற்பது என்ற சிந்தனைகள் எழுந்தபோது, ஒரு மதகுருவாக வந்து இறை ஒன்றிப்பில் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் எண்ணம் எனக்குள் மேலோங்கியது. அவ்வேளை தனது சட்டத்தரணிப் படிப்பிலும் வாழ்வின் உயர்விலும் கருத்தாயிருந்த அன்பர் யேசுதாசனிடம் இது பற்றிக் கலந்துரையாடினேன். அவர் என்னைப் பல்வேறு வகையில் சோதித்தார். இறுதியாக இந்த இறை மனித சேவை இந்த மக்களுக்கும் நம் சமுதாயத்திற்கும் மிகவும் தேவை “வாழ்த்துக்கள்” என்று என்னை தட்டிக் கொடுத்தார்.

அதன் பின் 1972ல் நான் இலங்கையில் தோலகட்டி தவத்திரு வ.அ.தோமஸ் அ.ம.தி அடிகளார் நிறுவிய “செபமாலைத்தாசர்” துறவு சபையில் இணைந்து இந்தியாவில் துறவு, குருத்துவ படிப்புக்களையும் பயிற்சிகளையும் பெற்று 1980ல் எமது ஊரின் முதல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டபோது

அனைவரோடும் அன்பர் யேசுதாசன் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததோடு உனது தலைமைத்துவம் பலருக்கும் தேவையாக இருக்கும் என கட்டியம் கூறினார். இன்று இலங்கை இந்தியாவில் பரந்து விரிந்து பரவியுள்ள "செபமாலைத்தாசர்" துறவு சபையின் உயர் தலைவராக அடியேன் நான் பணியாற்ற பணிக்கப்பட்டிருக்கும்போது அன்பர் யேசுதாசனின் விடாமுயற்சித் தத்துவங்களைத் திருப்பிப் பார்க்கும் போதெல்லாம் ஒரு புதுப் பொலிவடைகிறேன். இவரின் இந்த விழாவையும் புத்தக வெளியீட்டையும் மேற்கொள்ளும் இவரின் நண்பர் வட்டத்தில் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உங்களோடு இணைந்து நானும் அன்பர் யேசுதாசனுக்கு இதயபூர்வ வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் செ.தா
இந்தியாவிலிருந்து வாழ்த்துகிறோம்.

நல் இதயம்

பணம், பொருள், செழிப்பு, வளம், ஷேமம் என்பதெல்லாம் ஒரு மனிதனின் வெளித்தோற்றத்தையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்தும் காரணிகள். நிறைவான வாழ்வு என்பது வெளித்தோற்றம் மட்டுமல்ல. அகநிலை சந்தோஷங்களைக் காண ஒருவருக்கு சமாதானம், மனநிறைவு, பரிசுத்தம், உண்மை, நற்குணம் முதலியன முக்கியம். இவையெல்லாவற்றுக்கும் அவசியமானது நல்லிதயம். அந்த நல்ல இதயம் கொண்டவர் அண்ணர் மனுவல் ஜேசுதாசன். மற்றவர்களின் உள்ளத்தில் என்ன இருக்கின்றது, அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்பதையெல்லாம் அவருடைய இதயம் தூய்மையாய் இருப்பதனால் அறிந்து கொண்டு உதவிகள் செய்து வருகின்றார்.

சுனாமி வந்தபோது அவர்களுக்கு பணம், பொருள் கொடுத்து உதவ பலர் இருந்தனர். ஆனல் சுனாமியின் மூலம் பாதிக்கப்பட்டவர்களை கனடாவுக்கு வந்து புது வாழ்க்கை ஒன்றை ஆரம்பிக்க குடிவரவு சட்டத்தில் இடமுண்டு என்று அறிந்து அதற்காக இரவும் பகலும் தனது அலுவலகத்தில் இருந்து அந்தக் காரியத்தில் முழுமூச்சாக செயல்பட்டார். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கு மேற்பட்டோர் அங்கே சென்று ஆலோசனைகள் பெறவும், பல வழிகளை அறிந்து செயல்படவும் ஒரு வழிகாட்டியாக கருவியாக விளங்கியவர். அதை அவரிடம் நீங்கள் பெரிய காரியம் செய்கிறீர்கள் என்று சொன்னால் அதற்கு அவரின் பதில் ‘‘நான் ஒரு துரும்பு’’ என்றே சொல்லுவார். அவ்வளவு தன்னடக்கம் நிறைந்தவர். மனித நேயம் பற்றிக் கதைப்போர் அதிகம். ஆனால் அந்த மனித நேயம் என்றால் என்ன என்று அவருடன் சிலநாட்கள் பழகினால் அதை அறிந்துகொள்ள முடியும். எல்லோரையும் ஒரே தராசில் வைத்து பார்ப்பவர், பெரியவர்-சிறியவர், ஏழை-பணக்காரன், படித்தவன்-படிக்காதவன் என்ற வேறுபாடு காட்டாதவர். சாதி, மதம், தொழில் இவற்றையெல்லாம் புறம்பே தள்ளிவிட்டு மனிதனை மனிதனாக நேசிக்கும் பண்பு கொண்ட நல் இதயம் கொண்டவர். அவரின் அகவை அறுபதில் அவரை நாம் வாழ்த்துவதோடு

மென்மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். அவர் மனைவி மற்றும் பிள்ளைகள் இவர்களுடன் அவர் வளர்க்கும் செல்லப்பிராணிகள் (இரு நாய்க்குட்டிகள்) எல்லோரும் ஒன்றாக இருப்பதால் அந்த இடம் ஓர் பல்கலைக்கழகம் தான். அவ்வாறான குடும்பத்தைக் கொடுத்த ஆண்டவனுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

அன்பின் ஊற்றுக்கு அகவை அறுபது. அவரைப் போல் வாழ்வதற்கு அனைவருக்கும் உகந்த ஆறு நல் மொழிகள்.

1. நல்லவைகளை ஓடவிடாமல் தடுக்க தயாராயிரு. தீயவைகளைத் தங்க விடாமல் துரத்து.
2. கடந்த கால தோல்விகளை நினைத்துக் கொண்டிராதே. ஆனாலும் அதன் காரணங்களை நினைவில் கொள்ள மறவாதே.
3. உன்னை நீயே உரிய முறையில் கண்டிகக் கற்றுக்கொள். ஊரார் உன்னைக் கண்டிக்கும் வேளை உருவாகாது.
4. இறைவனை மனிதன் பக்கம் போக வைப்பது அன்பே. மனிதனை இறைவன் பக்கம் வர வைப்பதும் அன்பே.
5. உன்னை நீ சரியான பாதையில் பார்க்கப் பழகிக் கொண்டால் ஊரார் உன்னிடம் சரியற்றவற்றை பார்க்க முடியாது.
6. முடியாதவை என்று முடிவு செய்த பல காரியங்கள் முடியாதவையல்ல. சிரமம்பட மனமில்லை என்பதே உண்மை.

வர்த்தக வசந்தம்
எஸ்.ஜே.சோதி

ஆசை மாமா

சரியாக ஆறு வருடங்களுக்கு முன் அமெரிக்காவிற்கான நிரந்தர வதிவிட அனுமதி பெற்ற போது, என் நினைவுக்கு வந்ததெல்லாம் ஒன்றே ஒன்று. அது பல வருடங்களுக்கு முன் என் பள்ளிக்கூட நாட்களில் எனக்குக் கிடைத்த தபால் அட்டைப்படம். அதன் ஒரு பக்கத்தில் நியூயோர்க் நகரிலிருக்கும் ஐ.நா.சபைக் கட்டிடத்தின் அழகான காட்சியும், மறுபக்கத்தில் அச்சுப்போன்று எழுதப்பட்ட கையெழுத்துச் செய்தியும் என் நினைவில் பளிச்சிட்டது. “நாங்கள் சீசெல்சிலிருந்து அமெரிக்காவுக்கு வந்திருக்கிறோம். நேற்று ஐ.நா அலுவலகத்தைப் பார்க்கச் சென்றோம். நீயும் ஒருநாள் இந்த இடத்தில் நிற்க வேண்டுமென்பது என் ஆசை” அன்புடன் ஆசைமாமா. என்னைப்பற்றி ஆசைமாமாவுக்கு இருந்த ஆசைகளில் ஒரு துளி இது.

இவரைப்பற்றி என்ன எழுதுவது? என் தாய்மாமன் என்பதைப் பற்றியா? ஓர் இலட்சியத் தம்பதியினரைப் பெற்றோராகப் பெற்ற அதிஷ்ரத்தைப் பற்றியா? துணிச்சல்காரர் மட்டுமல்ல துணி தெரிவதிலும் கெட்டிக்காரர் என நண்பர்களால் வர்ணிக்கப்பட்டதைப் பற்றியா? வெற்றுக் காசோலைகளுக்கு விலைபோகாத மனிதர் என்பதைப் பற்றியா? இவர் எனக்கு எழுதிய மடல்களிலிருந்து நான் பெற்ற அறிவைப் பற்றியா? துரு துருவெனப் பேசுவதிலும் ஆட்களைக் கவருவதிலுமுள்ள இவர் ஆற்றலைப் பற்றியா? தன் உறவினர், நண்பர் பற்றி இவரிடமிருந்த தெளிவான பார்வையைப் பற்றியா? கலைஞனாக, சமூகசேவையாளனாக, சட்டத்தரணியாக, கல்விமானாக இவரிடமிருந்து உதிரும் அநுபவ சிதறல்களைச் சேகரித்து என் மனதில் பதித்தவைகளைப் பற்றியா? எதை எழுதுவது... இது நீண்ட பெரும் பதிவாகப் போகும்... ஆயினும் சில.

ஆசீர்வாதம் பிரகாசி தம்பதிகள் பெற்ற ஒன்பதுகளில் தப்பிப் பிழைத்த நான்கில் தலைமகன். இவர் தந்தையார் “கட்டையர்” ஆசீர்வாதம் என அடைமொழியுடன் கூட அழைக்கப்பட்டாலும், சராசரியிலும் சற்று கூடிய உயரமானவர்.

ஆசீர்வாதத்தின் தந்தை மனுவல் கட்டையாக இருந்ததால், இவர் தந்தைக்கும் அந்த அடைமொழி தொற்றிக் கொண்டது. மனுவல் ஆசீர்வாதம் ஊரில் ஒரு மதிப்புக்குரிய மனிதர். சொந்தச் சகோதரங்களைக் கொண்டிரா விட்டாலும் “அண்ணன்” என பாசமாய் அழைக்கும் தம்பிகளையும், தங்கைகளையும் நான் பார்த்திருக்கிறேன். என் அம்மையா ஓர் கடின உழைப்பாளி. உருக்கேறிய உடல் அதற்குச் சான்று. அவர் உள்ளங்கைகளில் இரேகைகளே இல்லை. மரக்கோலில் தேய்ந்து அழிந்து போயின. அவர் இறப்பதற்கு முன் யாழ். போதனா வைத்திய சாலையில் அவருக்கு உதவியாக நின்றபோது அதனை நான் உணர்ந்து பிரமித்துப் போனேன். அவரைத் தூக்கி இருத்துவதற்கு அப்போ இளைஞனாக இருந்த என்னால் பிரயோகிக்கப்பட்ட எத்தனம் மிகப்பெரிது. அவர் ஓர் உறுதியான மனிதர். ஊரின் முன்னேறத்திலும், கோவில் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியவர். ஊரிலே கடமையாற்றிய பங்குத் தந்தையர்களுக்கு குறிப்பாக பிறநாட்டு மிசனரிகளுக்கு பக்க பலமாயிருந்து ஆலோசனைகள் வழங்குவதில் வல்லவர். இவர் ஓர் ஆர்ப்பாட்டமற்ற கலைஞர். நாட்டுக்கூத்து அண்ணாவி, ஊரில் கூத்து முறைசாரக் கல்வியில் முதன்மை இடம் வகித்தது. எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் கூட இவரின் நெறிபடுத்துதலில் பாடல்களை மனனம் செய்து செம்மையாகப் பாடுவர். பெரிய சண்டியர்கள் கூட கூத்து பழகும்போது இவரிடம் குனிந்து குட்டு வாங்குவார்கள். ஆனால், ஆசீர்வாதம் அண்ணன் மீது அவர்கள் கொண்ட மதிப்பு அபாரம். திரைக்குப் பின்னால் கையில் கூத்துப் பிரதியுடன் முழு இரவும் பம்பரமாய்ச் சுழருவார். கூத்து முடிந்ததும் மற்றக் கலைஞர்கள் மகிழ்ச்சியிலும் பெருமிதத்திலும் திகழ்வர். இவர் மட்டும் அடக்கமாய் வீடு போய்ச் சேர்வார். கூத்து இவரின் ஆன்ம உணவு. இப்படியான ஒரு பெருமனிதரைத் தந்தையாகப் பெற்றது ஆசைமாமா செய்த பெரும் பாக்கியம்.

ஆசைமாமாவின் தாயார் பிரகாசி, ஒரு தனித்துவமான சீவன். என் மனைவி அடிக்கடி குறிப்பிடுவது போல ஒரு வித்தியாசமான ஆன்மா. தன் குடும்பத்திலும் மற்றவர்களிலும் பெரும் பரிவு காட்டும் ஓர் அழகான அடக்கமான பிறவி. இவர் ஒரு கை வைத்திய நிபுணர் கூட. ஊரில் மட்டுமல்ல அயல்

கிராமங்களிலிருந்து கூட இவரிடம் வைத்தியத்திற்காக வந்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். செங்கண்மாரியும், சின்னமுத்தும், அம்மையும், வயிற்றுத் “தொங்கலும்”, உண்ணாக்கும் இவர் கைகளால் மறைந்து போகும். பிள்ளைக் கற்றாளையும், ஆனைக் கற்றாளையும், பிரண்டயும், இஞ்சியும் மஞ்சளும், தேனும் வசம்பும், நொச்சியும் மிளகும் இவர் மருந்துப் பெட்டியின் சில மூலக்கூறுகள்.

பால் மா பேணியில் உண்டியல் செய்து சிறுகச் சேர்த்து மகனைச் சான்றோர் ஆக்கிய தாய். அம்மம்மா தன் மகனின் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதில் உறுதியாயிருந்தார். ஆசைமாமாவின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் அவர் பெற்றோரின் மரபணுக்களிலிருந்து அவர் பெற்ற சிறப்பியல்புகள் பெரும்பங்காற்றியுள்ளதை நான் காண்கிறேன்.

சிறுவயதுகளிலிருந்தே நான் ஆசைமாமாவை உற்று அவதானித்து வந்திருக்கிறேன். நான் பிறந்த நாளிலிருந்து அவருடனே ஒன்றாக வளர்ந்தவன். நாங்கள் ஒரே குடும்பம். ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள். ஊரிலிருந்த இளைஞர்களிலிருந்து இவர் தனித்துவமானவராக இருந்ததை நான் அறிவேன். இவரின் பேச்சு, உடை, சுறுசுறுப்பு எல்லாவற்றிலும் ஒரு தனித்துவம் இருந்தது. இவர் ஆரம்பக் கல்வியைக் கொழும்புத்துறை பாடசாலையில் கற்றபோது இவர் ஆற்றலைக் கண்டுகொண்ட அலெக்ஸ்சாண்டர் மாஸ்ரர் இவரைச் சம்பத்திரிசியார் கல்லூயில் சேர்க்குமாறு அம்மையாவுக்கு வலியுறுத்திக் கூறினார். பின்னர் சம்பத்திரிசியார் கல்லூரியிலிருந்து கொழும்பிலிருந்த இளையவர் குருமடத்தில் (Juniorate) சேர்க்கப்பட்டார். சிறுவயதுகளிலிருந்து இவருக்கு ஆங்கில பாடத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் ஆர்வம் இருந்திருக்கிறது. இவர் வீட்டில் சேகரித்து வைத்திருந்த சேக்ஷ்பியரின் நாடகக் கதைகளையும், அவற்றில் இவர் கோடிட்டு வைத்திருந்த வசனங்களையும் நான் வாசித்திருக்கிறேன். தமிழ் போல ஆங்கில மொழி மீதான விருப்பு பின்னாளில் இவரின் கல்வி முயற்சிகளுக்கு உதவியிருக்குமென நம்புகிறேன். கல்வி கற்கும் முறைகள் தொடர்பாக இவருடன் பலதடவைகள் விவாதித்திருக்கிறேன். குறிப்பாக நான் உயர்தர வகுப்புப் படிக்கும்

போது, இவரின் ஆலோசனைகள் எனக்குப் பெரிதும் உதவியாயிருந்தன. ஒருமுறை நான் பௌதீக விஞ்ஞான பாடம் கடினமெனக் கூறியபோது என்னிடம் ஓர் சவால் விட்டார். "ஒரு வருடம் எனக்குத் தா. நான் நான்கு விஞ்ஞான பாடங்களிலும் அதி விசேட சித்திபெற்றுக் காட்டுகிறேன்" என சவால் விட்டார். ஒருபோதும் விஞ்ஞான பாடங்களைக் கற்கைநெறியாகக் கொள்ளாதவரால் எப்படி முடியுமென கேட்டேன். அவர் சொன்னார் "எனக்குப் படிக்கிற முறை தெரியும், என்ன பாடம் என்பது முக்கியமல்ல, என்னால் முடியும்" என்றார். இவர் வாழ்நாள் முழுவதும் கற்பவராக (life long learner) திகழ்வாரென நான் அப்போதே நம்பினேன்.

இதே காலங்களில் பட்டப்பின் முகாமைத்துவ கற்கை நெறியொன்றின் அனுமதிப் பரீட்சைக்காக இவர் தயார் செய்து கொண்டிருந்தார். என்னிடம் சொன்னார். நான் திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றி மட்டுமே வாசித்துக் கொண்டு செல்கிறேன். அது பற்றி வினாக்கள் வந்தால் நான் சித்தியடைவேன் அல்லாவிடின் தோல்விதான்". கொழும்பு சென்று பரீட்சை எழுதிவிட்டு வந்து வினாத்தாளை என்னிடம் காண்பித்தார். மூன்றாவது கட்டுரை வினாவாக திறந்த பொருளாதாரக் கொள்கையே இருந்தது. நான் மலைத்துப் போனேன். இவரிடம் கல்வியாற்றல் நிறையவே இருந்தது. அதனை மிகத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டார். இவர் புலம் பெயர்ந்து வெளிநாடு சென்றபோது இவரின் பிரிவினால் மிகவும் பாதிக்கப்பட்டவன் நானே. நண்பனை, ஆலோசகனை, வழிகாட்டியை இழந்து போனேன். அனுப்பிளவுச் சங்கிலித் தாங்கள் பற்றியும், பேணாட் ஷோ பற்றியும், பொல்பொட் ஆட்சிபற்றியும் பல தலைப்புக்களில் நாம் விவாதித்தவை இன்னும் பசுமரத்தாணிபோல பதிந்துள்ளன என்னுள். கமராவைக் கையாள்வது நல்ல படமொன்றைப் பிடிப்பது, ஸ்கூட்டர் ஓடுவது என பலவற்றை இவரிடமிருந்து கற்றிருக்கிறேன்.

ஆமைமாமாவிற்கு ஊர் பற்றியும், குறிப்பாக ஊரிலிருந்த இளைஞரின் முன்னேற்றம் பற்றியும் பெருத்த ஆசைகள் இருந்தன. சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது சில இளைஞர்களைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று இடங்களைக்

காட்டி, ஊருக்கு வெளியிலும் ஓர் பரந்த உலகம் உண்டு என உணர்த்த முற்பட்டார். அவர்களின் விளையாட்டு குறிப்பாக உதைபந்தாட்டத்தை முன்னேற்ற வேண்டும் என்பதில் பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டார். மூன்று அணிகளாக இளைஞர்களைப் பிரித்து உதைபந்தாட்டப் போட்டியொன்றை ஊரில் ஒழுங்கு செய்தார். அவர்களுக்கான விளையாட்டு உடைகள், பாதணிகளைக் கொழும்பிலிருந்து பெற்று போட்டிகளைச் சிறப்பாக ஒழுங்கு செய்தார். ஊர் முழுதுமல்ல, அயலூரவரும் கூடி அந்தப் போட்டிகளை ரசித்ததையும், அவற்றைப் பற்றி பேசியதையும் இன்னும் என் நினைவுளில் வைத்திருக்கிறேன். இவை நடந்தது எழுபதிகளில். இவரின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுப்பதிலும், சமூக உணர்வை மேம்படுத்துவதிலும் இவை பெரும்பங்காற்றின என நம்புகிறேன்.

ஆசைமாமா ஓர் கலைஞன், நடிகர், சிறுவயதுகளில் 'இம்மனவல்' நாட்டுக் கூத்தில் கட்டியகாரனாக நடித்தார் என அறிந்தேன். நடுச்சாமங்களில் இவர் வீடு திரும்பும் நாட்கள் என் நினைவிலுண்டு. அடுத்த நாள் காலை முன்னாளிரவில் அயலூர் நண்பருடன் போட்ட நாடகம் பற்றி வீட்டிலுள்ளோருக்குச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இவர் பெண் வேடங்களிலும் நடித்திருக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். இன்னும் இவர் கலை, இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவது அந்நாட்களின் அறுவடையாகும்.

ஆசைமாமா புலம் பெயர்ந்ததன் பின்னர் நாட்டு நிலமையால் எமக்குள்ளிருந்த தொடர்பாடல் வற்றிப்போயிற்று. ஆயினும் அவர் எனக்கு எழுதிய ஓர் நீண்ட மடல் என் பொக்கிசமாக பலகாலம் வைத்திருந்தேன். என் இடப்பெயர்வு எல்லாவற்றையும் காவு கொண்டு போயிற்று. அந்த நீண்ட மடலில் தனிமனித முன்னேற்றத்திற்கு அவசியமான பல கூறுகளை விபரித்திருந்தார். குறிப்பாக ஒருவரின் முன்னேற்றத்திற்கு தன் இலக்குப் பற்றிய கொழுந்து விட்டெரியும் ஆசை இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார். மனித மூளையின் பாகங்களையும் அவற்றின் உளவியற் தொழிற்பாடுகள் பற்றியும் விபரித்து நான் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிய ஆலோசனைகளையும்

எழுதியிருந்தார். இம்மடலை என் ஆசிரிய நண்பர் சிலருக்குக் காண்பித்தேன். அவர்களும் வியந்து போனார்கள். இம்மடலில் வாசித்த பகுதிகள் சிலவற்றை என் மாணவர்களுக்கும் கூறுவதுண்டு. ஆசைமாமாவிடம குழந்தைகளினதும், கட்டிளமைப் பருவத்தினரும் உளவியல் பற்றிய தெளிவான பார்வை அன்றே இருந்ததை நான் கண்டிருக்கிறேன். ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. ஊரில் ஒரு பின்னேரம் காற்றுவளவில் சில பெரியவர்கள் கடதாசி விளையாடிக் கொண்டிருந்தனர். சுற்றி பலர் இரசித்துக் கொண்டிருந்தனர். அந்த வழியால் போன சிறுவனான என்னிடம் ஒருவர் சிகரட் வாங்கிவருமாறு காசைத் தந்தார். நான் கடையில் சிகரட் வாங்கிய பின்பு அதன் வடிக்கட்டையிலிருந்த நறுமணம் என் விருப்பத் தன்மையைத் தூண்டியது. திரும்பிவரும் போது ஓர் குச்சொழுங்கையில் என்னுள் துணிச்சலைப் பிறப்பித்து ஓர் பரிசோதனையைச் செய்ய முயற்சித்தேன். குச்சொழுங்கையில் யாருமே இல்லை. பற்ற வைக்காத சிகரட்டை வாயில் வைத்து குனிந்து நின்று ஓர் இழுவை… நிமிர்கையில் முன்னால் ஓர் உருவம்… இதயம் ஒருகணம் உறைந்து மீண்டது. ஒரு இழுவைக்கு குதுகுமுறிய அடிவிழப் போகிறதென எதிர்பார்த்தேன். ஆனால் முன்னால் நின்ற ஆசைமாமா "டே உனக்கு வயசிருக்கு அவசரப்படாதே" எனக் கூறிச் சிரித்து விட்டுச் சென்றார். இதை இன்றும் அவரிடம் பார்க்கிறேன். அவர் பிள்ளைகளுக்கு அவர் வழங்கும் கட்டுப்பாடான சுதந்திரத்தை அவர் வீட்டுக்குச் செல்லும்போது அவதானித்திருக்கிறேன். ஆயினும் அவரிடம் அடிவாங்கியதையும் மறக்கவில்லை. எனக்கு ஏறக்குறைய ஆறு வயதிருக்கும். இவரின் க.பொ.த பரீட்சைக்கு முதல்நாள் இவரின் பெட்டியிலிருந்த தபால் அடையாள அட்டையில் ஒட்டப்பட்டிருந்த இவரின் படம் என்னைக் கவர்ந்தது. அதைப் பத்திரமாகப் பிரித்தெடுத்து என்னுடன் வைத்துக் கொண்டேன். இவர் வீடு திரும்பி வந்தபோது படம் கிழிக்கப்பட்ட அடையாள அட்டையைக் கண்டும், படம் என்னிடம் இருந்ததைக் கண்டும் கோபம் கொண்டு நல்ல அடி எனக்கு. அவருக்கு இன்றும் நினைவிருக்குமென நம்புகிறேன்.

ஆசைமாமா பற்றி அவரின் நண்பர்களின் சில குறிப்புகள் எனக்கு ஞாபகம் வருகிறது. இவர் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தது தொடர்பாக எமது வீட்டில் நடந்த

விருந்துபசாரத்தில் சக சட்டக்கல்லூரி நண்பரொருவர் உரையாற்றியது ஞாபகம் வருகிறது. "இவர் துணிச்சல்காரர் மட்டுமல்ல, துணி தெரிவதிலும் கெட்டிக்காரர்" எனக் குறிப்பிட்டார். ஆசைமாமா எப்போதும் தனது உடையிலும் தோற்றத்திலும் அக்கறை கொண்டவர்.

ஆசைமாமாவிடம் தன்மானம் என்பது பெரிதாயிருந்தது. பணக்கார நண்பரொருவர் ஏதோ ஒரு தேவைக்காக இவரிடம் வெற்றுக் காசோலையொன்றை கொடுத்து தேவையான பணத்தை எழுதி எடுக்குமாறு கூறினார். அதற்குப் பிரதியுபகாரமாக இவருக்கு விரும்புமற்ற ஏதோ ஒன்றை எதிர்பார்த்திருக்கிறார். ஆனால் இவரோ காசோலையைக் கிழித்து தன் நாட்குறிப்பு புத்தகத்துள் நினைவாக வைத்திருந்ததை நான் கண்டிருக்கிறேன். இதுபற்றி என் அம்மாவுக்கும் கூறியதை நான் கேட்டிருக்கிறேன். இவருக்கு தன்மானம் என்பது முக்கிய விடயம்.

புத்தங்கள் மீது இவருக்குப் பெருவிருப்பு. குறிப்பாக யாழ் பொது நூலகத்தில் இவர் வேலை செய்த காலத்தில் இவருக்கு இது ஏற்பட்டிருக்கக்கூடும். யாழ் பொது நூலகத்தில் வேலை செய்த காலத்தில் இவர் சட்டக் கல்லூரிக்குள் நுழைந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாக இருந்த காலத்தில் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது. அதிலிருந்தெழுந்த புகை மண்டலத்தை எங்கள் வீட்டிலிருந்த பார்த்துக் கொண்டிருந்தோம். இவர் கண்களில் ஈரம் பிறந்தது அப்போ. புத்தகங்கள் மட்டுல்ல என் அழகான கையெழுத்துக்களால் எழுதப்பட்ட பதிவுகளும் எரிந்துபோயினவே எனத் துக்கித்துப் போனார்.

ஆசைமாமாவின் சுபாவமும், என் சுபாவமும் சற்றே வேறுபட்டது. அவருடைய பார்வையும் என்னுடைய பார்வையும் பல தடவைகள் ஒத்துப்போகும், சில தடவைகள் விலகிப்போகும். ஆயினும் பலமாக தன் கருத்தை முன்வைக்கும் ஆற்றல் பெற்றவர். இது அவர் வாண்மைசார் திறனாக இருக்கலாம். நாங்கள் விடயங்களை விவாதிக்கும் போது தன் கருத்துக்கு என்னை இசையைச் செய்யும் ஆற்றல் அவரிடம் உண்டு. ஆயினும் முடிவெடுக்கும் சுதந்திரத்தை என்னிடமே விட்டுவிடுவார்.

ஆசைமாமா பற்றி எழுதும் போது அத்தை பற்றி எழுதுவது தவிர்க்க முடியாது. இவர்கள் திருமணமான காலத்திலிருந்து அத்தையுடன் நெருக்கமான நட்பு இருந்தது. நாங்கள் பலதும் பத்தும் பேசுவோம். பெண்கள் பற்றி இறுகிய பாரம்பரியமான எங்கள் சமூக சிந்தனை இளவயதில் என்னிடம் இருந்தது. அச்சிந்தனையில் தெளிவை ஏற்படுத்தியது அத்தை தான். பெண்களுக்கும் ஆற்றல் இருக்கிறது, உள்ளத்து உணர்வுகள் இருக்கிறது, சுதந்திர சிந்தனை இருக்கிறது என்பதை அவரிடமே தெரிந்து கொண்டேன். ஆசைமாமாவின் பிற்கால வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் பெருந்துணை அவர். ஆசைமாமா தன் பிள்ளைகளைப் பற்றியும் தெளிவான பார்வை கொண்டிருக்கிறார் என்பதை அவதானித்திருக்கிறேன். பிள்ளைகளும் அவரில் அளவற்ற பாசம் கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக, ஆசைமாமாவிற்கு தன்னைப் பற்றிய பார்வை தெளிவானது, இலக்குகள் தெளிவானது. அவர் சுகபலத்துடன் பல்லாண்டு வாழ்ந்து சமூகத்திற்குச் சேவைசெய்ய வாழ்த்துகிறேன்

மருமகன்
பீற்றர் லெயோனாட் மனுவல்பிள்ளை
B.sc (Hons) Dip.in.Ed. Msc, [illegible]
Horseheads, New York U.S.A

அங்கிள் யேசுதாசன்

எமது ஊரில் எனது வயதை ஒத்தவர்கள் திரு மனுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன் அவர்ளை அங்கிள் என்றுதான் அழைப்பார்கள். என்னில் அங்கிளும் அவரில் நானும் அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருக்கின்றோம். சிறுவயதில் உதைபந்தாட்டத்தில் எனக்கு இருந்த ஆர்வத்தை கண்டது அவர் என்னில் விசேட அக்கறை காட்டுவதற்கு காரணமாக இருக்க வேண்டும். அவர் காட்டிய வழிகாட்டல் என்னை பாடசாலை அளவிலும் அதை தொடர்ந்து அகில இலங்கை மட்டத்திலும் பெயர் அறியச் செய்தது. நான் பங்கேற்றும் உதைபந்தாட்ட போட்டிகளில் சில வேளைகளில் அங்கிளின் எதிர்பார்ப்புக்கு குறைவாக விளையாடிய தருணங்களில் அவரது மைத்துனரும் எனது தந்தையுமான பாலசிங்கம் அவர்களும் அவரது சகோதரர் வீரசிங்கம் அவர்களும் விளையாட்டு நுணக்கங்களை சுட்டிக்காட்டுவார்கள். அப்பொழுதெல்லாம் எனக்கு ஒருவித உற்சாகமும் உந்தலும் ஏற்படும்.

சிறுவர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு காலணி, பந்து முதலியவற்றைத் தன் சொந்தப் பணத்தில் வாங்கி ஊக்குவித்தவர். அவர் வாங்கிக் கொடுத்த உதைபந்தாட்ட காலணியே நான் முதலில் அணிந்து விளையாடியது, அதை நினைக்கும் பொழுது என் மனம் அவரை நன்றியுடன் நினைக்கின்றது. கொழும்பில் காலணி வாங்குவதற்காக பேப்பரில் என் பாதத்தைக் கைகளால் பென்சில் கொண்டு வரைந்ததை நினைக்கிறேன்.

சிறுவர்களை மூன்று கழகங்களாகப் பிரித்து எமது ஊரில் நடாத்திய உதைபந்தாட்ட போட்டி எமது ஊர்மக்களை மட்டுமன்றி அயல் ஊர்களையும் எமது கிராமத்திற்கு பார்வையாளர்களாக அழைத்தமை, அவரது தலைமைத்துவ ஆளுமையையும் சிறார்களை அவர் ஒருங்கிணைத்து நல்வழி நடத்தும் சிறப்பபினையும் எடுத்துக் காட்டுகின்றது.

அந்த உதைபந்தாட்ட போட்டியில் நான் கப்டனாக இருந்த ஏழாம் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று எமது பங்குத் தந்தையின் கைகளால் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது தான் நான் முதல் தடவையாக பெற்ற வெள்ளிக் கிண்ணம். இது என் மனதை விட்டு என்றும் அகலா. மற்றொரு என் மனதை விட்டு அகலாத இளமைக்கால அனுபவம் அங்கிள் எனக்குக் கொடுத்தது. நான் பன்னிரண்டு வயதில் முதல் முதலாக கொழும்பு சென்றேன். அப்பொழுது அங்கிள் சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். அவர் என்னையும் அப்பொழுது விளையாட்டில் அக்கறை கொண்டிருந்த மற்றொரு சிறுவனையும் கொழும்புக்கு அழைத்துச் சென்று தனது விடுதியில் தங்க வைத்து கொழும்பு மாநகரின் பிரசித்தி பெற்ற முக்கிய இடங்களைக் காண்பித்தார். சிலிங்கோ ஹவுஸ், மவுண்லெவினியா கடற்கரை, கொழும்பு விமான நிலையம் என்பவற்றை முதல் முறையாக கண்டு பிரமிப்பு அடைந்தேன். அங்கிள் எனக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்பவர்.

அங்கிளின் அன்ரியின் அருமை மகள் அஜந்தாவின் நடனத்தில் ஆசைகொண்டு, நானும் எனது மகளுக்கு நடனம் கற்பித்து எனது மகளின் அரங்கேற்றத்திற்கு இவர்களை பிரதம விருந்தினராக லண்டனுக்கு அழைத்து சிறப்பித்தேன்.

இத்தகைய உயர்ந்த உள்ளம் படைத்த எனது அங்கிள் யேசுதாசனின் அகவை அறுபதை கனடாவில் பெரியோர்கள் நூல்வெளியிட்டுக் கொண்டாடுவதை நன்றி உணர்வோடு பார்க்கின்றேன். அவர்களையும் வாழ்த்துவதுடன் அங்கிளும் நீடூழி நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
பிரான்சிஸ்
இலண்டனிலிருந்து

மணிவிழாக் காணும் மைத்துனரை வாழ்த்துகிறோம்

நான் சிறுமியாக இருந்த பொழுது ஒரு நாள் எமது ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. எமது ஊரின் முதல் சட்டத்தரணிக்கு விழா. அன்றுதான் அவரை நான் முதலில் பார்த்தேன். அந்த பெருவிழா இன்றும் என் மனக்கண்முன் நிற்கிறது. அவர்தான் இன்று கனடாவில் பிரபலம் வாய்ந்த சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன். அப்பொழுது அவருக்கும் எனக்கும் பொதுவான சம்பந்தம் எதுவும் இருக்கவில்லை.

எனக்கு 12வயது இருக்கும் பொழுது எனது மூன்றாவது சகோதரிக்கு திருமணம் நடந்தது. அவரின் கணவர்தான் எமது ஊரின் முதலாவது சட்டத்தரணி. எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவிருந்தது. பெருமையாகவிருந்தது. எனது அக்கா அதிஷ்டசாலி என எண்ணினேன். அவர் எனது பெற்றோர் மேலும் எங்கள் மேலும் அன்பும் எமது நலனில் மிகவும் அக்கறையும் காட்டினார்.

திருமணமாகி சில மாதங்களில் தனது சட்டத்துறை தொழில் காரணமாக யாழ் நீதிமன்று அண்மையில் தனது இளம் மனைவியுடன் தமது வாழ்கையை ஆரம்பித்தார். அப்பொழுதுதான் நான் அவர்களின் குடும்பத்தில் ஒருத்தியாக உரிமைபெற்றேன். தனது முயற்சியால் என்னை யாழ் கன்னியர் மடத்தில் சேர்ப்பித்து கல்வி கற்க வாய்ப்பளித்தார். அன்றுதொட்டு இன்றுவரை எனது நலனில் அபார அக்கறை காட்டிவருகிறார். அவரின் விருப்பப்படிதான் எனது வாழ்கையும் அமைந்தது.

எனது மைத்துனரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம். பொறுமை, விட்டுக்கொடுக்கும் பக்குவம், விடாமுயற்சி, கடின உழைப்பு, பெரியோர் தொடக்கம் சிறியோர்வரை மதிப்பளித்து, அவர்கள் பேசுவதை அவதானமாக செவிசாய்ப்பது, எந்த விடயத்தை மேற்கொண்டாலும் அதை முழுமையாகவும் சிறப்பாகவும் செய்து முடிப்பது அவரது ஆளுமை. தன்நம்பிக்கை, மனஉறுதி, அவரிடம் அதிகமாகவே உள்ளது. தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி வாழ்கையில் நல்லதோர் நிலையை அடைந்துள்ளார்.

சிறார்களுடன் பழகும் விதம் சற்று வித்தியாசமாகவிருக்கும். அவர்களுடன் பேசி அவர்களின் விருப்பு வெறுப்பு, தேவைகளை அறிவதில் அதிக நேரம் செலவிடுவார். நல்லதை நினை நல்லது நடக்கும் என்பதை அவர்களுக்கு வலியுறுத்துவார். அவரின்

தாயாரின் நோயைக் குணப்படுத்தும் கைராசி அவரிடமிருந்தது. எனது குழந்தைகள் தொடக்கம் எனது சகோதர சகோதரிகளின் குழந்தைகள் வரை எனது மைத்துனரையும் எனது சகோதரியையும் டடி மம்மி என்றுதான் அழைப்பார்கள். இவர்களுடன் அவர்களின் வயதை ஒத்தவர் போன்று உரையாடி அவர்கள் விளையாடும் விளையாட்டுக்களை அவர்களுடன் சேர்ந்து விளையாடுவது இவருக்கு மிகவும் பிடித்தது. இவர்கள் வீட்டிற்கு போவதென்றால் குழந்தைகளுக்கு கொண்டாட்டம்.

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யவேண்டுமென நினைக்கிறாயோ அதை நீ மற்றவர்களுக்கு செய் என்பது கிறீஸ்துவின் வார்த்தை. இந்த வார்த்தைகளில் அபார நம்பிக்கை வைத்துள்ளார். நீ என்ன செய்கிறாயோ அது பன்மடங்காக உன்னை நாடி வரும் என்பதை அவர் தனது வானலை நிகழ்ச்சிகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதை நான் கேட்டிருக்கிறேன். அதை அவர் தன் வாழ்கையில் கடைப்பிடிப்பதைக் கண்டிருக்கிறேன். விருந்தோம்பல் அவரின் சிறப்பு. வீடு தேடி வருபர்களை இன்முகம் காட்டி உபசரிப்பது சாதாரணமாக நடைபெறும் விடயம். ஒரு கை செய்வதை மற்றக் கை அறியக்கூடாது என்பதை வலியுறுத்தி வாழ்ந்து காட்டுகிறார். உதவி என்று கேட்டு வந்தால் இல்லை என்று சொல்லாமல் கொடுப்பதை நாங்கள் அடிக்கடி காண்போம்.

“என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு” என்ற வள்ளுவரின் குறளுக்கமைய தன் வாழ்வில் தனக்கு சிறிதளவு உதவி செய்தவர்களைக் கூட என்றும் மறக்கமாட்டார். தனது தாய் தந்தையர், தனது தாயின் தாய் (ஆச்சி), சகோதரர், சகோதரர்கள் பற்றியும் என்றும் உயர்வாகப் பேசுவார். இவரது கவலை ஒன்று: தனது பெற்றோரின் கடைசி காலங்களில் அவர்களுடனிருந்து அவர்களுக்குப் பணிபுரியாததை தனது துர்ப்பாக்கியம் என்று அடிக்கடி கூறுவார்.
எனது சகோதரி எனது மைத்துனருக்கு ஏற்ற துணை, உற்ற நண்பர்கள். இந்த நல்ல உள்ளங்கள் அவர்களின் அன்புக் குழந்தைகளுடன் என்றும் நலமுடனும் வளமுடனும் தொடர்ந்து வாழ இறைவன் அருள் பாலிக்க. எனது குடும்பமும் எனது பெற்றோரும் சகோதர சகோதரிகளும் எமது மைத்துனரின் மணி விழா வேளை விசேடமாக வாழ்த்துகிறோம். இருக்கு மணி விழா எடுக்கும் உயர்ந்த உள்ளங்களை வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
கேட்றூட் ஆரோக்கியதாஸ்

மணிவிழா காணும் திரு மனுவல் ஜேசுதாசனுக்கு நல் வாழ்த்துக்கள்!

எங்கள் கிராமம் யாழ்ப்பாணத்திற்கு தென் மேற்கே அமைந்துள்ளது. இக்கிராமத்திற்கு மேற்கே வில்லுண்டிப் பிள்ளையார் கோவிலும், வடக்கே பொம்மை வெளியும், கிழக்கே பள்ளிவாசலும், மேற்கே கடல் ஏரியும் கொண்டு நெய்தல் சிறப்புக்களை பெற்றது. கப்பல் கட்டும் துறையாக விளங்கிய காரணத்தால் நாவாய்துறை என்ற காரணப்பெயரைக் கொண்டு இன்று திருபுபெற்று நாவாந்துறை எனப் பெயர் கொண்டுள்ளது.

எம் கிராமத்தின் சன சமூக நிலையத்தின் பெயர் புனித மரியாள் சன சமூக நிலையம் (St. Mary's Community Centre) இக்கிராமத்தின் வாலிபர்களின் அபார உழைப்பினால் இந்நிலையம் கால்பந்தாட்டத்தில் யாழ் பிரதேசப் போட்டிகளில் பல முறை முதன்மை விருதுகளைப் பெற்றுள்ளது. இவர்களுக்கெல்லாம் தோழோடு தோழ நின்று எல்லோரையும் ஒன்றிணைத்தவர்களில் ஒருவர் திரு. மனுவல் ஆசீர்வாதம்.

திரு. மனுவல் ஆசீர்வாதம் பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர். இளமைக காலத்தில் கால் பந்தாட்டத்திலும், கரபந்தாட்டத்திலும் பங்கு பற்றியவர். பின் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நெறியாளராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தவர். இவர் கால் பந்தாட்ட, கரபந்தாட்ட வலைகள் பின்னுவதில் யாழ் மட்டத்தில் பிரசித்தி பெற்றவர். அத்துடன் படகுக்கு பாய் வடிவமைத்துக் கொடுப்பதிலும் தேர்ச்சி பெற்றவர். இவரின் ஆலோசனையையும் சேவையையும் பெறுவதர்க்கு அயல் கடலோர கிராம மக்கள் இவரை நாடி நிற்பது குறிப்பிடத்தக்கது. இவர் யாழ் மட்டத்தில் மிக பிரபல்யமான தென்மோடி நாட்டுக்கூத்து அண்ணாவியார். பல படைப்புக்களை மேடையேற்றி எம் கிராமத்திற்கு பெரும் புகழை ஈட்டியவர். இவரது மனைவி பிரகாசி தனது தந்தையின் கைவைத்தியத்தை

அவரிடமிருந்து கற்று தானும் பலர் அறிந்த கைராசி கைவைத்தியராக பாராட்டுப்பெற்றவர். பிரகாசி அம்மா எல்லோருடனும் அன்பாகப் பேசி தன்னால் முடிந்தளவு அவர்களின் நோயைக் கண்டறிந்து தக்க வைத்தியமும் வளங்குவார். இதற்கு இவர் ஊதியம் எதுவும் வாங்கியதில்லை. மனித நேய சேவையாகவே ஆற்றிவந்தார்.

ஆசீர்வாதம் - பிரகாசியின் மூத்த புதல்வன்தான் இன்று நாம் விழா எடுக்கும் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன். தனது பெற்றோர்களின் ஆற்றல்களைப் பெற்றவர். தந்தையைப் போல் இவரும் ஒரு கலைஞனாகத் திகழ்கிறார். தன் புதல்விகளுடன் பல மேடைகளில் தோன்றி பலரின் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் பரிமளிக்கிறார். இவரின் எழுத்தின் சிறப்பு சட்டம் மக்கள் வாழ்வில் நாளாந்தம் ஏற்படுத்துகிற தாக்கங்களை மையமாக வைத்து புனைவது. இவர் சமூக சேவையிலும் முன்னணியில் நிற்கிறார். அண்மையில் நான் அங்கம் வகிக்கும் ஸ்காபொரோ முது தமிழர் அமைப்பின் ஆலோசகராக அதன் நலனைப் பேணிப் பாதுகாக்க தன் நேரத்தை செலவு செய்து தன் அன்னையைப் போன்று எதுவித பொருளாதார லாபத்தையும் எதிர்பார்க்காமல் இலவச சேவை வழங்கி எம் முதியோரின் அளவுகடந்த அன்பை சம்பாதித்துக் கொண்டார். கொடுப்பதிலும் இவர் வள்ளல். பிரபல எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் ஞாபகார்த்த விழாவுக்கு எங்கள் குழுவினர் இவரை நாடிய பொழுது நாங்கள் எதிர் பார்த்த தொகைக்கு மேலான தொகையைக் கொடுத்து எம்மை வியப்படைய செய்ததை இங்கு நான் குறிப்பிடத் தவறக்கூடாது.

ஜேசுதாசனின் வெற்றிக்குப் பின்னால் அவரது மனைவியும் அவரது பிள்ளைகளும் நின்று அவரது சிறப்புக்களுக்கு மெருகூட்டுகிறார்கள். கணவனைப் போல் மனைவியும், தந்தை தாயைப் போல் பிள்ளைகளும் எதிர்காலத்தில் நற்பண்புடன் புகழ் பூத்து திகழ்வார்கள் என்பது எனது அசையா நம்பிக்கை.

ஜேசுதாசன் எம் கிராமத்தின் முதல் சட்டத்தரணி. இதன் மூலம் எம் கிராமத்துக்கு பெருமை தேடிக்கொடுத்தவர். கனடாவிலும் இவரின் பன்முக ஆளுமையைக் கண்டு கௌரவங்கள் இவருக்கு வழங்கப்படுவது எமது கிராமத்திற்கும் எமக்கும் பெருமையையும் மகிழ்வையும் ஏற்படுத்துகிறது. கனடாவில் வாழும் அவரது அன்புள்ளங்கள் இணைந்து எம்மகனுக்கு மணிவிழா எடுப்பதைக் கண்டு எம் ஊர்மக்கள் சார்பில் நான் நன்றியுடன் அவர்களை வாழ்த்துகிறேன்.

மணிவிழா காணும் மனுவல் ஜேசுதாசன் தொடர்ந்து தன் பணிகளை சிறப்புடன் செய்யவும், மேலும் பல விழாக்கள் காணவும், அவர் நலனுடன் பல காலம் வாழவும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
சூசை மார்க்கு
கனடா

வாழ்த்துச் செய்தி

சட்டத்தரணி திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களுடன் 1995ல் இருந்து இன்றுவரை மிகவும் நெருக்கமாகப் பழகிவருகிறேன்.
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டை கனடாவில் மெற்றோ ரொரன்றோ கொன்வென்சன் சென்ரரில் 1996ம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25, 26 மிகச் சிறப்பாக நடைபெற்றமைக்கு, முக்கிய செயலாளராக இருந்து, திரு. இராஜ்குமாருடன் இணைந்து செயற்ப்பட்டவர். அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

இன்று அவரின் குடும்பமும், எனது குடும்பமும் மிகவும் அந்நியோன்னியமாக பழகி வருகிறோம். நான் அவரை ஒரு சிறந்த நண்பனாகவும், எழுத்தாளனாகவும், கலைஞனாகவும், செயல்வீரனாகவும், நம்பிக்கைக்குரியவராகவும், மனிதநேயம் படைத்தவராயும் பார்க்கின்றேன்.

அவர் இன்று 60வது அகவையைத் தாண்டியுள்ளார். இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, அவரின் குடும்பத்தை மேலும் சிறப்பித்து, மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்ற, எனது குடும்பத்தின் சார்பிலும், உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
சி.செல்லையா



தந்தையும் தாயும்



60வது திருமணநாளைக் கண்ட மாமா, மாமியுடன்



இளமைத் தோற்றம்



துணைவி மொனிக்காவின்
இளமைத் தோற்றம்



மனைவியும் மூத்தமகள் அஜந்தாவும்



முதலாவது திருவிருந்தின் போது



மகள்மார்
அஜந்தா, அனித்தா, அஜித்தா



தந்தையின் நினைவுநாளில்
தாயுடன்



மனைவி மக்களுடன்



சகோதர சகோதரிகளுடன்



மகளின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின் போது



வை.ரி.லிங்கம் ஷோவில் நண்பர் பாலாவுடன்



வெற்றிமணி சிவகுமாரின் பாராட்டு விழாவின் போது



கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுடன்



உதயன் விருது விழாவில்
தலைமையுரையின் போது



சட்டத்தரணியாக நியமனம்
பெற்றபோது



கனடாவில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் எடுத்தபோது



உதயன் விழாவில் மகள் அஜிந்தாவுடன்
இணைந்து நாட்டுக்கூத்து செய்யும்போது



இளம் கலைஞர் மன்றத்தினால்
பாராட்டப்படும் போது



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஊர்வலத்தின்போது



6வது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் புரவலர்களுடன்



உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் விருது வழங்கல் -1995



மாநாட்டில் பேராசிரியர் சிவத்தம்பியுடன்



தமிழர் தகவல் விருது பெறும்போது



தமிழர் தகவல் ஆசிரியருடன்



நண்பர் அ.முத்துலிங்கம் வாழ்த்தும் போது



தமிழ் முதியோர் விழாவில் மகள்மாருடன்
கலை நிகழ்ச்சியில் பங்குபற்றியபோது



கனடாவில் ஆங்கிலத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் மகள்



St.Patricks பழைய மாணவர் சங்க நிர்வாக குழுவின் தலைவர்



“காதோடு காதாக” புத்தக வெளியீட்டின் போது



அதிபரினால் கௌரவிக்கப்படும் போது



பேராசிரியர் உதயன் ஆசிரியரை வாழ்த்தும்போது



சேசெல்ஸ் நீதிஅரசர்களுடனும் சட்டத்தரணிகளுடனும்



சேசெல்ஸ் சட்டத்தரணியின் இல்லம்



சேசெல்ஸ் கிறிக்கெட் குழுவுடன்

மனுவல் ஜேசுதாசன் மணிவிழாக் குழுவினர்

1. திரு. பொ. கனகசபாபதி
2. கவிஞர் வி. கந்தவனம்
3. திரு. கதிர் துரைசிங்கம்
4. பேராசிரியர் இ. பாலசுந்தரம்
5. திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம்
6. திரு. எஸ். ஜே. சோதி
7. திரு. வே. இந்திரசிகாமணி

வாழ்க வளமுடன்



JJ Print 416.298.9322